Registered as a Newspaper in Srilanka

# முஸ்லிம் குரல்

صوت المسلم

Muslim Kural

මුස්ලිම් කුරල්

11 ஏப்ரல் 2003 - வெள்ளிக்கிழமை ☆ 08 - ஸபர் - 1424 ☆ சுவடு - 08. ☆ தருகை - 10 ரூபா

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உங்கள் கரங்களில்... வார இதழாக மக்கள் கருத்துக்களுடன்!

## இளம் பெண்ணின் தியாகம் ஆக்கிரமிப்பு படைகளை ஆட்டம் காண வைக்கிறது!



ஈராக்கில் இப்போது நடைபெற்றுவரும் ஆக்கிரமிப்பு யுத்தம். உலக வரலாறு இதுவரை கண்டிராத இரத்தமும் கண்ணீரும். அழிவுகளும் நிறைந்த துன்பவியல் வாழ்வாகும். மேலே உள்ள படத்தில் காணப்படும் விதாத் ஜெமீல் என்ற 13 வயது இளம் யுவதி ஆக்கிரமிப்பு படைகளுக்கெதிரான யுத்தத்தில் தன்னையே தற்கொலை குண்டுதாரியாக அர்ப்பணித்து ஆக்கிரமிப்பு படையை ஆட்டம் காண வைத்துவிட்டார். தொடரும் தற்கொலை தாக்குதலால் மிக மோசமாக மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் தடுமாறிக்கொண்டிருக்கிறது ஈராக் மண்ணில் உள்ள கூட்டுப்படைகள்.

இத்துணிச்சலான வீரத்தியாகத்தை மேற்கொள்வதற்கு முன் இந்த இளம் யுவதி இடது கையில் இயந்திரத்துப்பாக்கியை ஏந்திய வண்ணமும் வலது கையால் புனித அல்குர்ஆன் மீது சத்தியம் செய்தும் தனது தியாகத்தை புரிந்தார். ஈராக்கின் வட தெற்கில் உள்ள அமெரிக்க பாதுகாப்பு சோதனைச் சாவடி மீது தற்கொலைத் தாக்குதலை விதாத் ஜெமீல் கடந்த ஆறாம் திகதி மேற்கொண்டார். இத்தற்கொலைத் தாக்குதலின் அதிர்வு ஆக்கிரமிப்பு படையை பெருமளவு பின்னடைய வைத்திருக்கிறது.

அமெரிக்கா மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பு பயங்கரவாதத்திற்கு 62 ஆயிரம் பில்லியன் டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆக்கிரமிப்பு யுத்தம் தொடங்கப்பட்டு இன்றுடன் 23 நாட்கள் கடந்து விட்டன. ஆயிரக்கணக்கான ஈராக்கிய பொதுமக்களில் சிறுவர், பெண்கள், முதியோர் வரை கொல்லப்பட்டும் படுகாயமடைந்துமுள்ளனர். மருத்துவ வசதி, உணவு வசதிகள் முற்றாக மறுக்கப்பட்டுள்ள அப்பாவி ஈராக்கிய மக்களுக்கு தொடர்ந்தும் போராடுவதைத் தவிர வேறு எந்த வழியுமில்லை.





# ஈராக்கிய மக்கள் மீதான யுத்தம் ஆதிக்க அமெரிக்காவுக்கு பின்னடைவையும் தோல்வியையும் தரும் கசப்பான பாடமாகும்

ஈராக் மக்கள் மீது கூட்டுப் படையினர் தொடுத்திருக்கும் ஆக்கிரமிப்பு யுத்தம், அமெரிக்காவின் வெற்றி எதிர்பார்ப்புகளைத் தகாத் தெறிந்து இன்றுடன் 23 நாட்களாக நீண்டு கொண்டிருக்கின்றது. இலக்குத் தெரியாத பயணத்தில் அலைக்கழிந்து வெறுப்புடனும் கோபத்துடனும் புஷ் திரும்ப வேண்டி ஏற்படும் என்பதையே ஈராக் யுத்த அனுபவம் அமெரிக்க ஆதிக்க தரப்புக்கு உணர்த்தி நிற்கிறது.

இரண்டு வாரங்களுக்குள் ஈராக்கை முழுமையாக வெற்றி கொள்ள முடியும் என்றே புஷ்ஷுக்கு பெண்டகன் புலனாய்வு அதிகாரிகள் தகவல் வழங்கியிருந்தனர். ஆனால், சதாம் ஹுஸைனின் நேரடி வழிகாட்டலின் கீழ் செயற்படும் குடியரசுப் படையினரின் தியாகம் -ஈராக்கிய மக்களின் வீரம் என்பனவற்றை பெண்டகன் புலனாய்வு அதிகாரிகள் துல்லியமாக எடைபோடத் தவறிவிட்டனர். இதனால், ஏதாவதொரு முடிவை எட்டும் வரை போரைத் தொடர வேண்டிய கௌரவப் பிரச்சினை அமெரிக்காவுக்கு ஏற்பட்டிருக்கிறது.

தொழில் நுட்ப வல்லமையை இராணுவ செயற்பாடுகளில் பிரயோகிப்பதிலும், பயன்படுத்துவதிலும் உலகில் முதலாவது இடத்தில் இருக்கும் அமெரிக்காவை எதிர்த்து, பொருளாதாரத்தில் நலிவுற்று இருக்கும் ஈராக்கில் இன்று இடம்பெறும் யுத்தத்தில் யார் இறுதி வெற்றியை ஈட்டுவர் என்பதை எந்தவொரு இராணுவ ஆய்வாளராலும் கணிப்பிட்டுச் சொல்ல முடியாத சூழலே நிலவிக் கொண்டிருக்கிறது.

பிரமிக்க வைக்கும் அளவில் அமெரிக்காவின் படைபலம், உலக மகா யுத்தமொன்றில் ஈடுபடுவது போன்ற பரபரப்பில் இராணுவ தொழில் நுட்பப் பிரயோகங்கள், படையினரின் எண்ணிக்கை 280,000, நாற்பத்தைந்து உலக நாடுகளின் ஆதரவு, ஈராக்கின் எல்லை நாடுகளான கட்டார், சவூதி, குவைத் போன்ற நாடுகளில் இராணுவ கட்டளைத் தலைமையகங்களும், விநியோகத் தளங்களும், இவ்வாறான மொத்த பலத்தையும் பெற்றிருக்கும் கூட்டுப் படையினரால் – வெறும் 100,000 படையினர், உள்நாட்டில் குர்திஷ், ஷியா முஸ்லிம்களின் எதிர்ப்பு, பசி பட்டினியில் மக்கள், சுகாதார - நீர் – மின்சார வசதியின்மை, அண்டை நாடுகள் ஒத்துழையாமை, சர்வதேச பொருளாதாரத் தடை ஆகியவற்றுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் ஈராக்கை இன்னுமே வெற்றி கொள்ள முடியாமலிருக்கிறது ஆதிக்க அமெரிக்காவால்.

ஈராக் மக்களின் மகத்தான மனோவலிமைக்கு முன்னால் புறமுதுகுகாட்டி ஓடிக்கொண்டிருக்கும் கூட்டுப்படையினர் அப்பாவி மக்களை கொல்வதில் தங்களது வெறித்தனத்தை காட்டி வருகின்றனர். யுத்தம் ஒரு மாதத்தைத் தொட்டிருக்கும் நிலையில் கூட போர்க்களத்தில் இருந்து ஆய்வுகளை மேற்கொள்பவர்களால் இவ்யுத்தம் யாருக்கு வெற்றியையளிக்கும் என்பதைக் கணிப்பிட்டுக் கூற முடியாதிருக்கிறது.

ஒப்பீட்டளவில் அமெரிக்க கூட்டுப்படை மற்றும் ஈராக்கிய படைகளின் மொத்த இராணுவ பலத்தையும் 100 வீதம் என எடுத்துக் கொண்டால், இதில் கூட்டுப் படைகளின் பலம் 85 வீதமாக இருக்கிறது. மீதி 15 வீதம் தான் ஈராக்கின் படைபலமாகும். இக்கணக்கின்படி பார்த்தால் சிறுபிள்ளைகூடச் சொல்லிவிடும் அமெரிக்காதான் யுத்தத்தில் வெற்றி பெறும் என்று. அப்படியானால் ஏன் இந்த யுத்தம் ஒரு மாதத்தைத் தொட்டுத் தொடர வேண்டும்? அமெரிக்காவின் கணக்குப்படி இரண்டு வாரங்களுக்குள் ஏன் ஈராக், ஆக்கிரமிப்பு கூட்டுப்படைகளின் வசமாகவில்லை? ஏன் அமெரிக்காவும், பிரித்தானியாவும் உண்மையின் கண்களை மூடி, பொய்களால் தங்களுக்கு வெற்றி மாலைகளை தங்களது ஆதிக்க பிரச்சார ஊடகங்களினூடாக தொடர்ந்தும் சூடிக் கொண்டிருக்க வேண்டும்?

## அல்-ஜஸீரா தொலைக்காட்சி மீது அமெரிக்காவின் தாக்குதல்



ஈராக்கில் யுத்தச் செய்திகளைச் சேகரித்து 24 மணி நேர நேரடி ஒளிபரப்புச் செய்து வந்த அல்-ஜஸீரா தொலைக்காட்சியின் ஈராக் அலுவலகம் மீது திட்டமிட்ட தாக்குதலை கூட்டுப்படையினர் கடந்த 8ம் திகதி மேற்கொண்டனர். இத்தாக்குதலில் அல்-ஜஸீரா தொலைக்காட்சி செய்தியாளர் தாரிக் ஐயூப் கொல்லப்பட்டு மற்றொரு ஊடகவியலாளரான ஸுஹைர் அல் இராகி படுகாயங்களுக்குள்ளாகியிருக்கிறார். உலகில் 24 மணிநேர ஒளிபரப்புச் சேவைகளை மேற்கொள்ள அமெரிக்க பிரிட்டிஷ் தொலைக்காட்சி சேவைகள் இருக்கின்ற போது இவைகளின் திரிபுபடுத்தப்பட்ட பொய்யான செய்திகளை அம்பலப்படுத்துவதற்கு முஸ்லிம்களுக்கு இருக்கும் ஒரேயொரு முழுநாள் தொலைக்காட்சி, இணையச்சேவை அல்-ஜஸீராவாகும். செப்டெம்பர் 11 தாக்குதலின் பின் உலகப்பிரபல்யமான அல்-ஜஸீரா, ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா மேற்கொண்ட ஆதிக்க யுத்தத்தின் உண்மை நிகழ்வுகளை உலகுக்கு நேரடியாக தந்ததில் உலகப்புகழ்பெற்றது.

அமெரிக்கா தொடுத்திருக்கும் ஈராக்கிய மக்களுக்கெதிரான யுத்தத்தில் அப்பாவி பொது மக்கள் இலக்காக்கப்படுவதையும் கூட்டுப்படைகளின் இழப்புகள், பின்னடைவுகளையும் அல்-ஜஸீரா அம்பலப்படுத்தி வந்தது. யுத்தம் தொடங்கியதன் பின் பல முறை அமெரிக்க ஆதிக்கத்தரப்பால் அல்-ஜஸீரா எச்சரிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் ஜனநாயக மறுப்புக்கும் அழித்தொழிப்புக்கும் ஈராக் மக்கள் மட்டுமல்ல உலக மக்களின் மனச்சாட்சியான அல்-ஜஸீராவும் விதிவிலக்கல்ல.

இன்ஷா அல்லாஹ்!
10 வது இதழிலிருந்து..
பல்வர்ணத்துடன்
அதிக பக்கங்களுடன்
உங்கள் கரங்களில்!
நியாயமான அரசியல் கட்டுரைகள்!
வாசகர்களை அசத்தும்
சமூக பொருளாதார
பண்பாட்டு விமர்சனங்கள்
மாணவர் பகுதி -
பெண்கள் சிறப்புப் பகுதி
'லைட் ரீடிங்' - ஊர் உலாக்கள்
சிறுகதை, கவிதைகள்
உலக நடப்புகள்
வித்தியாசமான வடிவமைப்பில்
படிக்கத் தூண்டும் பத்திரிகையாக
நமது முஸ்லிம் குரல்!
எழுதுங்கள்! வாசியுங்கள்!!
சவால்களை எதிர்கொள்வோம்
நம்மை தயார்படுத்தி...

# பயமுறுத்தும் சந்திரிகா இந்திய விஜயம் முடிவடைந்த கையுடன் முக்கிய அரசியல் திருப்பங்கள்!

## * அமைச்சரவைக்கலைப்பு? * புதிய தேசிய அரசாங்கம் அமைத்தல்? * பாராளுமன்றத் தேர்தல்?



ஜனாதிபதி இறுதி முடிவு எடுப்பதற்கான காலம் நெருங்கி விட்டது போல் தெரிகிறது. ரணில் விக்கிரம சிங்கவின் அரசாங்கத்தை பயமுறுத்தி வந்த சந்திரிகா இப்போது செயலில் இறங்கி விட்டார். தனது அரசியல் செயற்பாடுகளுக்கு முழு ஆதரவினையும் ஆசீர்வாதத்தையும் இந்திய அரசாங்கத்திடமிருந்து பெறுவதற்கு தனது சகாக்கள் சகிதம் சந்திரிகா இந்தியாவுக்குச் சென்று திரும்பியுள்ளார். சந்திரிகாவின் எதிர்பாராத இந்த அதிரடி இந்திய விஜயம், ரணிலின் அரசாங்கத்தின் அடிவயிற்றில் புளியைக் கரைத்துள்ளது. அத்துடன் ஆளும் ஐக்கிய தேசிய முன்னணிக் கூட்டினுள்ளும் பெரும் சலசலப்பை ஏற்படுத்தி உள்ளது. சிங்கள – தமிழ் புத்தாண்டின் பின், நாட்டின் அரசியல் சூழல் வேறு திருப்பங்களுக்கு மாறும் எதிர்வு கூறலை ஆளும் தரப்பு இதுவரை மறுதலிக்கவில்லை!

கடந்த காலத்தில் அதிகம் தடுமாறி வந்த சந்திரிகா ஒழுங்குபடுத்தப்பட்ட ஒரு அரசியல் வியூகத்தை இப்போது வகுத்து விட்டார். முதலில் அமைச்சரவையைக் கலைப்பது, அதன் பின் புதிய அரசாங்கமொன்றை அமைப்பது, அதன் பின்னான 3 தொடக்கம் 6 மாதம் வரையான காலப்பகுதிக்குள் பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவது என்பதே அவரின் வேலைத்திட்டமாகும். அமைச்சரவையை கலைத்து புதிய அமைச்சரவையை உருவாக்கும் போது ஐக்கிய தேசிய முன்னணியில் இன்றுள்ள அமைச்சர்கள் பலரும் இடம்பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான பேச்சுவார்த்தைகள் ஆளும் தரப்புக்குள் ஏலவே நடைபெற்று வருகிறது.

சந்திரிகாவின் இவ் அரசியல் வேலைத் திட்டத்தை செவ்வனே நடைமுறைப்படுத்துவதற்கு தடையாகவுள்ள இரு முக்கிய சவால்களை கையாள்வதற்கான வியூகத்தையும் ஏலவே அவர் வகுக்கத் தொடங்கிவிட்டார். முதலாவது நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தை, இரண்டாவது ஜே.வி.பியுடனான அரசியல் கூட்டு என்பனவே அவரது செயற்பாட்டிற்கு சவாலான விடயங்களாக இன்று உள்ளன. நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக அண்மையில் நடைபெற்ற வெளிநாட்டு இராஜதந்திரிகளுடனான கலந்துரையாடலின் போது, நடைபெறும் பேச்சுவார்த்தையானது தனது அரசாங்க காலத்திலும் தொடரும் என்பதை மிக வெளிப்படையாக சந்திரிகா தெரிவித்துள்ளார். இவரின் இக்கூற்றானது ராஜதந்திரிகள் மட்டத்தில் எதிர்பாராத மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளதை உணரக் கூடியதாக உள்ளது.

சந்திரிகா – ஜே.வி.பிக் கூட்டுக்கான அரசியல் பேச்சுவார்த்தை இப்போது பெரும் முரண்பாட்டை எட்டிவிட்டது. இப்பிரதான முரண்பாடு தீர்க்கப்படாதவரை இக்கூட்டு முன்னணி உருவாவது காலம் தாழ்த்தப்பட்டே செல்லும். இவ்விரு அரசியல் தலைமைகளிடையேயும் பல சுற்று பேச்சுவார்த்தைகளின் பின்னும் தீர்க்கப்படாத பிரதான முரண்பாடாக அதிகாரப் பரவலாக்கலே உள்ளது. இது தொடர்பாக ஜே.வி.பி கடைப்பிடித்து வரும் சிங்களத் தீவிரவாதப் போக்கு சந்திரிகாவுக்கு உடன்பாடானதல்ல; ஏனெனில் ஜே.வி.பி சொல்வது போல் தேசிய இனங்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிக்காது ஒற்றையாட்சி அரசியல் அமைப்பின் கீழ் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்பதை சந்திரிகா நன்குணர்ந்துள்ளார்.

ஆகவே, ஜே.வி.பி.யின் இந்த விடாப்பிடியான போக்கின் காரணமாக தனக்கு வேண்டிய பாராளுமன்ற ஆதரவுப் பலத்தை நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் பெறுவதில் சந்திரிகாவுக்கு சாதகமில்லாத தன்மையே உள்ளது. ஆகவே ஜே.வி.பி.யுடனான கூட்டின் மூலமே ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை வீழ்த்துவதுடன் - எதிர்காலத்தில் பாராளுமன்றப் பலத்தையும் தக்கவைத்துக் கொள்ள முடியும்!

ஜே.வி.பியின் ஆதரவு தனக்கு கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கு இந்தியாவைவிட வேறு மார்க்கம் சந்திரிகாவுக்கு இன்று இல்லை. அந்த வகையில் ஜே.வி.பி.யை இந்தியாவின் ஊடாக நிர்ப்பந்திப்பதற்கும் - எதிர்கால நடவடிக்கைகள் குறித்த இறுதித் தீர்மானத்திற்கு வருவதற்குமே இன்றைய அரசியல் சூழலில் முக்கியத்துவமிக்க சந்திரிகாவின் இந்திய விஜயம் அமைந்துள்ளது.



முஸ்லிம்களின் தனித்தரப்பு தொடர்பாகவும் தனியலகு கோரிக்கை பற்றியும் இறுதித் தீர்மானத்தை பிரபாகரனிடமிருந்தே முஸ்லிம் காங்கிரஸ் எதிர்பார்த்துள்ளது.
–வீரகேசரி
07.04.2003

இலங்கை முஸ்லிம்களின் சொந்தக்குரல்! சுதந்திரக் குரல்! ஆதரவு தாருங்கள், வாங்கிப் படியுங்கள், எழுதுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க எதிர்ப்புப் பேரணிகளும் மூதூர் சம்பவப் பதிவுகளும்

அமெரிக்காவுக்கு எதிரான எதிர்பார்ப்பாட்டங்கள் முழு உலக அளவிலும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. இலங்கையிலும் பல்வேறு பிரதேசங்களில் வரலாறு காணாத ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் இடம்பெற்று வருகின்றன. கொழும்பில் பல்வேறு அரசியற் கட்சிகள் முஸ்லிம்களுடன் இணைந்து தங்கள் எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தி உள்ளன. ஜே.வி.பி.யின் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் அவர்களின் இரட்டை வேஷத்தைக் காட்டுவதாக அரசியல் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றது.

நாட்டின் முஸ்லிம் பிரதேசங்களிலும் பல்வேறு பேரணிகள் பாரிய அளவில் நடாத்தப்பட்டுள்ளமை பலரின் கவனத்தையும் பெற்றுள்ளன. ஆனால், கிழக்கிற்கு வெளியே நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள், கண்டனக் கூட்டங்கள் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கின்ற பல்வேறு சக்திகளையும் இணைத்து நடாத்தப்பட்டிருப்பது ஒரு வெற்றிகரமான அணுகலாகவே இருக்கிறது. கிழக்கில் இடம்பெற்ற பெரும்பாலான எதிர்ப்பு ஆர்ப்பாட்ட நடவடிக்கைகள் முஸ்லிம்களுக்குள்ளே நடைபெறுகின்ற ஒன்றாகவே முடிந்திருக்கின்றன. எம்மோடு கலந்து வாழ்கின்ற ஏனைய சமூகத்தினரிடத்தில் இது பற்றிய பிரக்ஞையை ஏற்படுத்துவதிலும் அவர்களை உள்வாங்குவதிலும் நாம் அதிக கரிசனை காட்டவில்லை என்றே தெரிகிறது.

அமெரிக்க எதிர்ப்பு விடயத்தில் புலிகளின் மௌனமும், அவர்களின் இயலாத தன்மையும் அவர்களை மீண்டுமொருமுறை அனைவரிடத்திலும் இனங்காட்டியிருக்கிறது.




தங்களை அமெரிக்காவின் பயங்கரவாத பட்டியலில் இருந்து நீக்க எடுக்கும் முயற்சிகளில் அமெரிக்காவை அனுசரித்துப் போதல் முக்கிய விடயமாக மாறியிருக்கிறது. ஜப்பானில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அன்டன் பாலசிங்கம் இது விடயத்தில் நிதானமாக நழுவியிருக்கிறார். தாங்கள் அமெரிக்காவின் Aggressionனை ஆதரிக்கவில்லைதான் என்று மேலோட்டமாகவும் சதாமின் Dictorship, Evil ஆட்சி என்பவற்றை ஏற்கவில்லை என்றும் தெளிவாகக் கூறியிருக்கிறார். புலிகளின் போராட்டம். அரசியல் இப்போது மூக்குடைக்கப்பட்டு வருவதால் இது பற்றி நாம் அதிகம் பேசத் தேவையில்லை. சமாதான ஒப்பந்தத்துடன் அவர்கள் எப்படி ஏகாதிபத்திய முதலாளித்துவ ஆளும் வர்க்கங்களின் கிளிப்பிள்ளைகள் ஆனார்கள் என்பதை நீங்கள் நன்கறிவீர்கள். வடக்கு கிழக்கில் குறைந்தது தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதியில் கூட ஓர் எதிர்ப்பு பேரணி அல்லது முஸ்லிம்களின் பேரணிகளுக்கு மானசீக ஆதரவு கூட இதுவரை காட்டவில்லை என்பது சோகமானது.

யாழ்பாணத்தில் இடம்பெற்ற எதிர்ப்பார்ப்பாட்டத்தில் தமிழ்த் தரப்பும் கலந்து கொண்டதாக சக்தி தொலைக்காட்சி செய்தி சொன்னது விதிவிலக்கான ஆறுதல்.

எது எவ்வாறு இருப்பினும் முஸ்லிம் ஊர்களில் முஸ்லிம் மக்கள் தங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வுகளை என்றுமில்லாதவாறு வெளிப்படுத்தி வருகின்றார்கள். கடந்த மூன்றாம் திகதி வியாழக்கிழமை மூதூர் முஸ்லிம்கள் மாபெரும் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள். மூதூரின் சகல பிரதேசத்து முஸ்லிம்களும் பெருமளவில் மூதூர் இறங்குதுறையடியில் கூடி அங்கிருந்து ஊர்வலமாக பிரதான வீதி, மார்க்கட் வீதி, நொக்ஸ் வீதி ஊடாக பொது மைதானத்தை வந்தடைந்து துஆ பிரார்த்தனையிலும் ஈடுபட்டார்கள். இது வரையில் இடம்பெற்ற எதிர்ப்புப் பேரணிகளில் இதுவே மிகப் பாரிய அளவில் ஒழுங்கு செய்யப்பட்ட ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஏனைய ஹர்த்தால், பேரணிகளுக்கு முன்மாதிரியாக இருக்கக் கூடிய வகையிலும் இப்பேரணி அமைந்திருந்தது. இது போன்றதொரு ஒற்றுமைப் பேரணி ஆர்ப்பாட்டம் மூதூர் மக்கள் சம்மந்தப்படுகிற அல்லது பொதுவான முஸ்லிம்கள் சம்மந்தப்படுகிற விடயங்களில் இடம் பெற வேண்டுமென்பது சாதாரண மக்களின் எதி

## மூதூரில் இரு முஸ்லிம்கள் கடத்தல்

மூதூரில் இப்பேரணி இடம்பெற்ற வேளை, இரண்டு குடும்பஸ்தர்கள் கடந்த 31 ஆம் திகதி முதல் புலிகளின் பகுதிகளுக்குச் சென்று காணாமல் போயுள்ளனர். இருவரையும் தேடும் பணியில் மிக மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். சில சக்திகள் இச்சம்பவத்தையும் பேரணியோடு இணைத்து விடுவார்களோ என்ற அச்சம் சிலருக்கு எழுந்திருந்தாலும் அப்படி நடக்காமல் இருந்தது பெரும் ஆறுதலானது.

நஹீம், ஜாபீர் என்ற இருவர் வியாபாரத்திற்காகச் சென்று இன்றுவரை (06.04.2003) திரும்பவில்லையென்பது இப்போது மூதூரில் பதட்டத்தை அதிகரித்துக் கொண்டிருக்கிற ஒரு செய்தியாகும். புலிகள் இதுவரை உத்தியோகபூர்வமாக எதனையும் அறிவிக்கவில்லை. ஆனால் பொலிசாருக்கு கிடைத்த தகவலின் படி இந்த இரண்டு முஸ்லிம்களும் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. இவர்களை விடுவிக்கும் முயற்சிகள் பல்வேறு மட்டங்களில் இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவ விடயத்திலுமோ, ஆர்ப்பாட்டப் பேரணி விடயத்திலுமோ மூதூர் பாராளுமன்ற பிரதிநிதி கலந்து கொள்ளவுமில்லை கரிசனை காட்டவுமில்லை என்பது இன்னொரு துயரமான விடயம்.


பிந்திய செய்திகள் (6 ஆம் திகதி மாலை ஏழு மணி)

மூதூர் சமது எழுதிய "கொட்டியாப்புற பற்று வரலாறு" எனும் சர்ச்சைகள் நிறைந்த நூல் வெளியீட்டுக்கு வருகை தந்த மூதூர் பாராளுமன்ற உறுப்பினர்களான கே.எம்.தௌபீக்கும், துரைரட்ணசிங்கமும் காணாமல் போனவர்களின் குடும்பத்தினரைப் பார்வையிட்டு சம்பவம் தொடர்பான விபரங்களை கேட்டறிந்துள்ளனர். துரைரட்ணசிங்கம் எம்.பி. இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் உரையாடுவதாக வாக்குறுதியளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று மாலை (சனிக்கிழமை) தோப்பூருக்கு அண்மைய உப்பூறல் - ஔ்ளக்கழி பகுதிக்கு இறால் வீச்சுக்காகச் சென்ற அல்லை நகர் வாசிகளான மு. அப்துல்லதீப், அ.ஐ.அலிமுஹம்மத், ச.முஹம்மத் அலி ஆகியோர் புலிகளால் கடுமையான தாக்குதல்களுக்குள்ளாகி மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் சென்ற பகுதி முன்னர் புலிகளால் தடைசெய்யப்பட்டிருந்ததென்றும் பின்னர் அவர்களே அனுமதியை வழங்கியிருக்கிறார்கள் என்றும் தெரியவருகிறது. மேற்படி நபர்கள் கரையையடைந்த வேளை அங்கு நின்ற மூன்று புலி உறுப்பினர்கள் "ஏன் இங்கு வந்தீர்கள்" என்று வினவியதாகவும் பின்னர் இவர்களை அழைத்துச் சென்று மேலும் பலருடன் சேர்ந்து "வயர்களால்" அடித்துக் காயப்படுத்தியதாகவும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அப்துல் லத்தீப் தெரிவித்தார்.

இவர்களை வைத்தியசலையில் வைத்து கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் பார்வையிட்டதுடன் வாக்கு மூலங்களையும் பெற்றுச் சென்றுள்ளனர்.

*-மஹல்லா வாசி, மூதூர்.*



## மக்களிடமிருந்து மனுக்கள்... நடவடிக்கைக்காக...

### 1000 ஏக்கர் நெல் வயல்கள் வெள்ளத்தினால் நீரில் மூழ்கி அழிந்து நஷ்டமடைந்த விவசாயிகளின் கண்ணீர் கதை

நத்தை ஆற்றுக்குரிய நீசேவேசன் காணியையும் முகத்துவாரத்திற்கு நீர் செல்லும் பாரிய வடிச்சல் ஓடையையும் மூடியவர்களான அக்கரைப்பற்று - 01, எம். இஸ்மாயில், அட்டாளைச்சேனை எம்.எச். நளீம் ஆசிரியர் ஆகிய இருவரும் 04 ஏக்கர் காணியை சுவீகரித்துள்ளனர். இக்காணியை திருட்டுத்தனமாக தம்பிலுவில் நீர்ப்பாசன W.S. என்ற ஊழியர்தான் விற்றுள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர். 18.03.2002இல் விவசாயிகள் கொடுத்த முறையீட்டை 06.03.2003ல் தான் தம்பிலுவில் நீர்பாசனப்பகுதி I.E.J.A. பார்வையிட வந்தனர். விவசாயிகள், D.O. சகிதம் சென்று நடந்த அநீதியை தெரியப்படுத்தியதும் நீர்ப்பாசனப் பகுதி குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டதுடன் பாரிய ஓடையை திறந்து வடிச்சல் நீர் முகத்துவாரம் செல்லவும், நெல்வயல்களை வெள்ளம் பாதிக்காது ஓடையை திறந்து தருவதாகவும் குற்றவாளி மீது சட்ட நடவடிக்கை எடுப்பதாகவும் நீர்ப்பாசனப் பொறியியலாளர் கூறினார்.

ஆனால் இன்றுவரை துரித நடவடிக்கை எடுக்கவில்லை. குற்றவாளியின் பக்கம் அன்புகொண்டவர்களாகவே அதிகாரிகள் இருக்கின்றனர். ஏழை விவசாயிகளை ஏமாற்றி வருகின்றனர் நீர்ப்பாசனப் பகுதியினர். பாதிக்கப்பட்டு நஷ்டமடைந்த 1000 ஏக்கர் விவசாயிகளில் 90 வீதமானவர்கள் முஸ்லிம்கள் என்றபடியால் நஷ்டமடைந்து காணிகளை தமிழ் மக்களுக்கு விற்றுவிட்டு போகட்டும் என்று இனத்துவேசத்துடன் இந்த நீர்ப்பாசனப் பகுதி இயங்குகின்றதா? என்ற கேள்வி முஸ்லிம்கள் மத்தியிலுள்ளது. உதாரணமாக அக்கரைப்பற்று வட்ட மடு குளம், வேப்பையடி குளம், ஆகிய குளங்களின் இரும்புக் கதவுகளை உடைத்து முழு நீரை வெளியேற்றி முஸ்லிம் விவசாயிகள் நெற்செய்கை செய்ய விடாது சதி செய்துள்ளனர் இனவாதிகள். இதற்குகூட தம்பிலுவில் நீர்பாசன பகுதி எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. திட்டமிட்டு முஸ்லிம் விவசாயிகளை நெற்செய்கை செய்ய விடாது தடுப்பதே இவர்களின் வேலை என்று எண்ணத் தோன்றுகின்றது.

2003 சிறுபோகம் 05.04.2003 முதல் விதைக்க அனுமதி வழங்கியுள்ளனர். ஆனால் ஓடை திறக்கப்படவில்லை. இதனால் மீண்டும் 1000 ஏக்கர் காணிகளை நீரில் மூழ்க வைத்து அழிப்பதே இவர்களின் திட்டமா?

*எஸ்.சாலித்தம்பி*
*அக்கரைப்பற்று*

# பள்ளி வாசல் ஒலிபெருக்கிகளை தவறான தகவல்களுக்காக பயன்படுத்தலாமா?

அண்மையில் மருதமுனை பள்ளிவாசல் ஒன்றில் ஜும்ஆ தொழுகையையடுத்து பின்வருமாறு ஒரு அறிவிப்பு விடுக்கப்பட்டது. அதாவது கல்முனைப் பிரதேச மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவைகளுக்கான தீர்வுகளைச் செய்து கொடுக்கும் முகமாக தற்போதைய ஐ.தே.முன்னணி அரசாங்க அமைச்சர்கள் வருகை தர இருப்பதாகவும், இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுமாறும் அந்த அறிவிப்பு அமைந்திருந்தது.

அதனைத் தொடர்ந்து அன்று பி.பகலும் இன்னும் ஒரு பள்ளி வாசலிலும் இதே அறிவிப்பு வாசிக்கப்பட்டு இந்த வேண்டுதலை பாராளுமன்ற உறுப்பினர் மயோன் முஸ்தபா விடுப்பதாகவும் குறிப்பிடப்பட்டது. எனினும் குறித்த தினத்தில் அவர்கள் குறிப்பிட்டிருந்தது போல் பத்துக்கும் அதிகமான அமைச்சர்கள் வருகை தராவிடினும் ஆறு அமைச்சர்கள் மட்டில் கல்முனைப் பிரதேசத்திற்கு வருகை தந்து சில கூட்டங்களிலும் உரையாற்றினார்கள். அவர்களின் உரைகளிலிருந்து அவர்கள் இப்பிரதேசத்திற்கு தமது கட்சியாகிய ஐ.தே.கட்சியை புனரமைக்கவும், தமது கட்சி உறுப்பினர்களுக்கு உற்சாகம் ஊட்டுவதற்காகவுமே வருகை தந்திருப்பதாக அறியமுடிந்தது. மேலும் பகிரங்கமாக வருகை தந்த சில அமைச்சர்கள் தனித்துவக் கட்சியை விமர்சனமும் பண்ணி பேசியதும் அச்செய்திகள் பத்திரிகைகளிலும் வெளிவந்து பாராளுமன்றம் வரை சென்று விவாதிக்கப்பட்டதையும் நாடே அறியும். இங்கே நாம் சுட்டிக் காட்டுவது என்னவென்றால் ஐ.தே. கட்சியின் கட்சி புனரமைப்புக் கூட்டத்திற்கு "மக்கள் சேவை" என்ற பெயர் சூடி ஜும்ஆ பள்ளி வாசல்களின் ஒலி பெருக்கிகளை பகிரங்கமாகப் பாவித்தமையை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்? இத்தவறுகளுக்கு பொறுப்பானவர்கள் யார்? சம்பந்தப்பட்டவர்கள் பதில் கூற வேண்டும்.

*மருதமுனை எம்.எல்.எம்.முஸ்தபா*

# வங்கி (வரி) மூலம் மக்களை ஏமாற்றும் அரசு

வாழ்க்கைச் செலவினால் மக்கள் படும் கஸ்டத்துக்கு நிவாரணம் அளிக்கப்படும் என்று மக்களுக்கு அறிவிக்கும் அரசாங்கம், மறைமுக வரித் திட்டத்தை ஏற்படுத்தி வங்கிகள் மூலம் வரி அறவிட்டு மேலும் மக்களை கஸ்டத்துக்குள்ளாக்கி வருகின்றது.

முதலீட்டாளர்களுக்கு முதலீடு செய்யும் படியும் பல சலுகைகள் வழங்கப்படும் என்றும் கூறிய அரசு 2003.02.21 ஆம் திகதிய விசேச வர்த்தமானி மூலம் முதலீட்டாளர்களிடம் 10 சதவீதம் வரி அறவிடும் படி உத்தரவிட்டுள்ளது.

சிறு தொகைப் பணத்தை வங்கியில் வைப்புச் செய்துள்ளவர்கள் தமது பணத்தில் 20,000 ம் ரூபாவை மீளப் பெறும் போதும் 20 சதவீத வரி அறவிடப்படுகின்றது.

இவ்விதம் சாதாரண ஏழை மக்களின் வைப்புப் பணத்திற்கும் வரி அறவிடப்படும் வேளையில் மறுபுறம் கவர்ச்சியான வட்டி வழங்கப்படும் என்று ஊடகங்கள் மூலம் மக்கள் ஏமாற்றப்படுகின்றார்கள்.

சகல துறைகளிலும் மக்கள் வரிவிதிப்பினால் பாதிக்கப்படும் நிலையில் மறைமுகமாக வங்கி வரியினால் மேலும் மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள்.

ஒரு வியாபார ஸ்தாபனத்திற்கு இவ்விதம் வரி விதிக்கப்படுவதால் பொருட்களின் விலையும் கூடும். இதன் தாக்கம் நிச்சயமாக ஏழை மக்களுக்கே ஏற்படும் என்பதை அரசாங்கம் உணரவில்லையா?

இந்த அரசாங்கம் அமைக்கப்பட்டு ஒரு வருடமாகியும் இன்னும் மக்களுக்கு எந்த விதத்திலும் எதுவித சலுகையும் கிடையாத நிலையில் சமாதானம் பற்றி அரசு தம்பட்டம் அடித்துக் கொண்டு இருக்கின்றது.

மக்கள் இவ்விதம் கஸ்டப்படும் வேளை அமைச்சர்களோ, பாராளுமன்ற உறுப்பினர்களோ தங்கள் சொகுசு வாழ்க்கைக்காக அரசிடமிருந்து ஆடம்பர வாகனங்களையும் மற்றும் சலுகைகளையும் பெறாமல் இருக்கின்றார்களா?

இவர்களுக்காக ஏற்படும் செலவுகளுக்கான பணம் எம் போன்ற ஏழைகளின் வரிப்பணத்தினால் பெறப்படும் வருமானத்தைக் கொண்டே ஈடுசெய்யப்படுகிறது.

சமாதானம், சமாதானம் என்று மேலும் மேலும் மக்களை ஏமாற்றி வருவதை விட்டு விட்டு மக்களுக்கு வரி மூலம் விதிக்கப்படும் கஷ்டத்தை நீக்கி, மக்களின் கஷ்டத்தைப் போக்க அரசாங்கம் உருப்படியான திட்டத்தை உருவாக்குமா?

*ஏ.எஸ்.சலீம் கான் ஜே.பி.*
*தில்லையடி, புத்தளம்.*

# தலைவரே !



தலைவரே....! உங்களுக்குத்
தெரியாது இதெல்லாம்.
நீங்கள்
மறைந்த மறுகணமே
மரத்தில் இருந்த
மந்திகள் தாவிக்
கொப்புகள் முறியக்
குதித்ததுவும்...

மூன்றாம் கத்தம்
முடியும் முன்பே
மூத்தவன் இளையவன்
மூத்தாண்ட கொன்னயனும்
முட்டி மோதி
மூக்குடைபட்டதுவும்...

நாற்பதாம் கத்தம்
நடக்கும் முன்பே
நாற்பது கோடிக்கு - உங்களை
நிறுத்து விற்றதுவும்... அதற்கு
நாய் வாலும்
நரிப் பல்லும் வாங்கியதுவும்...

வருஷக் கத்தம்
வந்த போது
ஓதித் தொழவும் ஆளின்றி
அத்தனை பேரும்
கோட்டுப் படிகளும்
கோட்டை படிகளும் ஏறிக்
கோவணம் கிழிந்த கதைகளும்...

எங்கள் அருமைத் தலைவரே
உங்களுக்குத் தெரியாது
இதெல்லாம்...

*என்.ஏ.தீரன்*

# நமது ஆளுமைகள்

மர்ஹூம் பதியுத்தீன் மஹ்மூத்

7

வரலாற்றுக்கும் தனிமனித வாழ்க்கை சரித்திரத்திற்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. ஏனெனில் சமூக மேம்பாட்டுக்காக உழைத்த சிந்தனையாளர்கள், அறிஞர்கள், சமூக சீர்திருத்தவாதிகள், அரசியல் தலைவர்கள் சிலரது வாழ்வு நமது சமூக வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளன. நமது சமூக உருவாக்கத்திற்கு அவர்களது பங்களிப்புக்கள் பக்கத் துணையாக நின்று உரமாகியுள்ளது. நமக்கும் இந்த ஆளுமைகளின் இலட்சியங்களும் இலக்கும் முன்மாதிரியாக அமையவேண்டும். அம்மாபெரும் ஆளுமைகளின் பதிவுகளை நமது நிகழ்கால சந்ததியினருக்கும், எதிர்காலத்திற்கும் கையளிப்பதே இத்தொடரின் நோக்கம். நீங்களும் நமது சமூக ஆளுமைகள் பற்றிய கட்டுரைகளை எமக்கு எழுதலாம்.

(பிரதம ஆசிரியர்)

பதியுதீன் மஹ்மூத் எழுதிய பிரயாணக் கட்டுரை ஒன்றில் ஆப்கானிஸ்தான் பிரயாணத்தில் நடந்த சம்பவம் ஒன்றை இப்படி எழுதினார்.

1933- ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பத்தாந் திகதி, பிரதம மந்திரி ஆட்சியை தாங்கிய எச்.ஆர்.எச். சர்தார் முஹம்மது ஹாசிம்கான் அவர்களது தேநீர் விருந்தொன்றிற் கலந்து கொண்டோம். அங்கு நடந்த ஒரு சம்பவம். இஸ்லாமிய சன்மார்க்கத்தில் காணப்படும் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் எந்த அளவுக்கு நிலை நாட்டியதென்பதை உணர்ந்து கொண்டோம். ஒரு புதுமையான உணர்ச்சியைத்தான் அன்று நாங்கள் பெற்றுக் கொண்டோம். தேநீர் விருந்துக்குப் பின்னர் நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். அப்பொழுது அஸர் தொழுகைக்காக முஅத்தின் பாங்கு சொல்லும் இனிய நாதத் தைக் கேட்டோம். உடனே பிரதமமந்திரியு டன் நாங்கள் தொழுகைக்காக ஒதுக்கப்ப ட்ட இடத்துக்குச் சென்றோம். அரசர் நாதிர் ஷாவின் தம்பிதான் பிரதமர் சர்தார் ஹாஷிம் கான். தொழுகைக்காகப் பல பிரமுகர்கள், மேதைகள் அவர்களோடு அரண்மனைச் சேவகர்கள், மோட்டார் வண்டி ஓட்டுபவர்கள், பிரதமர் வீட்டு வேலைக்காரர்கள், சமையலறை ஊழியர்கள் உட்பட, இதர சிப்பந்திகள் ஆகிய பல்வேறு தரத்தைச் சார்ந்தவர்களும் ஒன்றுகூடி நின்றனர்.

பிரதம இமாமாகவும் ஏனையவர்கள் அவரைத் தொடர்ந்தும் தொழுகை நடத்தப்பட்டது. "அல்லாஹ்வின் முன்னிலையிலே எல்லோரும் சமமாக மதிக்கப்படுவார்கள் என்ற உள்ளச்சத்துடனும், உண்மையான உணர்வோடும் எல்லோருமாகச் சேர்ந்து தொழுகையை முடித்துக் கொண்டதை மறக்க முடியாது.

கல்வி இலாகா மந்திரி காரியாலயத்துக்கு நாங்கள் அழைத்துச் செல்லப்பட்டோம். அங்கிருந்த அதிகாரிகள், எங்களைச் சந்தோஷமாகவும், அன்பாகவும் வரவேற்றார்கள். அவர்கள் எல்லோரும் கனமான கம்பளி ஆடைகளையே அணிந்திருந்தார்கள்.

ஆப்கானிஸ்தான் மக்கள் சுதந்திரத்தாக முடையவர்கள். இந்தியர்கள் அடிமை வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பதை நாதிர்ஷா வன்மையாகக் கண்டிக்கிறார். ஆப்கானிஸ்தானத்தில் வெள்ளையரின் ஆதிக்கம் அல்லது செல்வாக்கு என்ற பேச்சுக்கே இடமில்லை. நாதிர்ஷா இராணுவ அமைப்பில் அதிக ஊக்கமும் அக்கறையும் சிரத்தையும் கொண்டவர். ஆப்கானிஸ்தானிலே தற்போது ஒவ்வொருவரும் கட்டாய இராணுவப் பயிற்சி



பெறவேண்டு மென்ற நிபந்தனை இருந்து வருகிறது.

அங்கு மூன்று கலாசாலை நிலையங்கள் இருக்கின்றன. ஒன்று பிரான்சிய கலாசாலை. அங்கே பிரஞ்சு பாஷையிலேதான் கல்வி போதிக்கப்படுகின்றது. மற்றொன்று ஜேர்மன் கலாசாலை, அங்கு ஜேர்மன் பாஷையில் கல்வி போதிக்கப்படுகின்றன. இன்னொன்று பாரசீகக் கலாசாலை. அங்கு பார்சி, இங்கிலிஸ் ஆகிய மொழிகள் போதிக்கப்படுகின்றன. கிறிஸ்தவ மிஷனரிமாரின் கலாசாலைகள் அங்கு கிடையாது. நாட்டின் பொதுவான மொழி பார்சி மொழியாகும். அரசாங்க பாஷையும் அதுதான். மாணவர்கள் அந்நிய நாடுகளுக்கு விசேடமாக பிரான்ஸ், ஜேர்மன் போன்ற நாடுகளுக்குத் தொழில் கல்வியும், உயர்தரக் கல்வியும் பெறுவதற்காக அனுப்பிவைக்கப்படுகின்றனர். பிரதி வருஷமும் அந்நிய நாடுகளுக்கு மாணவர்கள் நூற்றுக் கணக்காக அனுப்பிவைக்கப்படுகின்றனர். ஆப்கானிஸ்தான் மக்கள் பொதுவாகப் புத்திசாலிகள். பிறருக்கு உபகாரஞ் செய்வதில் அதிகம் அன்பு கொண்டவர்கள். அவர்களிடத்தில் நேசம், இரக்கம், நன்றி என்பன நிறைய உண்டு..."

பதியுதீன் மஹ்மூத் அவர்கள் எழுதிய இக்கட்டுரையிலே தான் பெற்ற சுவையான அனுபவத்தை ஏனைய மக்களுக்கும் பகிர்தளிக்கும் வல்லமையைக் காண்கின்றோம். பலமொழிகளுக்கு அக்கட்டுரை மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது. எனின் ஏனைய மொழி வாசகர்களினதும் அன்பையும், அபிமானத்தையும் சம்பாதித்திருப்பதை அறிகிறோம். தான் பெற்ற அனுபவங்களைப் பலரை சென்றடையச் செய்வதற்காக எடுத்த முயற்சிகளைக் காண்கின்றோம்.

(தொடரும்)

# ஊறுகொடவத்தை சம்பவம்! சமூக விரோதச் செயல்களுக்கு துணைபோகும் பொலிசார்!

ஒரு மாதத்திற்குள் இரு தடவைகள் உள்துறை பொலிஸ் மந்திரி ஜோன் அமரதுங்க, பொலிசார் சமூக விரோதச் செயற்பாடுகளுக்குத் துணை போவதை பகிரங்கமாகவே ஏற்றுக் கொண்டிருக்கிறார். பல்வேறு சமூக விரோதச் செயற்பாடுகளுக்கு சட்டத்தை காக்க வேண்டிய பொலிஸ் துறை துணை போயிருப்பது அண்மையைச் சம்பவங்களால் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

பொலிஸ்துறையை அண்மையில் அம்பலத்திற்குள்ளாக்கிய ஊறுகொடவத்தை சம்பவம் - மக்கள் மத்தியில் பொலிசாரின் கடமைமீது பெரும் அவநம்பிக்கையை தோற்றுவித்துள்ளது. இச்சம்பவத்தில் பொலிஸ்துறை நடந்து கொண்ட விதம் குறித்து பொலிஸ் மா அதிபர் ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்துக்கள் பொலிசார் மீதான நம்பிக்கையை அடியோடு அகற்றி விட்டிருக்கிறது.

ஊறுகொடவத்தை சம்பவம் அம்பலத்திற்கு வந்தது மக்கள் பலத்தின் நிர்ப்பந்தத்தினாலாகும். மக்கள் வீதிக்குத் திரண்டு வந்து நீதி கேட்டு, விட்டுக் கொடுக்காமல் போராடியதன் ஊடாக ஊறுகொடவத்தை சந்தேக வீட்டில் நடைபெற்ற சமூக விரோதச் செயல் நிரூபிக்கப்பட்டது.

இதற்கு அப்பிரதேச மக்கள் கொடுத்த விலை மிகப்பெரியது. பொலிசாரின் தடியடிப் பிரயோகம், கண்ணீர்ப் புகைப்பிரயோகம், தாக்குதல் சித்திரவதை, கைது செய்தல் என ஊறுகொடவத்தைப் பிரதேசமே இரண்டு தினங்கள் அல்லோல கல்லோலப்பட்டது.

இதனை நாமனைவரும் தொலைக்காட்சிகளில் பார்த்துக் கொண்டிருந்தோம். இறுதியில் மக்கள் போராட்டம் வென்றது. அரசின் ஆதிக்க பொலிசாரின் அடாவடித்தனும் தோற்றுத்தான் போனது.

இச்சம்பவமானது நாட்டு மக்கள் அனைவருக்கும் முன் மாதிரியாகும். சட்டத்தை கையில் வைத்துக் கொண்டு அதிகாரத் திமிரினால் அரசியல்வாதிகள், பாதாள உலகக் கோஷ்டிகள், கடத்தல் காரர்கள், சமூக விரோதப் பேர்வழிகள் கைகளில் கட்டுண்டு கிடக்கும் பொலிஸ் துறையை சீர்படுத்துவதற்கு, மக்களின் ஒன்றுபட்ட விழிப்புணர்வு இன்று முக்கியமானது என்பதற்கு ஊறுகொடவத்தைச் சம்பவம் தக்க சான்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் முஸ்லிம் உறவு நடைமுறை வாழ்வுக்கானதா? ஆதிக்க நலன்களுக்கானதா?

தமிழ் மக்களுடன் முரண்பட்டு பகைமையுடன் வாழவேண்டும் என்பது முஸ்லிம் மக்களின் எண்ணமுமல்ல, நிலைப்பாடுமல்ல. தமிழ் மக்களும் முஸ்லிம்களுடன் பகைமை கொண்டுதான் வாழவேண்டுமென நினைக்கவுமில்லை. ஆனாலும் 1984 க்குப் பின் வடக்கு, கிழக்கில் உள்ள அரசியல் சூழலின் காரணமாக பல்வேறுபட்ட முரண்பாடுகள் நிறைந்த இனக் கலவரங்கள் நடைபெற்று வந்துள்ளன. இதில் அப்பாவி முஸ்லிம், தமிழ் மக்கள் பலர் கொல்லப்பட்டும் அவர்களின் உடமைகள் அழிக்கப்பட்டும் உள்ளன.

தேசிய இனப்பிரச்சினை தமிழர் முஸ்லிம்களிடையே வடக்கு கிழக்கில் கூர்மையடைவதற்கு முன், இரு சமூகங்களிடையே சிறு சிறு சம்பவங்கள் ஏற்பட்டு அவைகள் இரு சமூகத்தின் உள்ளூர்த் தலைமைகளினால் தீர்க்கப்பட்டு வந்தன. 1984 க்குப் பின் தேசிய இனப்பிரச்சினை தமிழ் முஸ்லிம் மக்களிடையே அரசியல் பிரச்சினையாக பரிணாமம் பெற்றவுடன், உள்ளூர்களில் ஏற்படும் சம்பவங்கள் காட்டுத் தீ போல் தமிழ் - முஸ்லிம் கிராமங்கள் அனைத்திற்கும் பரவி, ஒரே நேரத்தில் தமிழ் - முஸ்லிம் பகைமைகளாக வெடிக்கும் அரசியல் தன்மையைக் கொண்டுவிட்டது.



வடக்கு கிழக்கில் தமிழ் முஸ்லிம் இனத்துவ வாழ்வில், 1984 ஏப்ரல் கலவரமானது குறிப்பாக கிழக்கு மாகாணம் முழுவதுமான கலவரமாக உருப்பெற்றது. அன்றைய அச்சூழல் இன்று வரை தொடர்கிறது. இக்கலவர நிலைமைக்குப் பின்னால் இருப்பது மனிதர்களிடையேயான தனிப்பட்ட முரண்கள் மட்டுமல்ல; அரசியல் அம்சங்களும்தான். தனிப்பட்ட முரண்பாடுகள் கூட, ஒரு கட்டத்தில் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையேயான முரண்பாடுகளாக வடிவம் பெற்று, இனத்துவ நோக்கில் தமிழ் முஸ்லிம் கலவரங்களாக உருமாறி நின்றதை நாம் கண்டிருக்கிறோம்.

1980 க்கு முன்னான தமிழ் முஸ்லிம் வாழ்வு இரு சமூகங்களினதும் இயல்பு வாழ்வுடன் பின்னிப் பிணைந்தவை. இன்னும் அக்காலம் தமிழ் - முஸ்லிம் மக்களின் மனங்களில் மறக்கவொண்ணா காட்சிகளாக பதிந்து நிற்கின்றன. மீண்டும் மீண்டும் முரண்பாடுகளும் மோதலும் வெடிக்கும் போதும் மனதை விட்டு அகலாத இனிய அனுபவங்களாக அவை எழுந்து நிற்கின்றன. அவ்வழகிய வாழ்வின் மீது குண்டெறிந்தவர் யார்? இவை பற்றிய விவாதங்கள் பல்வேறு தடவைகள் நடத்திருக்கின்றன - இம்முரண்பாட்டிற்கும் பகைமைச் சூழலுக்கும் பிரதான காரணம் ஆதிக்க அதிகாரமும் அதன் மனோநிலையும் என்பது நாமறிந்ததே!

"சமாதானச் சூழல்" என்கின்ற போர் தவிர்ப்பு சூழல் நிலவும் இன்றைய காலகட்டத்தில் கூட, தமிழ் முஸ்லிம் உறவுகள் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. வெடிப்பதற்கு காத்திருக்கும் வெடிகுண்டின் அச்சச் சூழல் தமிழ் முஸ்லிம் மக்களிடையே நிலவுவதுதான் யதார்த்தமாகும். இந்நிலையில் தமிழ் முஸ்லிம் சமூகங்களிடையே சுமூகமான உறவினை பலப்படுத்த வேண்டியது இன்றியமையாத உடனடிச் செயற்பாடாக உள்ளது இரு சமூகங்களின் மத்தியிலும்.

இந்நிலையில் விடுதலைப் புலிகளின் கிழக்குத் தலைமை அண்மைக் காலமாக தமிழ் முஸ்லிம்களின் உறவு பற்றி அதிகமாக பேசி வருவதைக் காண்கிறோம். இப்பேச்சுக்கு தமிழ் ஊடகங்கள் அதிக முக்கியத்துவத்தை அளித்து வருகின்றன. இப்பேச்சுக்கள் குறித்த முஸ்லிம்களின் கருத்துக்கள், மனோநிலைகள் என்ன என்பதும் தமிழ் முஸ்லிம் உறவு எப்படி அமைய வேண்டும் என்பதும் முக்கியமாகிறது.

உண்மையில் விடுதலைப் புலிகள் முஸ்லிம்களுடன் சமாதான வாழ்வை வேண்டி நிற்கிறார்கள் என்றால், அவர்கள் தொடர்ந்தும் வெறும் வார்த்தைகளால் பேசிக் கொண்டிருக்க முடியாது. அதனை செயலில் நிரூபிக்க வேண்டும். அவ்வார்த்தைகளை செயலில் நிரூபிக்காதவரை புலிகள் மீதான முஸ்லிம்களின் சந்தேகம் நீங்கப் போவதில்லை. நடைமுறையில் அதிகார ஆதிக்கத் தனத்துடன் நடந்து கொண்டு, முஸ்லிம் மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகளை மறுதலித்து புலிகளின் ஆதிக்கத்தினுள் பரந்துப்பட்ட வகையில் கொண்டு வருவதற்கான திட்டமிட்ட செயற்பாடாக வே விடுதலைப் புலிகளின் தமிழ் - முஸ்லிம் உறவு பற்றிய கருத்துக்கள் அமைந்துள்ளன. இதுவரை அடிப்படியானதொரு தொனியைத்தான் இக்குரல்களின் ஊடாக கேட்க முடிகிறது.

## சமாதான சமத்துவ வாழ்வு உறுதிப்படுத்தப்படுதல்

யதார்த்தத்தில் வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல; இலங்கை மட்டத்திலும் இனங்களிடையேயான சமாதான வாழ்வை வெறும் அறிக்கைகளாலும் வாய் வார்த்தைகளாலும் ஏற்படுத்திவிட முடியாது! மாறாக அடக்கி ஆள்வதன் மூலமும் ஒரு சமூகத்தை அடிபணிய வைத்து இயல்பு வாழ்வை கட்டியெழுப்ப முடியாது என்பதே இலங்கை இனத்துவ அரசியல் வரலாற்றின் யதார்த்தமாகும்.

நீண்டகால அடக்குமுறை வரலாற்றைக் கொண்ட சிங்கள ஆதிக்க வரலாறு பல்வேறு தடவை தமிழ்த் தரப்பை நோக்கி சமாதானமாக வாழவேண்டும் என்று சொல்லியதே தவிர, சமாதானத்திற்கான அரசியல் தீர்வை செயல் அளவில் வெளிப்படுத்தவில்லை. இதே அனுபவத்தைத்தான் புலிகளும் முஸ்லிம்களிடம் வெளிப்படுத்துகின்றனர். புலிகளுடைய அரசியல் அனுபவத்தின் அடிப்படையில் இது சரியானதா என்பதே முதற் கேள்வியாகும்.

**ஷபிலுஸ் ஷறப்**

தமிழர்களையும் முஸ்லிம்களையும் எதிரிகளாகக் கட்டமைத்தவாகள் யார் என்பது நமக்குத் தெரியும்! முஸ்லிம்கள் மீதான புலிகளின் ஒவ்வொரு செயற்பாடும் மேற்கொள்ளப்படும் போது முஸ்லிம்கள் தமிழர்களை எதிர் நிலைக்குத் தள்ளிக் கொண்டிருந்தனர். புலிகளின் கொடூரமான செயற்பாடுகளின் விளைவாக எழுந்த சமூக நிலைமைதான் தமிழர் முஸ்லிம் முரண்பாடும் பகைமையும். இரு சமூக மக்களிடமிருந்து எவ்விதமான பகைமைகளும் முன்னெடுக்கப்படவில்லை; பழிவாங்கும் உணர்ச்சி, பகைமை நிலைக்குத் தள்ளுதல் என்பன அரசியல் அடிப்படையில் தான் நிகழ்ந்தன.

இப்போது புண்களை அப்படியே வைத்துக் கொண்டு, அதற்கு மேலால் அழகிய வார்த்தை ஜாலங்களால் (அழகிய அல்ல, ஆதிக்க) தமிழ் முஸ்லிம் மக்களிடையேயான சமாதான வாழ்வை கட்டியெழுப்ப முடியுமா என்பதில் முஸ்லிம், தமிழ் மக்கள் மத்தியில் நிறையவே கேள்விகள் உள்ளன.

உண்மையான சமாதானம், சமூக உறவுகள் அடக்குமுறை ஆதிக்க வடிவில் வரமுடியாது! நிச்சயமாக அது சமத்துவத்தினதும் மனிதாபிமானத்தினதும் வடிவிலேயே வரவேண்டும். இதனை சாத்தியப்படுத்துவதற்கு புலிகளின் அரசியல் சித்தாந்தம் கணிசமாக மாற வேண்டும். அது மாறாத வரை புலிகளின் சமாதானம் தொடர்பான குரல்கள் வெறும் கண்துடைப்புத்தான்.

## விடுதலைப் புலிகள் செய்ய வேண்டியது என்ன?

அரசியல் அரங்கில் இரு சமூகங்களிடையேயும் சமாதானமும் உறவும் பலமாக கட்டியெழுப்பப்படல் வேண்டுமானால் முதலில் முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளை புலிகள் மதித்தல் வேண்டும். முஸ்லிம்களை சமத்துவமாக நடாத்தும் ஒரு அரசியல் ஏற்பாட்டை உடனடியாக முன்வைக்க வேண்டும். இந்த அரசியல் ஏற்பாடு தொடர்பாக முஸ்லிம் அரசியல் தலைமைகளுடன் பேசவேண்டும். இரு சமூக மக்களுடனும் இதுபற்றிய கருத்துக்களைத் திரட்டுதல் வேண்டும். இயல்பு வாழ்வுக்கான அனைத்துச் செயற்பாடுகளையும் செயல் அளவில் தொடங்க வேண்டும். இவைகளைச் செய்யாமல் வெறும் வாய் வார்த்தைகளால் தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும் ஏமாற்ற முயற்சிக்கக் கூடாது. இந்த ஏமாற்று நாடகத்திற்கு முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பலியாகி விடவும் கூடாது.

# சொன்னார்கள்...சொன்னார்கள்!



## ஏப்ரல் பூல்

முட்டாள்கள் தினமன்று பாராளுமன்றம் கலகலப்பாகக் காணப்பட்டது. பாராளுமன்றம் தொடங்கியவுடன் ஜே.வி.பியின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச, அஸ்வர் எம்.பிக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரிவித்தார். ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அதில் சேர்ந்து கொண்டனர். சிறிதும் எதிர்பாராத வகையில் ஒலித்த வாழ்த்துச் செய்தியை அடுத்து இன்று முட்டாள் தினம் என்பதையும் தான் முட்டாள் இல்லை என்பதையும் மெய்ப்பிப்பதற்கு அஸ்வர் ஹாஜியார் அன்று பலத்த சிரமப்பட வேண்டி ஏற்பட்டது. பாராளுமன்றம் நீண்ட காலத்தின் பின் அன்று சிரித்தது.

## புலிகளுக்கு நன்றி கூறுகிறார் மு.கா.தலைவர் ஹக்கீம்!



காத்தான்குடி ஜமிஅதுல் சித்தீகிய்யா அரபிக் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்ட மு.கா. தலைவர், மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள முஸ்லிம்களுக்கு உரித்தான காணிகளை முஸ்லிம்களுக்கு மீளக் கையளித்ததற்கு புலிகளுக்கு நன்றி கூறினார். இரு சமூகங்களிடையே நடந்த கசப்பான செய்கைகளை மறந்து நம்பிக்கையான நல்லுறவை உருவாக்குவதற்கு கடந்த சில நாட்களாக முன்னேற்றகரமான விடயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. நிலம் வழங்கப்படுவது முக்கியமான விடயமாக உள்ளது. இதற்கு முன்வந்தமைக்கு நான் விடுதலைப் புலிகளுக்கு உத்தியோகபூர்வமான நன்றியை தெரிவிக்கின்றேன் என்றார். *காத்தான்குடியில்*



## பொலிஸ் மா அதிபர் கூற்று!

அரசியல்வாதிகளின் மிரட்டல்களுக்கு அஞ்சவோ, தலை வணங்கவோ வேண்டாம்! அரசியல்வாதிகளின் பின்னணியிலிருந்து சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராக பொலிஸ் திணைக்களம் கடும் நடவடிக்கை எடுக்கும். *சீதுவை சம்பவம் தொடர்பாக.*

## மக்களுக்காகத்தான் கட்சி!



அமைச்சர் அதாவுல்லா

கட்சியை விட மக்கள் சமுதாயமே முக்கியமானது. முதலாவது சமுதாயம், இரண்டாவது கட்சி, மூன்றாவது தான் தலைமைத்துவம். சமுதாயத்திற்காகத்தான் கட்சி, கட்சிக்குத்தான் தலைமைத்துவம். ஆகவே, சமுதாயத்தை கைவிடுகின்ற கட்சி, சமுதாயத்தை கைவிடுகின்ற தலைமைத்துவம் ஆகியவற்றைப் பற்றி நாங்கள் எவ்வாறு தீர்மானம் எடுப்பது என்பதைப் பற்றி நானும் நீங்களும் பேசவேண்டிய தேவை இருக்கிறது என்றார். பாலமுனையில்.

# மட்டக்களப்பு விவசாயிகளின் காணி விவகாரமும் தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் முஸ்லிம் தேசப் பிரகடனமும்

முஸ்லிம்கள் தங்களது விவசாயக் காணிகளில் மீண்டும் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வது சம்பந்தமாக மட்டக்களப்பு மாவட்ட புலிகள் இயக்க தலைவர்களுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகள், விவசாயிகளுக்குமிடையில் கடந்த 29.03.2003 அன்று மற்றுமொரு சந்திப்பும் பொதுக்கூட்டமும் மட்டக்களப்பு இலுப்படிச்சேனை தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு ஏறாவூர் பிரதேசத்திலிருந்து பல நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் சென்றிருந்தனர். புலிகள் இயக்கத்தின் சார்பில் கௌசல்யன், றமேஷ், நிஸாம் உட்பட சுவீ, சீலன் ஆகியோரும் கலந்து கொண்டனர். முஸ்லிம்களின் தரப்பாக வீடமைப்புப் பிரதி அமைச்சா பசீர் சேகுதாவூத் தலைமையில் முன்னாள் ஏறாவூர் நகர பிரதேச சபை உபதலைவரும் வர்த்தக சங்கத் தலைவருமான எஸ்.எச்.அபூஹனீபா, ஏறாவூர் இணக்க சபைத் தலைவர் ஏ. காதர் (மாஸ்டர்) பள்ளிவாசல்கள் சம்மேளனச் செயலாளர் யூஎல். முஹைதீன் பாவா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் போது பயிர்ச்செய்கை மேற்கொள்வது சம்பந்தமாக முஸ்லிம் தரப்பு பிரதிநிதி ஒருவா புலிகளிடம் பேசிய போது அதற்குப் பதிலளித்த கொடுவாமடு, இலுப்படிச்சேனை, கரடியனாறு, உறுகாமம் போன்ற பகுதிகளுக்குப் பொறுப்பான "சுவீ" என்பவர் முஸ்லிம்களை எக்காரணம் கொண்டும் தோட்டப் பயிர்ச் செய்கைக்கும், கால்நடை வளர்ப்புக்கும் அனுமதிக்க மாட்டோம். முடியுமானால் அவர்கள் நெற் பயிர்ச் செய்கையை மாத்திரம் மேற்கொள்ளட்டும்" என்று திட்ட வட்டமாக தெரிவித்தார்.

அப்போது "முஸ்லிம்கள் தங்களது காணிகளுக்குச் சென்று உடனடியாக பயிர்ச் செய்கைகளை தொடங்கலாம்" என்றுதானே கடந்த 27.03.2003 அன்று வவுணதீவு பகுதியில் நடைபெற்ற சந்திப்பின் போது உடன்பாடு காணப்பட்டு எழுத்து மூலம் கைச்சாத்திடப்பட்டது. இவ்வாறு "நெற்பயிர்ச் செய்கைக்கு மாத்திரம் தான் முஸ்லிம்கள் அனுமதிக்கப்படுவீர்" என்று எந்தவொரு வசனமும் அங்கு எழுதப்படவில்லையே என முஸ்லிம் பிரதிநிதிகள் மீண்டும் கேட்ட போது அதற்குப் பதிலளித்த "சுவீ" மிகவும் காரசாரமாக, "அவ்வாறான எந்தவொரு நடவடிக்கைகளையும் நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம். விரும்பினால் அவர்கள் எமது நிபந்தனைகளுக்கமைவாக நெற் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளட்டும். இல்லையானால் திரும்பிச் செல்லட்டும். இது பற்றி இம்மாதம் மீண்டும் நடைபெறவிருக்கின்ற புலிகள் தரப்புக்கும் முஸ்லிம்கள் தரப்புக்குமிடையிலான சந்திப்பின் போது விரிவாக விவாதிக்க இருக்கின்றோம் என அவர் கூறினார்.

புலிகள் இயக்கத்தின் இந்நடவடிக்கையானது எம்மை பெரிதும் கவலை கொள்ளச் செய்தது மட்டுமல்லாமல் புலிகளது உறுதிமொழிகள் சந்தேகத்தையும், நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்துவதாக இருக்கிறது என முஸ்லிம் தரப்பாக கலந்து கொண்ட பிரதிநிதி ஒருவர் எம்மிடம் தெரிவித்தார்.

இதேவேளை அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் போது உரையாற்றிய புலிகள் இயக்க பொறுப்பாளர் "றமேஸ்", அண்மையில் தென்கிழக்குப் பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்களின் எழுச்சிப் பேரணியின் போது எமது இயக்கத்தையும் எமது போராட்டத்தையும் சீண்டி கொச்சைப்படுத்தும் அளவிற்கு அவர்கள் அங்கு நடந்து கொண்டனர். "எங்களது இலட்சியங்களை நாங்கள் அடையப் பெறாது விட்டால் அதற்கெதிராக ஆயுத மேந்திப் போராடுவதற்கு முஸ்லிம் இளைஞர்கள் தயாராக இருக்கின்றார்கள்." 'அதற்கு ஆதாரமான ஒலி - ஒளிப்பதிவுகள் எம்மிடம் உள்ளன' என்றெல்லாம் பெரும் ஆவேசமாகவும் அங்கு பேசியிருக்கிறார்கள். முஸ்லிம்கள் ஒன்றை மட்டும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இலங்கை அரசு தனது முழுப் பலத்துடனும் வெளிநாட்டு உதவிகளுடனும் எமக்கெதிராக பல வருடகாலமாகப் போராடி தோற்றுப் போன நிலையில்தான் இன்று எம்மை பலமிக்கதொரு சமதரப்பாக ஏற்றுக் கொண்டு பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு முன்வந்திருக்கிறது.

இந்நிலையில் எம்மை ஆவேசப்படுத்துவதானது முஸ்லிம்களின் எதிர்காலத்திற்கு அழிவை ஏற்படுத்துவதாகவே அமையும் எனக் கூறினார்.

இவரது இப்பேச்சிற்குப் பதிலளித்தாற் போல் பேசிய ஏறாவூர் பள்ளிவாயல்கள் சம்மேளனச் செயலாளர் யூஎல். முஹைதீன் பாவா, "ஒரு பெரும்பான்மை இனத்தின் அடக்கு முறைகளால்தான் தமிழ் சிறுபான்மை இனம் ஆயுதமேந்திப் போராடியதென்றால் அதே தமிழ் சிறுபான்மை இனத்தால் இன்னுமொரு சிறுபான்மை இனம் அடக்கு முறைக்குள்ளாக்கப்படாத போது அங்கு ஆயுதமேந்திப் போராட வேண்டிய அவசியம் இருக்காது. ஆக முஸ்லிம்களது எதிர்கால நடவடிக்கைகள் புலிகளது செயற்பாடுகளில்தான் தங்கியுள்ளது என தெரிவித்தார்.

(முஸ்லிம் குரல் விஷேட செய்தியாளர்)





# நம் முஸ்லிம் ஊடகவியலாளர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

நாட்டைப் பீடித்திருந்த இனப்பிரச்சினை தீர்வு முயற்சிகள்- சமாதான நடவடிக்கைகள் என்று பல்வகை முயற்சிகளை கண்டுவரும் இக்காலப் பிரிவில், முஸ்லிம்கள் தம் எதிர்காலம் பற்றி, என்னென்ன முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்? எந்த நிலைப்பாட்டை முஸ்லிம்கள் கொண்டுள்ளனர்? முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலத் திட்டங்கள் யாவை?

இப்படி கேள்விகளை வரிசைப்படுத்திக் கொண்டே போனாலும், விடை என்னவோ ஒன்றாகத்தான் இருக்கும்! இன்னுமே நமது முஸ்லிம்கள், தம் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் தெளிவான சிந்தனைகளின்றி திணறிக் கொண்டுதான் இருக்கின்றனர். இதுதான் யதார்த்தமான "அந்த" ஒரேயொரு விடயமாகும்!

இவ்வாறு சன்மார்க்க சமுதாயம் திணறுவதற்கும், தீர்க்கமான தீர்மானத்திற்கு வர முடியாமல் திண்டாடுவதற்கும், காரணமென்ன? சமுதாயத்தைப் பாதிக்கும் விவகாரங்களில் சத்தியத்தை சபைப்படுத்தாமலும் "முல்லா"வினால் இருக்க முடியவில்லை.

நம் முஸ்லிம் ஊடகவியலாளர்கள், சமூகம் தனக்குரிய வருங்காலத்தை வரித்துக் கொள்ளத் தடுமாறும் சமகாலத்தில், சமூகத்திற்கு "கைகொடுக்கும்" விதமாக செய்த பணி என்ன? பங்கென்ன? அவர்கள் பிரஸ்தாப விடயத்தில் பங்காளிகளாக இருக்கின்றார்களா? அல்லது பார்வையாளர்களின் ஆசனங்களில் அமர்ந்துள்ளனரா? என வினவுவது தவிர்க்கவோ-தட்டிக்கழிக்கவோ முடியாத ஒன்றல்லவா?

ஆம்! நம் சமுதாய மீடியாக்காரர்கள் எரியும் பிரச்சினைகளின் நடுவே-என்ன செய்து கொண்டிருக்கின்றனர்?

இந்தக் கேள்விக்கு பதில் காண முன், நம் முஸ்லிம் ஊடகத்தினர் பற்றி சற்றே சிந்தித்துப் பார்ப்பது, நலமென "முல்லா" நினைக்கிறேன்.

இன்று நம்மிடையே கணிசமான அளவு பேனா பிடிப்பவர்களும், இலத்திரனியல் ஊடகத்தாருமாக பலர் இருக்கின்றனர். இவர்களில் சுமார் 200க்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போ.ரம், மீடியா எலய்ன்ஸ் எனும் ஒன்றியமும் பணியாற்றி வருகின்றன. இவ்விரு அமைப்புகளும் முஸ்லிம் ஊடகவியலாளர்களின் நலன் கருதி, பயிற்சி - செயலமர்வு நடத்துவது, விருது வழங்கி கௌரவிப்பது, பொன்னாடை போர்த்துவது, புலமைப் பரிசில் வழங்கி உற்சாகப்படுத்துவது என்று, பல பணிகளை ஆற்றி வருகின்றன. இவ்விரு அமைப்புகளிலும் அங்கம் பெறாத இன்னும் பல முஸ்லிம் ஊடகவியலாளர்களும் இருக்கவே செய்கின்றனர்.

இவ்விரு அமைப்புகளிலும் இருப்போர், அரச-தனியார் மீடியா நிலையங்களில் பொறுப்பு வாய்ந்த பதவிகளில் கடமையாற்றி வருகின்றனர். இதனால் நாட்டு நடப்புகள், சர்வதேச நிலவரங்கள், அரசியல் ஏற்ற-இறக்கங்கள், சமூகங்களின் சாதக-பாதக சமாச்சாரங்கள், கலை-இலக்கிய நிகழ்வுகள் போன்ற பல்வேறு விடயங்களினதும், விவகாரங்களினதும் "உண்மை நிலை"யை உணர்ந்தவர்களாக இருக்கின்றனர்.

அதனால்-அரசியல் தலைமைகள், அறிஞர் குழாம், ஆசிரியருலகம், உலமாக்கள், சமூகப் பிரமுகர்கள் அனைவரையும் விட, நோய்கள், நோய்க்கான காரணிகள், பரிகாரங்களின் பாதைகள், தீர்வுக்கான திசைகள், விளைவுகளின் விலாசங்கள் போன்ற முக்கிய அம்சங்களை அறிந்தோரில் முன்வரிசையில் இருப்போராக இந்த மீடியாக்காரர்களே திகழ்கின்றனர் என. அதே குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் என்ற உறவில் "முல்லா" சொன்னால், அதில் முணுமுணுப்புக்கு இடமில்லை.

அப்படிப்பட்ட நம் ஊடகத்தினர், சன்மார்க்க சமுதாயம் சங்கடப்படும் பல்வேறு விவகாரங்களில், குறிப்பாக-சமகால பிரச்சினைகளைத் தொட்டு, சமுதாயத்தின் வருங்காலத்திற்கு அடிக்கல் நடும் விடயங்களில், காத்திரமான பங்காற்றல் செய்ய வேண்டும் என்பது தான், சமூகப் பிரக்ஞையுள்ள சன்மார்க்க நெஞ்சங்களின் ஆவலும் - அவசியமான எதிர்பார்ப்புமாகும்!

இந்த நியாயமான ஆவலை-சமுதாயத்தின் ஏவலாக எண்ணி, நம் முஸ்லிம் மீடியாக்காரர்கள் கடந்த காலங்களில் செயல்பட்டுள்ளனரா? என்கிற வினாவுக்கு விடை தேடுவது, போன பஸ்ஸுக்கு கைகாட்டுவதைப் போன்றதாகும். அதனால்-சென்ற காலம் சென்றதாகவே இருந்துவிட்டுப் போகட்டும். சமகாலத்தில் சாதனை புரியவும், சரித்திரம் படைக்கவும் நம் மீடியாக்காரர்கள் தயாரா? "முல்லா"வின் இக்கேள்விக்கு ஒவ்வொருவரும் தத்தம் நெஞ்சிலே கைவைத்து பதில் தேடட்டும்.

சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எழுதுவதினூடாக சமூக மயமாக்கினால், சமாதான நடவடிக்கைகளில் நம் தலைவர்கள் எந்த வழியைப் பின்பற்ற வேண்டும்; எப்படி நமது மக்களின் விடயங்களில் இயங்க வேண்டும்; என்ற தெளிவு தானே தெரிந்து விடும். இவ்வாறெல்லாம் நம் சமூகத்தவரை விழிக்கச் செய்வது, பிற இன சகோதரர்களை எதிர்த்தோ-புறக்கணித்தோ அல்ல. அவர்களின் ஆதரவுடனே இவற்றை எல்லாம் மீடியா சகோதரர்கள் செய்யலாம்.

"இப்படியெல்லாம் செய்வதற்கு எங்கள் பதவிகள்-இருக்கைகள்-இடங்கள்-கட்சிகள் இடந்தராதே" எனச் சொல்லி, சிலர் தப்ப முனையலாம் என்பதை 'முல்லா'வும் அறிவார். தான் பணியாற்றும் பத்திரிகையில் எழுத முடியாவிட்டால், பிற ஏடுகளில் புனைப் பெயரில் எழுதி, வெளிச்சமாக்கி, சமூகத்தை சிந்திக்க வைக்கலாமே. துரோகத்தனத்திற்கு துணை போகாமல், நிபுணத்துவ அறிஞர்களைக் கொண்டு எழுதி, அவற்றை மக்கள் மத்தியில் அரங்கேற்றலாமே! "பிழைக்கிற பிள்ளைக்கு பிச்சுப்பூ நஞ்சாகி விடுமா? என்ன?" என்று நம் மூதாதையர் கூறும் பழமொழியை நம் ஊடகத்தார் அறிய மாட்டார்களா?

**ஒருவர் ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா?**

நாம் எழுதுவதற்கும், நமது மக்களுக்குள் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும் விவாதங்களைத் தொடங்கவும், தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களை சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் - மு.கா. மாற்று அணியினர் சந்திப்பு!

கடந்த 7 ஆம் திகதி மாலை பிரதமரை முஸ்லிம் காங்கிரஸ் மாற்றுக் குழுவினர் சந்தித்து உரையாடினார். ஹக்கீம் தலைமையை பகிரங்கமாக நிராகரித்து மு.கா. மாற்று அணியாக பிரகடனம் செய்ததிலிருந்து ஐந்து தடவைகள் பிரதமரை மு.கா. மாற்று அணியினர் சந்தித்துள்ளனர். இதுவரையான சந்திப்புகளில் ரணில் உறுதியான முடிவுகளை வழங்கவில்லை என்ற நம்பிக்கையீனங்களுக்கு மத்தியில் கடந்த சந்திப்பும் இடம் பெற்றது.

இச்சந்திப்பில் மு.கா. மாற்று அணியினரை பாராளுமன்றத்தில் தனிக் குழுவாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இருதரப்புக்கும் வளங்கள் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும். ஹக்கீமின் அரசியல் பழிவாங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்ற கட்சி சார்ந்த கோரிக்கைகள் அதிகம் வலியுறுத்தப்பட்டதாகத் தெரிகிறது.

பேச்சுவார்த்தை மேசையில் தனித்தரப்பாக முஸ்லிம்கள் செல்ல வேண்டுமென வலியுறுத்திய போது முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் வரும்போது தனிக் குழுவாக செல்லலாம் என பிரதமரால் சொல்லப்பட்டுள்ளது. அப்போது அதனை மறுத்துரைத்த மு.கா. மாற்றுக் குழுவினர் தனித்தரப்பின் அவசியத்தை வலியுறுத்திப் பேசியதாக மு.கா. மாற்றுக் குழுத்தலைவர் சுபைர்தீன் ஹாஜியார் தெரிவிக்கிறார்.

புலிகளும், அரசாங்கமும் முஸ்லிம்களின் விடயம் வரும் போது மட்டும்தான் பேச்சுவார்த்தையில் *தனிக் குழுவாக* பங்காற்றலாம் என்கின்ற ஒருமித்த நிலைப்பாட்டையே தொடர்ந்தும் கொண்டிருக்கின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அன்டன் பாலசிங்கம், தொடர்ந்தும் முஸ்லிம்கள் தொடர்பாக தெரிவித்து வரும் ஆதிக்கக் கருத்துக்களை பிரதமரின் கவனத்திற்கு மு.கா. மாற்று அணியினர் கொண்டு வந்த போது, அன்டன் பாலசிங்கம் பேசுவதை என்னால் கட்டுப்படுத்த முடியாது என ரணில் சொல்லியுள்ளார்.

நடைபெறப் போகும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக ரணில் அதிகம் ஆர்வம் காட்டியதாகவும் - தேர்தலில் எப்படி போட்டியிடப் போகிறீர்கள் என்பதை கேட்ட போது, உரிய சந்தர்ப்பம் வரும் போது அதுபற்றிய முடிவினை அறிவிப்போம் என மு.கா மாற்றுத் தரப்பால் தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

# முஸ்லிம்களின் காணியை சுவீகரிக்க முயற்சி

1973 ஆம் ஆண்டு காடு வெட்டி 1983 ஆம் ஆண்டு LDO உத்ரவுப் பத்திரம் பெற்ற முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகள் இப்போது ஆக்கிரமிப்புக்குள்ளாகும் அபாயத்தில் உள்ளது. பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட முஸ்லிம்களை வயல் வெளியிலிருந்து அகற்றும் முயற்சிகள் அச்சுறுத்தல், நீர்ப்பாசன குளங்களை உடைத்தல், வாடிகளை அழித்தல் என தொடர்கிறது. மாட்டுப்பண்ணைக் காணி என பொய் சொல்லி முஸ்லிம்களுக்கு உரித்தான காணியை மறுப்பதற்கு முயற்சி நடந்து வருகிறது.

முரணான வெட்டி, வட்டமடு போன்ற பிரதேசங்களில் உள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணிகள் காணிகளுக்கே இந்நிலை உள்ளது. புலிகள், சந்திரநேரு எம்.பி. போன்ற தரப்புகளுக்கு இதுபற்றி முறையிட்டும் இன்னும், உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பொலிசுக்கும் அம்பாறை கச்சேரிக்கும் இதுபற்றி முறையிட்டுள்ளோம். பயிர்ச் செய்கை மறுக்கப்படும் காணிகள் அனைத்தும் முஸ்லிம்களுக்கு சொந்தமானதே.

கஷ்டப்பட்டு காடு வெட்டி அரசாங்க உத்தரவுப் பத்திரம் பெற்று 40 வருடங்களுக்கு மேலாக விவசாய நடவடிக்கையில் ஈடுபட்ட எமது காணிகள் எவ்வித நியாயமின்றி மறுக்கப்படுவது எப்படி நியாயமானதாகும்? இது சம்பந்தமாக உடனடியாக நமது அமைச்சர்கள், எம்.பிக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*தகவல்:*
*முகம்மது இப்றாஹீம்,*
*அப்துல் றசீட்,*
*அக்கறைப்பற்று*

# பாசிசக் குரல்!

எனது குரலின் அச்சுறுத்தல்
உன்னை நடுங்கச் செய்கிறதா?
உன் உயிர் சவக் குழிக்குள்
மீளாத் துயிலாக வேண்டும்
என் காலடிச் சத்தத்தில்.
எனது முடிவு நாசப்படுத்தும்
உன் வாழ்வை சிறைக்குள் தள்ளி.

உன் முன்னேற்றத்துக்கான
முதல் அடிவைத்தலைக்கூட
கால்களுக்கு விலங்கிட்டு நகராமல் தடுப்பேன்.
எந்த வாயால் பேசுவாய்
துப்பாக்கியை நுழைத்து
பூட்டுகள் இடுவதும் எனக்கிலகு.
நீ எழுதுவது பற்றிய
கற்பனையில் இருக்கையிலேயே
உன் விரல்களைக் கொத்தி
படுவான் கரைக் காட்டுக்குள் எறிவேன்.

என் பார்வையில் உதிரும் ஒவ்வொரு இனவெறியும்
உன்னைப் பொசுக்கி சாம்பலாய்க் குவிக்கும்.
நான் உன்னைக் கடத்திக்
கொல்லக் காத்து நிற்கையில்
துருக்கர்மடம் வீதி வழியாக
உன் பயணம் சாத்தியமாகுமா?



நீ கோரிக்கையைப் பரிமாறலாம்
எனது பேச்சுவார்த்தை மேசையில்
கொளுத்தக் காத்திருக்கும் நீ.
என் இடுப்பில் ஒளிந்திருந்திருக்கும்
துப்பாக்கியைக் கண்டு
பயந்த பின்புமா உன் தலைவன்
வாய்திறக்க தைரியப்படுவான்?

தொண்ணூராம் ஆண்டு யாழ்ப்பாணம்
உன் நினைவின் மூலையொன்றுக்குள்
இன்னும் குந்தியே இருக்கும்.
அடுத்தது காத்தான்குடி மூதூர் சாய்ந்தமருதாக
இருக்கலாம் என்பதை
நீ எதிர்பார்த்து நடுங்கிப் போயிரு.
துன்பியல் நிகழ்வாய் நான்
லேசாய் சமாளித்து விடுவேன் உலகை.

எனது ஆயுத நிழலின் கீழ்தான்
உன்னை தலையில் குட்டி அமர வைப்பேன்
என் ஆணை
உன்னை அடித்து உதைத்து நொறுக்கி
சயகௌரவத்தை பறிக்கும் உன்.

எனது சிறப்புத் தளபதிகளின் கப்பத்துக்கு
உன் பணம்
தலை குனிந்து மரியாதை செய்யாத வரை
அச்சுறுத்தல்களை உன்னூரின்
மீது ஏவிக்கொண்டே இருப்பேன்.
உனது தேசம், உன் உரிமை, உனது சுதந்திரம்
எனது பாசிச தேசத்திலிருந்து
விடுவித்துத் தரவே மாட்டேன்.
இன்னும் நீ பயந்து சாகவில்லையா.
மொத்தத் துப்பாக்கிகளாலும்
உனது இனத்தைச் சுட்டுத்தள்ளி
உன் முஸ்லிம் குருதியில்
என் புலிப் பயங்கரவாதத்தைக் குளிப்பாட்டுவேன்.

- எம்.எல்.எம்.அன்ஸார்
காத்தான்குடி
2003-03-28.

# தமிழ் தேசியத்தின் வெற்றிக்கு வழி என்ன?

> தமிழ் மக்களுடைய அரசியல் போராட்டம் வலுவாக நிலை பெற்றிருக்கும் இவ்வேளையில், "தேசிய வாதம்" தொடர்பான விரிந்த பார்வையை ஏற்படுத்தும் நோக்கில் ஈழநாடு பத்திரிகையில் "சஞ்சித்" என்ப வரால் எழுதப்பட்ட கட்டுரையின் சில பகுதிகளை - நமது அரசியல் முக்கியத்துவம் கருதி மீள் பிரசுரம் செய்கிறோம்!
> -பிரதம ஆசிரியர்

விவாதங்களும் கருத்து மோதல்களும் ஆரோக்கியமான சிந்தனை வளர்ச்சிக்கும் புதிய சிந்தனைகள் உருவாவதற்கும் வழிவகுக்கும் என்ற நம்பிக்கை விடுதலை இயக்க வரலாற்றில் அவ்வளவு பலமாக இருக்கவில்லை. தமிழ்ச் சமூக அமைப்பின் கட்டமைவிலும் கூட, அத்தகைய ஒரு விவாதம் மூலம் புதிய கருத்தினை நாடிச் செல்லும் கலாசார மரபு வலுவாக இருப்பதாகத் தெரியவில்லை. கருத்து மாறுபாடுகளை வன்முறையால் எதிர்கொள்ளும் போக்கே இங்கு மேலோங்கி இருந்து வந்துள்ளது. மாற்றுக் கருத்துக்களை இழித்துரைத்தல், அவர்களை 'புறத்தவர்' ஆகக் கருதுதல், ஒதுக்குதல், கழுவேற்றுதல் முதலிய அணுகுமுறைகளையே மத ரீதியான பின்னணியும் உருவாக்கித் தந்திருக்கின்றது.

இந்தச் சூழலில் தான் எமது தேசிய விடுதலைப் போராட்டத்துள் விவாதத்தின் அவசியத்தை வலியுறுத்தும் சூழல் உருவானது. ஆயினும் விவாதத்தைக் கோருபவர்கள் பெரும்பாலும் நியாயம் கோருகின்ற பலவீனமான பகுதியினராகவே இருந்தமை காரணமாக அவை பெருமளவுக்கு அடக்கப்பட்டே போய் விடும் நிலைமையே நிலவியது. வன்முறை காட்டப்படாத சந்தர்ப்பங்களில் கூட அதிகாரம், ஆட்பலம் போன்றவற்றின் அடக்குமுறைகள் காரணமாக வாதங்கள் எழுவதற்கான வாய்ப்புக்கள் வளர முடியாமல் போய்விட்டன.

ஒருபுறத்தில் விவாதம் என்பது குழப்பவாதிகளின் கொள்கை என்று பேசப்பட, மறுபுறத்திலோ விவாதித்து ஏது பயன் என்ற சலிப்பு மேலோங்கும் நிலை நிலவுவதை நாம் காணலாம். எண்பதுகளின் பிற்கூறுகளிலும் தொண்ணூறுகளிலும் தீவிரம் பெற்ற புலம்பெயர் பத்திரிகை முயற்சிகள் பெருமளவுக்கு அரசியல் தாகத்துடனான விவாதக் களத்தில் இறங்கிய போதும் விரைவில் அடங்கிவிட்டதைக் காணலாம். விடுதலைப் போராட்ட அணியுள் நடக்கின்ற விவாதங்களைப் போலன்றி இவை அங்கொன்றும் இங்கொன்றுமாக திசையற்று நடந்து முடிவில் ஓய்ந்து போய்விட்ட நிலையை அடைந்து விட்டுள்ளன இன்று.

எவ்வாறாயினும் "தேசிய விடுதலை" தொடர்பான கருத்தாக்கங்கள் ஏதோ ஒருவகையில் ஓரளவுக்காவது பேசப்படும் அளவுக்கு வந்ததென்றால் அதற்குக் காரணம் அற்பசொற்பமாகவேனும் நடந்த மேற் குறிப்பிட்ட விவாதங்கள் தான் என்று துணிந்து சொல்லலாம். ஆயினும் இந்த விவாதங்களில் மனித உரிமை, ஜனநாயகம், மக்கள் போராட்டம், ஆயுதக்கலாசாரம், தனிநபர் பயங்கரவாதம் போன்ற விடயங்கள்தான் அதிகளவில் சம்பந்தப்பட்டுள்ளனவே ஒழிய, தேசிய விடுதலை அதற்கான வேலைத்திட்டம், ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுக்கிடையிலான உறவு என்பன குறித்து என் அறிவுக்கெட்டியவரை எத்தகைய விவாதங்களும் நடைபெறவே இல்லை என்று நினைக்கிறேன்.

ஆனால் எமது இன்றைய சமாதன சூழலிலும் கூட அதிகளவில் அவசியமான விடயமாகக் கூட உள்ளவை இவை தான் என்பதை சமாதான நகர்வுகளையும் அவை பற்றிய மக்களதும் தொடர்பு சாதனங்கள் மத்தியிலும் நிலவும் கருத்துக்களையும் பார்த்தாலே புரிந்து கொள்ள முடியும்.

"தேசியவாதம்" தொடர்பாக சரிநிகரில் தொடங்கப்பட்டு அற்பாயுளில் மடிந்து போன விவாதத்தின் போது வெளிப்பட்ட கருத்துக்கள், தேசிய இனங்களுக்கிடையேயான உறவு குறித்த மிகவும் அடிப்படையான கருத்துக்கள் கூட காணப்படவில்லை என்பதை உணர்த்தின.

தமிழில் "தேசியவாதம்" என்ற சொல்லைப் பயன்படுத்தும் இடங்களில் "இனவாதம்" என்ற அர்த்தத்தைத் தருகின்ற சொல்லே எங்கள் மொழியில் பயன்பாட்டில் இருப்பதை அந்த வாதம் உணர்த்தியது. இது மிகவும் அதிர்ச்சியூட்டுகின்ற ஒரு விடயமாகும். ஏனென்றால் தமது தேசியத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட விரும்பும் ஒருவர், இனவாதி என மிக இயல்பாகவே முத்திரை குத்தப்பட்டு விடும் சூழ்நிலையை இது உருவாக்குகின்றது. இது பரஸ்பர சந்தேகங்களையும் எதிர்ப்புணர்வுகளையும் உருவாக்க

மட்டுமே வழிசெய்ய முடியும். ஏனென்றால் தமது தேசியத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட விரும்பும் ஒருவர், இனவாதி என மிக இயல்பாகவே முத்திரை குத்தப்பட்டு விடும் சூழலை இது உருவாக்குகின்றது. இது பரஸ்பர சந்தேகங்களையும் எதிர்ப்புணர்வுகளையும் உருவாக்க மட்டுமே வழிசெய்ய முடியும் என்பது வெளிப்படை. சமாதானச் சூழலில் நடக்கும் பேச்சுவார்த்தைகூட தமிழ் மக்களின் விடுதலைக்கான இன்னொரு போராட்ட வடிவம் என்றே கருத வேண்டும் என்பதால் யுத்த காலத்தில் மட்டுமல்லாமல் யுத்தமற்ற காலத்திலும் கூட தேசிய இனங்களுக்கிடையேயான பரஸ்பர கருத்துப் பரிமாற்றங்கள் நடத்தியாக வேண்டும். அதன் மூலம்தான் சந்தேகங்களையப்படவும் ஒட்டுமொத்தமான சமாதான நிலையை எட்டுவதற்கான கூட்டுச் செயற்பாடுகள் உருவாகவும் வாய்ப்புக் கிடைக்கும். இது எந்தவொரு தேசிய விடுதலை இயக்கத்தினதும் வெற்றிக்கு மிகவும் அடிப்படையான விடயமாகும். தேசம், தேசியவாதம் சார்ந்த விவாதங்கள், அதற்கான அடிப்படைகளாக பல்வேறு விடயங்களை அடையாளப்படுத்தி நடந்திருந்தன. நிலம், மொழி, வரலாற்று ரீதியான இருப்பு, கலாசாரம், பண்பாட்டுக் கோட்பாடுகள், வரலாற்று மற்றும் கலாசாரக் கற்பிதங்கள், ஒடுக்குமுறைகள் காரணமாக சமூக உருவாக்கம் இப்பல்வேறுப்பட்ட காரணங்களால் உருவாகிய மக்களின் மனோபாவம் போன்ற பலவிடயங்களை அடிப்படையாகக் கொண்டதாக இவ்விவாதங்கள் நடந்தேறியுள்ளன. இவற்றில் ஏதாவதொன்று எல்லா தேசிய இனங்களிடையேயும் மிகக் கூர்மையான வளர்ச்சி பெற்ற முரண்பாட்டுக்கான காரணமாக அமைந்திருப்பதை அவதானிக்கலாம். இக்காரணிகளின் அடிப்படையாக எழுந்த விவாதங்கள் பலவும் பல்வேறு விதமான தீர்வுகளைத் தேசியப் பிரச்சினை குறித்து வெளிப்படுத்தியுள்ளன.

எமது நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காகவும் பல்வேறு தீர்வுகள் பலராலும் காலத்துக்குக் காலம் முன்மொழியப்பட்டுள்ளதை நாம் அறிவோம். ஆயினும் இந்தத் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் பெரும்பாலும் தமிழ் தேசியத்தின் மீதான ஒடுக்குமுறை சார்ந்ததாக மட்டும் கணிக்கப்பட்டு வந்ததே அன்றி இலங்கையில் வாழும் தேசிய இனங்களின் சமாதான கூட்டு வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டதாக அமையவில்லை. சிங்கள தேசிய இனத்தை ஒரு பெருந்தேசிய இனமாக, பேணுவதில் காட்டப்பட்ட அதிதீவிர அக்கறையானது தேசிய இனங்களுக்கிடையிலான நல்லுறவுக்கான வாய்ப்பை முற்றாக இல்லாமலாக்கிவிட்டது.

சமாதான வாழ்வுக்கான ஒரு முயற்சியாக நடந்து கொண்டிருக்கும் இன்றைய பேச்சுவார்த்தை சூழலில் மிகவும் கவனமாக கணக்கில் எடுக்கப்பட வேண்டிய விடயம் இதுவாகும். சிங்கள தமிழ் மக்களுக்கிடையிலான உறவு, தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையிலான உறவு, தமிழ் மக்களிடையேயும் கூட தனித்துவப் பண்புகளுடன் மேலெழுந்து வரும் மலையக மக்களுடனான உறவு என்பவை தேசிய விடுதலையினால் பாராதீனப்படுத்தப்பட முடியாத அம்சங்களாகும். தேசிய விடுதலைப் போராட்டம், சாரத்தில் இனத்துவ அரசியலை மையமாகக் கொண்டதும் முதலாளித்துவ ஜனநாயகப் பண்பை உடையதுமாக இருப்பதன் காரணமாக அது இனங்களிடையே கசப்புணர்வுகளை உருவாக்கும் தன்மையையும் தன்னகத்தே கொண்டதாக அமைகின்றது. இனம் சார்ந்த மக்கள் அமைப்பாக்கம், வர்க்கங்களிடையேயான ஐக்கிய முன்னணிக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாக அமைகின்றது. இதனால் இனத்துவக் கருத்துக்களாக மாறுகின்ற ஆபத்தை எந்நேரமும் கொண்டதாக அது அமைகின்றது. இது குறித்த விழிப்புணர்வும் இதற்கு எதிரான போராட்டமும் மிகவும் அக்கறையுடன் செயற்படுத்தப்படாவிடில் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆத்மா கறைபட்டுப் போகின்ற நிலைமை உருவாகுவதைத் தடுத்துவிட முடியாது.

# கல்குடா முஸ்லிம்களின் திருமணம்

"*இருமனம் கலந்தால் திருமணம்*" என்பது முன்னோர் மொழியாகும். என்றாலும் இப்பிரதேச முஸ்லிம்களின் திருமண ஏற்பாடுகள் முற்றிலும் இக்கூற்றுக்கு முரணானதாகவே இருந்து வந்துள்ளன என்பதை அனுபவவாயிலாக அறிய முடிகிறது.

முந்திய காலங்களில் முஸ்லிம்கள் மத்தியிலே பெண்கள் கல்வி கற்பதென்பது அரிதாகவே இருந்தது. எனவே, இருமனம் கலக்கும் சந்தர்ப்பங்களும் குறைவாகவே காணப்பட்டன. எனினும் திருமணத்தின் பின் இருமனம் கலந்து குறைவற்ற வாழ்வு வாழ்ந்தமை குறிப்பிடத்தக்கது. பெற்றோரின் ஏற்பாடுகளை பெரிதென மதித்து வாழ்ந்தமை அன்றைய சமூகத்தில் மிகவும் வரவேற்பையே பெற்றது எனலாம்.

## திருமணச் சடங்குகள்

### செப்புக் கொண்டு போதல்

வயது வந்த பெண் ஒருவர் வீட்டில் இருந்தால் அவருக்கு பொருத்தமான மணமகன் ஒருவரைத் தெரிவு செய்ய அன்றைய சமூக அமைப்பில் செல்வாக்குப் பெற்ற ஆலிமு ஒருவரிடம் பெண்ணின் தந்தை கூறுவார். ஆலிமு தனது கடமைகளின் போது மக்களை நன்கு அறிந்து வைத்திருப்பார். எனவே, தன்னிடமுள்ள செல்வாக்கையொட்டி ஒருவரைச் சிபார்சு செய்வார். அவர் பெண்ணின் பெற்றோர் அதனை ஏற்றுக் கொண்டால் மாப்பிள்ளை வீட்டாரை ஆலிமு சம்மதிக்கச் செய்வார். இதன்பின்னர் பெண் வீட்டிலிருந்து மாப்பிள்ளை வீட்டுக்கு மாப்பிள்ளை கேட்டு செப்புக் கொண்டு செல்வர். இதற்கான ஏற்பாடுகள் பெரும் தடல்புடலாக நடைபெறும். உற்றார் உறவினர் அண்டை அயலார் அனைவரையும் அழைத்து ஆலோசனை நடாத்தி, பலகாரங்கள் போன்ற இனிப்புப் பண்டங்கள் செப்பு எடுத்துச் செல்லப்படும். உண்மையிலே இது ஒரு கோலாகலமான நிகழ்ச்சியாகவே காணப்படும். பெண்கள் இதில் கூடுதலாக பங்கேற்பர். குரவையும் வெடியும் குதூகலமும் நிறைந்து கிடக்கும். விருந்தோம்பல் வெகுசிறப்பு அம்சமாக விளங்கும். செப்பு வந்து மறுதினம் ஆலிமு சகிதம் உறவினர் ஒன்று சேர்ந்து செப்பை அவிழ்ப்பர். அவர்களே முதலில் ஒன்று சேர்ந்து சுவை அறிபவர்களாகவும் இருப்பர். அவிழ்த்த செப்பில் இருந்த பொருட்கள் அண்டை அயலார் உற்றார் உறவினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும். அடிக்கடி இருசாராரும் வருவதும் போவதுமாக உறவு கொண்டாடுவர்.

### பெட்டி கொண்டு செல்லல்

பெண் வீட்டார் கொண்டு வந்த ஏனங்கள் மாப்பிள்ளை வீட்டாரிடமும் மற்றவர்களிடமும் தேங்கிக் கிடக்கும். இதனை ஒன்று சேர்த்து பெண் வீட்டுக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். இதிலும் பலகாரம், வாழைப்பழம், இனிப்புப் பொருட்கள் என்பன முக்கிய இடம் பெறும். ஏற்கனவே செப்பு பொருட்கள் பெற்றவர்கள் இதனை அனுப்புவர். மணமகளுக்கான கூறைச்சேலை போன்ற வையும் இத்துடன் அனுப்பி வைப்பர். வைபவம் செப்பு கொண்டு செல்வது போன்றே இடம்பெறும். பெண்ணை அழகு பார்க்கும் நிகழ்ச்சியும் முக்கியமாக இதில் இடம் பெறும். இரு வீட்டாரும் சுமுகமான சூழ்நிலையில் பழகுவர்.

### கல்யாணம் பேசுதல்

ஆலிமு பின்னர் ஒரு நல்ல நாளில் திருமணம் பேசுவதற்கான அறிவிப்பைக் கொடுப்பார். இருசாராரும் ஏற்பாடுகளைச் செய்வர். பெண் வீட்டார் ஆலிமு சகிதம் உற்றார் உறவினர் புடைசூழ மணமகன் வீட்டிற்குச் செல்வர். இந்த நிகழ்ச்சியில் ஆண்களே கூடுதலாக இடம்பெறுவர். மணமகள் வீட்டின் சார்பாக பேச்சு ஆரம்பிக்கப்படும். கைக்கூலி சீதனம் போன்ற ஏற்பாடுகளும் இவ்வைபவத்திலே வெளிப்படையாகவே பேசி தீர்வு காணப்படும். இருசாராரும் இணக்கம் கொண்டால் திருமணத்திற்கான திகதி தீர்மானிக்கப்படும். இத்திகதி பிறைக்கணக்கு அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும். பெரும்பாலும் வளர்பிறை நாட்களே பொருத்தமான நாளாகத் தேர்ந்தெடுக்கப்படும். சில சந்தர்ப்பங்களில் கொடுக்கல் வாங்கல் பேச்சுவார்த்தைகளில் இணக்கம் காணப்படா விட்டால் திருமண ஏற்பாடுகள் முறிவடைவதும் உண்டு. பேச்சுவார்த்தையில் சுமுகமான தீர்வு ஏற்பட்டால் மணமகனுக்கு பெண்ணின் தந்தை மோதிரம் அணிவிப்பார். சிற்றுண்டி வைபவத்துடன் சிறப்பாக வைபவம் முடிவுறும். மறுதினம் பெண் வீட்டிலிருந்து மாப்பிள்ளை வீட்டுக்கு புட்டுப் பெட்டி அனுப்பப்படும்.

### திருமண அழைப்பு

நல்ல நாள் தீர்மானிக்கப்பட்டதும் கல்யாண ஏற்பாடுகள் தொடங்கும். முதலில் இரு வீட்டாரும் அழைப்புக் கொடுக்க ஆரம்பிப்பர். தற்கால நடைமுறையிலுள்ள அழைப்பிதழ்கள் வழங்கும் வழக்கம் அப்போது குறைவாகவே இருந்தது. வட்டா என்ற ஒரு பாத்திரத்தில் வெற்றிலையும் பாக்கும் வைத்து வெள்ளைத் துணியால் மூடி மிக மரியாதையுடன் அழைப்புக்கள் கொடுக்கப்படும். உண்மையிலேயே இது ஒரு மதிப்புமிக்க அழைப்பாகவே மக்கள் ஏற்றுக் கொள்வர். தவறாது வைபவத்திலும் கலந்து கொள்வர்.



ஏ.எம். அப்துல் காதர்
ஓய்வு பெற்ற உதவிக்கல்விப்பணிப்பாளர்

### விருந்தும் மௌலூதும்

இருசாரார் வீட்டிலும் விருந்துபசாரமும் மௌலூதும் இடம்பெறும். என்றாலும் மணமகள் வீட்டில்தான் திருமணம் என்பது அண்ணல் நபி (ஸல்) அவர்களின் சுன்னத்து என தீர்மானிக்கப்பட்ட நிகழ்ச்சியான படியால் அவர்களின் புகழ்பாடும் நிகழ்ச்சியாகவே இதுகருதப்படும். மிகவும் பாசத்துடனும் மரியாதையுடனும் இந்நிகழ்ச்சி நடாத்தப்படும். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஓதுபவர்களுக்கு அன்பளிப்பாக பணமும் வழங்கப்படுவதுண்டு. பள்ளிவாசல்களில் கடமைபுரியும் ஆலிமு, லெப்பை, முஅத்தின் போன்றோர் இந்நிகழ்ச்சியில் முக்கிய இடம் பெறுவர்.

### மருதோன்றி மாற்றுதல்

மௌலூதும் விருந்தும் முடிந்த பின்னர் பெண்கள் ஒன்று கூடி மருதோன்றி போடும் நிகழ்ச்சியை ஆரம்பிப்பர். பெண்களே முழுக்க முழுக்க இதில் இடம்பெறுவர். மருதோன்றிக் கல்யாணம் தான் சிறப்பானது என்பது பெண்கள் கருத்து. மேள வாத்தியமும் குரவையும் வெடியும் இவ்வைபவத்தில் அதிகமாக இடம்பெறும். சில நேரங்களில் இந்நிகழ்ச்சி விடியற்சாமம் வரை நடைபெறும். பங்கு பற்றுகின்ற பெண்களுக்கு உதவியாக செல்லும் ஆண்கள் மிகவும் பொறுமையை மேற்கொள்ள வேண்டியும் ஏற்படும். பெண்ணுக்கு முதல் மருதோன்றி அணிவித்து விட்டே மாப்பிள்ளை வீட்டுக்கு மருதோன்றி கொண்டு செல்லும் பொழுதே இவ்வாறான கஸ்டங்கள் ஏற்படும். நான் பெரிது. நீ பெரிது என்ற போராட்டம் இருசாராரிடமும் காணப்படும். பின்னர் சமரசம் ஏற்பட்டு வைபவம் முடிவு பெறும். பெரும்பாலும் இந்நிகழ்ச்சி இரவு நேரங்களிலேயே இடம் பெறும்.

### காவின் எழுதுதல்

மணமகன் ஊர்வலத்தில் வரும் பொழுது மச்சான் முறையான இருவர் குடைபிடித்துச் செல்வர். மணமகள் வீட்டை வந்தடைந்ததும் பெண்ணின் சகோதரர் அல்லது உறவினர் மணமகளுடைய காலை, தேங்காய்ப் பாலினாலும், நீரினாலும் கழுவி விடுவார். அவர் சுத்தமான ஒருவராக புதுவாழ்வை ஆரம்பிப்பதற்கு இந்நிகழ்ச்சி ஒரு எடுத்துக்காட்டாக அமையும். தனது கால்களை கழுவியவருக்கு தனது மோதிரம் ஒன்றை மணமகன் அணிவித்து மகிழ்ச்சி கொள்வார். சற்று நேரம் பந்தலில் தாமதித்த பின் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்படுவார்.

### தாலி கட்டுதல

இந்த வழக்கம் இஸ்லாத்தில் இல்லாத ஒன்று. என்றாலும், நமது சகோதர சமூகத்தினரான தமிழரிடமிருந்து பெற்ற ஒரு நிகழ்ச்சியாகவே இது கருதப்படுகின்றது. கட்டாயமாக இடம்பெற்றும் வருகின்றது. மணமகனின் தாய் அல்லது சகோதரி தாலியை மணமகனிடம் வழங்கி மணமகன் தாலியை மணமகளுக்கு அணிவிப்பார். அதனைத் தொடர்ந்து ஆலிமு துஆ பிரார்த்தனை செய்வார். மணவறையில் பெண்களும் மணமகனின் தகப்பன் சகோதரர் போன்றவர்களும் இடம்பெற்றிருப்பர். சிற்றுண்டி வைபவத்துடன் நிகழ்ச்சி நிறைவு பெறும்.

### வாழ்த்துக்கள

மணவறை சோடித்து அதில் மணமக்களை வைத்து ஏழு இரவுகள் வாழ்த்துகின்ற ஒரு வைபவம் மிக சிறப்பாக நடைபெறும். கொட்டு முழக்கம் குரவை வெடியும் மணமகன், மணமகள் கரங்களில் இருக்கும் பொருட்களை சொட்டுவதும் பெரும் மகிழ்ச்சியான நிகழ்ச்சியாகக் காணப்படும்.

### கால்மாறிச் செல்லல்

மணமகளில்லத்தில் ஏழு நாட்கள் கழித்த பின்னர் மணமகனின் உறவினர்கள் வந்து தண்ணீர் வார்த்து மணமக்களை அழைத்துச் செல்வர். இதுவும் ஒரு சந்தோசமான நிகழ்ச்சியாகவே இடம்பெறும். குரவை இடுதல் விசேஷமாக இந்நிகழ்ச்சியில் இடம்பெறும். கால்மாறிச் சென்று ஒரு தினத்தின் பின்னர் மணமகள் வீட்டுக்கு தம்பதிகள் சென்று விடுவர். இதன் பின்னர் மணமகன் தனியாகவும், தம்பதிகளாகவும் உறவினர் வீடுகளுக்குச் செல்வர். விருந்துபசாரமும், அன்பளிப்புகளும் அவரவர் தகுதிக்கேற்ப நடைபெறும். பெண் வீட்டார் சுவையான பலகாரங்களை தம்பதி மூலம் அனுப்பி வைப்பர்.

உண்மையிலேயே அன்று வாழ்ந்த மக்கள் கல்வி அறிவில் குறைந்து காணப்பட்டாலும், கபடமற்றவர்களாக சூதுவாது அற்றவர்களாகக் காணப்பட்டதால் இந்த நடைமுறைகளை வெகு விமரிசையாகவும் சிறப்பாகவும் கடைப்பிடித்து வாழ்ந்து வந்தனர்.. ஆனால் இன்றோ?..

நன்றி : மருதோன்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு துறைமுக முஸ்லிம் ஊழியர்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும்

இலங்கைத் துறைமுக அதிகார சபையில் தொழில் புரியும் முஸ்லிம் ஊழியர்கள் பலர் பெரும்பான்மை இன அதிகாரிகளினால் பெரிதும் பாதிக்கப்படுவதாக தெரிவித்து வருகின்றனர்.

குறிப்பாக கொழும்பு துறைமுகத்தில் தொழில் புரியும் முஸ்லிம் ஊழியர்களே பல வகையான பழிவாங்கல்களுக்கும், நச்சரிப்புக்களுக்கும் ஆளாக்கப்படுவதாக தெரிவிக்கின்றனர். முஸ்லிம் அமைச்சர் ஒருவரே துறைமுகத்திற்கு பொறுப்பாக இருக்கின்ற போதும் இவ்வாறான இனத்துவ வேறுபாடுகள் அங்கு அதிகரிப்பதற்கான காரணங்கள் என்ன என்பதை ஆராயும்போது முஸ்லிம் ஊழியர்களால் முன்வைக்கப்பட்ட காரணங்களையும் குற்றச்சாட்டுக்களையும் இங்கே தருகிறோம்.

செயலாளர்கள், அந்தரங்கச் செயலாளர்கள், ஆலோசகர்கள், இணைப்புச் செயலாளர்கள் எனப் பல நிருவாக அதிகாரிகளை அமைச்சர் ரவூப் ஹக்கீம் கொண்டிருக்கின்ற போதும் துறைமுகத்தில் பாதிக்கப்பட்ட ஒரு நபர் சென்று முறையிடும் போது அதற்குரிய சரியான நீதி நிவாரணங்களை அவர்களால் பெற்றுக் கொடுக்க முடியாதுள்ளது. அமைச்சர் ரவூப் ஹக்கீம் அல்லது அவருக்குக் கீழுள்ள அதிகாரிகளோ விடுக்கின்ற எந்தவொரு பணிப்புரைக்கும் ஏற்ப துறைமுக அதிகார சபையின் உயர் அதிகாரிகள் நடந்து கொள்வதாக தெரியவில்லை.



அமைச்சு மட்டத்திலிருந்து விடுக்கப்படும் எந்தவொரு கட்டளைகளையும் அவர்கள் ஏற்று நடப்பதாகவும் தெரியவில்லை. அவ்வாறு அவர்கள் ஏற்று நடக்காது உதாசீனம் செய்யும் பட்சத்தில் அதற்கு மாற்றீடான அல்லது எதிரான எந்தவொரு நடவடிக்கைகளையும் அமைச்சு மேற்கொள்வதில்லை. இதனால்தான் துறைமுக அதிகாரசபை உயர் அதிகாரிகள் எதுவித பயமுமின்றி முஸ்லிம் ஊழியர்கள் மீதான பழிவாங்கல்களை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை அதிகாரத்திலிருப்பவர்களைப் பயன்படுத்தி நீதி நியாயங்களை பெறுவதற்கு முனைந்து தப்பித்தவறி ஏதாவது சாதித்துக் கொண்டால்கூட அதனால் கிடைக்கின்ற தற்காலிக நிவாரணத்தை விடவும் எதிர்காலத்தில் அது மிக மோசமான பின் விளைவுகளை ஏற்படுத்தும். ஆட்சி அதிகாரத்திலிருப்பவர்கள் இன்றா நாளையா என்றிருக்கும் நிலையில் அவர்கள் செய்வதை செய்துவிட்டு சென்று விடுவார்கள். ஆனால் நாங்கள் தொடர்ந்தும் பெரும்பான்மை இனத்தவர்களோடு தொழில் புரிய வேண்டிய நிலையிலுள்ளோம். எனவே பின்னர் அவர்களது பழிவாங்கல்களுக்கு ஆளாக வேண்டி ஏற்படும் எனவும் பலர் அஞ்சுகின்றனர்.

இதனால்தான் பெரும்பாலான ஊழியர்கள் தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை வெளியில் சொல்லி நியாயம் தேட மறுக்கின்றனர் எனவும் ஊழியர்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர்.

பொதுவாக துறைமுக ஊழியர்கள் தங்களது தேவைகளை பிரச்சினைகளை முறையிடுவதற்கு இரண்டு இடங்கள்தான் உள்ளன. ஒன்று தொழிற்சங்கம், மற்றது அமைச்சு! அமைச்சு மட்டத்தில்தான் முஸ்லிம் ஊழியர்களுக்கு இந்நிலை என்றால் தொழிற்சங்கங்களிடம் சென்றாலும் அதைவிட மோசமான நிலையே காணப்படுகின்றது.

தொழிற்சங்கங்கள் அனைத்திலும் பெரும்பான்மை இனத்தவர்களே பொறுப்பாக உள்ளனர். அவர்களிடமும் இந்த இனத்துவேச வெளிப்பாடுகள் இருக்கத்தான் செய்கின்றன.

குறிப்பாக ஜாதிக சேவக சங்கம் (ஜே.எஸ்.எஸ்) எனும் ஐ.தே.கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்தச் சங்கம் தான் தற்போது அதிகாரத்திலும், செயற்பாட்டிலும் முன்னணியில் இருக்கின்றது. காரணம் ஐ.தே.கட்சி ஆட்சியிலிருப்பதாலும், ஜாதிக சேவக சங்கத்தின் தலைவரே துறைமுக அதிகார சபையின் செயற்பாட்டு பணிப்பாளராக (Working Director) இருப்பதனாலுமாகும்.

இங்குதான் பிரச்சினையே உள்ளது. அமைச்சர் ஹக்கீமுக்கோ அல்லது அவரது அமைச்சிலுள்ள அதிகாரிகளுக்கோ எவ்வித அதிகாரமும் கிடையாது. அவர்கள் மிகவும் மந்தமாகவே இருக்கின்றனர். ஆனால், துறைமுக அதிகார சபையின் முழு அதிகாரமும் ஜாதிக சேவக சங்கத்தின் தலைவராகவும், செயற்பாட்டு பணிப்பாளராகவும் உள்ள பெரும்பான்மை இனத்தை சேர்ந்த மகிலால் என்பவருக்கே உள்ளது. அவர்தான் துறைமுகத்தின் அமைச்சராக இருக்கின்றார் என்ற ஒரு கருத்து அண்மைக்காலமாக துறைமுக ஊழியர்கள் மத்தியில் நிலவி வந்தது.

இது அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு பெரும் தலையிடியைக் கொடுத்ததொரு விடயமாகும். மகிலால் என்பவரது செயற்பாடுகள் பற்றி பலரும் பல தடவைகள் அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் எடுத்துக் கூறியிருக்கின்றனர். பெரும்பான்மை இனத்தவர்கள் தங்களது தேவைகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்கின்றனர். அவர்கள் நினைத்த அத்தனை விடயங்களையும் மகிலால் மூலமாக நிறைவேற்றிக் கொள்கின்றனர். மகிலால் இடும் எந்தவொரு கட்டளையையும் துறைமுக அதிகாரிகள் புறக்கணிப்பது கிடையாது. இவ்வாறு அவர் மிகவும் மோசமாக செயற்படுகின்றார் என பல்வேறு புகார்களை முஸ்லிம் ஊழியர்கள் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

இதன் பின்னர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேற்கொண்ட எந்தவொரு நடவடிக்கைக்கும் மகிலால் கட்டுப்பட்டதாகத் தெரியவில்லை. இதனால்தான் என்னவோ அமைச்சர் ரவூப் ஹக்கீம் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தனக்கு விசுவாசமான பாறூக் மஜீத் என்பவரை இன்னுமொரு செயற்பாட்டுப் பணிப்பாளராக (Working Director) அண்மையில் நியமித்தார்.

இது அமைச்சருக்கு கௌரவத்தைப் பெற்று கொடுத்ததோ என்னவோ யதார்த்தமாக நோக்கும் போது ஏற்கனவே முஸ்லிம் ஊழியர்களுக்கு இருந்த நிலையை விடவும் இப்போது ஒருபடி கூடியுள்ளதாகவே கருதவேண்டியுள்ளது. காரணம் இப்போது முஸ்லிம் ஊழியர்கள் யாரும் ஜாதிக சேவக சங்கத்திற்கு சென்று எதுவும் செய்துகொள்ள முடியாது.

அவ்வாறு ஏதாவது தேவைகள் நிமித்தமாக அங்கு சென்றால் அவர்களது இனத்துவேச வெளிப்பாட்டை நேரிடையாகவே காணக்கூடியதாக உள்ளது. உங்களது அமைச்சரிடம் செல்லுங்கள் அல்லது உங்களது பாறூக் மஜீதிடம் செல்லுங்கள் என்பது போன்ற வாசகங்களையே அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏனைய தொழிற்சங்கங்களுக்கு தற்போது எவ்வித அரசியல் அதிகாரமும் கிடையாது. இதனால் முஸ்லிம் ஊழியர்கள் அமைச்சு அதிகாரிகளிடம் சென்று சரியான நிவாரணம் பெறவும் முடியவில்லை. அதேபோல் அரசியல் அதிகாரம் உடைய தொழிற்சங்களிடமும் உரிய தீர்வை பெற முடியாத நிலையில் உள்ளனர். (பாறூக் மஜீட் இவர் அதாவுல்லா அணியை ஆதரித்து பின் கட்சி மாறியதற்காக இரவோடு இரவாக வழங்கப்பட்ட பதவி இது.)

இது இவ்வாறிருக்க பாறூக் மஜீத்தும், மகிலால் என்பவரும் செயற்பாட்டுப் பணிப்பாளர்களாக இருக்கின்றபோது இதில் யாருடைய கட்டளையை ஏற்பது யாருடைய கட்டளையை நிராகரிப்பது என்ற விடயத்தில் துறைமுக உயர் அதிகாரிகள் பெரிதும் குழம்பிப் போய் உள்ளனர். ஒன்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் மகிலாலை நீக்கிவிட்டு அந்த இடத்திற்கு பாறூக் மஜீதை நியமித்திருக்கலாம் அல்லது இதற்கு மாற்றீடான வேறு ஏதாவது நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கலாம்.

மொத்தத்தில் எது எப்படியோ ஒட்டுமொத்தமாக பாதிப்புக்குள்ளாகியிருப்பது முஸ்லிம் ஊழியர்கள்தான். அவர்கள் என்ன என்ன வகையில் பாதிப்புக்கு ள்ளாகின்றனர். எவ்வாறு பழிவாங்கப்படுகின்றனர் என்பதை வாய்விட்டுக் கூற முடியாதுள்ளது. எப்படியாயினும் முஸ்லிம் ஊழியர்கள் பதவி உயர்வு பெற்று விடக்கூடாதென்பதில் பெரும்பான்மை இனத்தவர்கள் தெளிவா கவே இருக்கின்றனர். குறிப்பாக அண்மையில் ஒரு தொகை கொடுப்பன வுக்கமைவாக கிட்டத்தட்ட ஆறாயிரம் பேர் வேலையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்று விட்டனர்.

எஞ்சியிருப்பவர்களில் உயர்வான கல்வித்தகைமையும் நீண்டகாலம் பணிபுரியும் வயதெல்லையும் உடையவர்களாக முஸ்லிம் ஊழியர்களே காணப்படுகின்றனர். எனவே ஒரு காலத்தில் துறைமுக அதிகார சபையின் உயர் பதவிகள் பலவற்றுக்கு முஸ்லிம்கள் வரக்கூடிய வாய்ப்பும் அதிகமாகவே உள்ளது. எனவே இந்நிலை தோன்றி விடவே கூடாதென்பதில் மிகவும் உறுதியாகவும் பெரும்பான்மை இனத்தவர்கள் இருக்கின்றனர்.

**கொழும்பு துறைமுக முஸ்லிம் ஊழியர்கள்**

# குடிகார தந்தை! ஓட்டம் பிடித்த தாய்! 6 குழந்தைகளின் எதிர்காலம் கேள்விக்குறி!

மது அரக்கன், ஒரு குடும்பத்தை எந்த அளவுக்குப் பிளவுபடுத்திக் கொண்டிருக்கிறான் என்பதைப் பல ரூபத்தில் நாம் பார்த்தும், கேட்டும், படித்தும் வந்திருக்கின்றோம். மது ஏற்படுத்திய தாக்கங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, அனைத்து சமூகப் பிரச்சி னைகளின் தாயாக இருக்கும் மது ஒரு தாயை ஆறு குழ்ந்தைகளிடமிருந்து பிரித்தது என்பதைச் செவிமடுக்கும் போது நமது நாடித் துடிப்பே நின்று விடும் போல் இருக்கின்றது.

**நீங்களும் படிக்கலாம் சில குறிப்புகள்...**

தன் கருவில் உருவான 6 பிள்ளைச் செல்வங்களை கருணை உள்ளம் கொண்ட ஒரு தாய் உதாசீனப்படுத்தி விட்டு, யாருடைய சொந்தமும் வேண்டாம் - பந்தமும் வேண்டாம் என தன் வீட்டை விட்டே ஓடிவிட்டார் என்றால், அதற்கு பின்னால் ஏதோ ஒரு புதிர் இருக்கின்றது. அது வேறு ஒன்றுமல்ல மது அரக்கன்தான்.

படத்தில் காணப்படும் தோசினமேரிக்கு இப்பொழுது வயது நான்கு. தோசின மேரி ஒன்பது மாதக் குழந்தையாக இரு ந்த பொழுது அவர் தீ விபத்துக்குள்ளாகி உடல் முழுவதும் தீப்புண் காயங்கள் ஏற்பட்டன.

தோசின மேரியின் தாய் எரிந்து கொண்டிருந்த மண்ணெண்ணெய் விளக்கில் மண்ணெண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்த சமயத்தில் அது திடீரென்று தீப்பற்றிக் கொண்டது. தன் உடலில் ஏற்பட்ட தீயை அணைப்பதற்காக வெளியே ஓடிய தாய் அறையினுள் இருந்த குழந்தையை மறந்து விட்டார். மண்ணெண்ணெய் விளக்கின் அருகாமையில் இருந்த மண்ணெண்ணெய் டின்னும் வெடிக்க ஆரம்பித்து தூங்கிக் கொண்டிருந்த குழந்தையின் மீது தீ பிடித்துவிட்டது. அதன் பிறகு குழந்தையின் அலறல் கேட்ட பின்புதான் மற்றவர்கள் உதவ ஓடி வந்திருக்கிறார்கள். தாய்க்கும் தீச்சேதம், குழந்தைக்கும் அதைவிட அதிகமான தீக்காயங்கள். பொறுப்பற்ற நிலையில் இருக்கும் கணவன், அவனது ஓயாத தொல்லை, அடி உதை - தனக்கு எதிர்காலமே இல்லை என நினைத்தாரோ என்னவோ தெரியவில்லை, தன் கரு வில் உருவான பிள்ளைச் செல்வங்களை தவிக்க விட்டு விட்டு எங்கேயோ கண் காணாத இடத்துக்குப் போய்விட்டார் அந்தத் தாய். அந்த தாய் செய்தது சரியா தவறா என்பது இங்கு முக்கியமல்ல. ஆனால், இப்படிப்பட்ட பிரச்சினைகள் உருவாவதற்கு முக்கிய காரணம் என்ன?

பதினெட்டு வயதிலேயே திருமணம், முறையான திட்டமிடாத வாழ்க்கை, குடிகார கணவன், நிரந்தரமில்லாத தொழில், கணவனின் அடி, உதை, பிறகு குடும்ப வாழ்க்கையில் எங்கே ஒளி பிறக்கும்? முன்னேற்றம் எப்போது ஏற்படும்? இப்போது இந்த ஆறு குழந்தைகளும் உறவினர் வீட்டில் தங்கியிருக்கிறார்கள். அந்த உறவினர் உண்மையில் மனிதாபிமானம் கொண்டவர். இல்லை என்றால் தன்னுடைய ஆறு குழந்தைக ளோடு, மேலும் ஆறு குழந்தைகளை தன் குழந்தைகளோடு தங்குவதற்கு அனுமதி கொடுத்திருப்பாரா? இது உண்மையில் பாராட்ட வேண்டிய ஒரு விஷயமாகும். தலையின் வலது புறம், கரங்கள் மற்றும் உடலின் ஒரு பாகமும் கடுமையான தீப்புண்களுக்கு ஆளான தோசின மேரி கோலாலம்பூரின் பெரிய மருத்துவமனையில் ஒரு வருடம் மருத்துவச் சிகிச்சை பெற்றார்.

அதன் பிறகு ஏற்பட்ட பிரச்சினையில் தோசின மேரிக்கு மருத்துவ சிகிச்சை தொடர முடியா மல் போய்வி ட்டது. இதன் பிறகு கணவனு க்கும் மனைவி க்கும் அடிக்கடி சண்டை, கணவனின் ஓயாத அடி உதை. பொறுப்பற்ற தந்தைக்கு முறையான நிரந்தரமான தொழில் இல்லை. தினமும் ஏதாவதொரு கூலித் தொழில் செய்து கிடைக்கின்ற பணத்தில் சாராயத்தைக் குடித்து காலம் தள்ள வேண்டியதே இந்த தந்தையின் பணி. தந்தை குடித்து விட்டு வீடு செல்வார்.



மனைவியோடு சண்டை போடுவார்.

அந்த ஆறு குழந்தைகளும் தாயின் முகத்தைப் பார்த்து ஒரு வருடம் ஆகிவிட்டது. தந்தையோ வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒரு முறை தான் குழந்தைகளைப் பார்க்க வருகின்றார்.

குழந்தைகளுக்கு அம்மா வீட்டை விட்டு ஓடியதும் தெரியும். அப்பா அம்மாவை அடித்ததும் தெரியும். அப்பா குடிப்பதும் தெரியும். ஆனால் அவர்களால் என்ன செய்ய முடியும்.

ஆனால் அந்த அப்பாவும் சரி, அம்மாவும் சரி இருவருக்குமே தங்கள் குழந்தைகளைப் பற்றி அக்கறை கிடையாது. அந்தப் பச்சிளம் குழந்தைகளின் எதிர்பார்ப்புக்களை, எதிர்காலத்தை மகிழ்ச்சியைப் புறக்கணித்து விட்டனர் இந்த சுயநலப் பெற்றோர்.

இந்த ஆறு குழந்தைகளும் தாய் தந்தை இருவரையும் பிரிந்துதான் வாழ வேண்டுமா? இவர்கள் மாதிரியே இன்னும் எத்தனை குடும்பங்கள் மது குடிக்கும் தந்தைகளினாலும், பொறுப்பற்ற தாய்மார்களினாலும் திசை தெரியாமல் சென்று கொண்டிருக்கின்றனவோ.

சமுதாயத்தில் பலருக்கு நாற்காலி ஆசை, வேறு சிலருக்கு பட்டம் கிடைக்க வேண்டுமே என்ற ஆசை, நிலைமை இப்படி இருக்கையில் இம்மாதிரியான சூழ்நிலையில் வளர்ந்த குழந்தைகள் கைவிடப் படுவதும், அதைக் கண்டு நாம் ஒன்றும் செய்யாமல் இருப்பதும் ஆச்சரியப்படும் விஷயம் ஒன்றல்லவே!.

# சோவியத்துக்கு நடந்ததுதான் அமெரிக்காவுக்கும் நடக்கும்!

**கலாநிதி யூசுப் கர்ழாவி உலகளவில் நன்கறியப்பட்ட இஸ்லாமிய சிந்தனையாளர். இஸ்லாமிய உம்மத் சம்பந்தப்படுகிற "பூகோள" விவகாரங்கள் தொடர்பில் தனித்துவமானதும், ஆணித்தரமானதுமான கருத்துக்களை முன்வைப்பவர். அரபு மொழியில் பல்வேறு முக்கிய நூல்களை எழுதியுமுள்ள இவர், தற்காலத்தின் இஸ்லாமிய சட்டவியல் விற்பன்னராகவும் கருதப்படுகிறார். நவீன விவகாரங்கள் தொடர்பான இவரது இஸ்லாமிய சட்டத் தீர்ப்புகள் பிரபல்யமானவை. அண்மையில் இந்திய கேரள மாநிலத்தில் இஸ்லாமியப் பல்கலைக்கழகமொன்றின் திறப்புவிழாவில் கலந்து கொள்ள வருகை தந்த அவரின் நேர்காணல் கீழே தரப்படுகிறது.**
**இந்த நேர்காணல் ஈராக் யுத்தம் தொடங்குவதற்கு சில நாட்களின் முன்னர் எடுக்கப்பட்டதென்பதை வாசகர்கள் கவனத்திற் கொள்க.**

*ஈராக்கிய பிரச்சினை, சதாம் ஹுஸைன், அமெரிக்கத் தாக்குதல் இவை பற்றிய தங்களின் கருத்து என்ன?*

அமெரிக்காவின் ஈராக் மீதான யுத்தத்தை பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்தின் ஒரு பகுதியாகச் சொல்லப்படுகிறது. மொத்தத்தில் நான் இந்த நிலைப்பாட்டை இவ்வாறான ஒரு கருதுகோளை முற்றாக நிராகரிக்கிறேன். இது பலவீனமான நாடுகளின் மீது குறிப்பாக முஸ்லிம் நாடுகளின் வளங்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் அமெரிக்காவின் காலணித்துவத் திட்டங்களின் ஒரு பகுதி. ஈராக், சதாம் என்பவை இவற்றை மறைக்கப் பயன்படும் முகமூடிகள், உருவாக்கப்பட்ட பொய்மைகள். பேரழிவு தரும் ஆயுதங்களை அழிக்குமாறு ஈராக்கைக் கேட்டிருக்கிறார்கள். ஆனால், கேள்வி என்னவென்றால், இவ்வாறான ஆயுதங்களை இரசாயனங்களை சதாமுக்கு விநியோகித்தது யார் என்பது தான்?

*இந்த பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்திற்கு வேறு பரிமாணங்கள் உண்டா?*

ஆம்! நிறைய இருக்கிறது. அதில் ஒன்று இஸ்ரேலின் சியோனிச சாம்ராஜ்யக் கனவுக்கு உதவுவது. எகிப்து, சவுதி அரேபியா உட்பட பல நாடுகளைக் கையகப்படுத்தும் "சியோனிச சாம்ராஜ்ய" உருவாக்கத்தை நோக்காகக் கொண்டே இது இடம் பெறுகிறது. அத்துடன் முஸ்லிம் தேசங்களை (Muslim Nations) பிளவுபடுத்தி ஒருமைப்பாட்டைக் குலைப்பதும் ஒரு நோக்கம். அமெரிக்க அதிகார மையங்கள் அரபுலகின் சமூக, அரசியல் கட்டுமானத்தை மீளமைக்கும், மீளுருவாக்கும் தங்கள் விருப்பத்தை அதற்கான வடிவத்தை தெளிவாகவே வெளிக்காட்டியிருக்கின்றன. அமெரிக்க "திட்ட நிரலை" முஸ்லிம் நாடுகளைக் குறியாகக் கொண்டு செயல் முனைவுபடுத்துவதிலும் தீவிரமாக இறங்கியிருக்கின்றன. நீண்ட காலமாகவே அமெரிக்க கொள்கை வகுப்பில் சியோனிச நேரடி ஆதிக்கமும், ஊடுருவலும் காணப்படுகின்றன. சியோனிய ஆதிக்கம் பெற்ற கிறிஸ்தவ அடிப்படைவாதக் குழுக்களும் கொள்கை வகுப்பில் தங்கள் மறைக்கரங்களை செலுத்தி வருகின்றன. அமெரிக்கா மேற்கொள்ளும் புதிய யுத்தங்கள் எந்த வடிவத்தில் அமைப்பில் இருக்க வேண்டுமென்பதை முன்னாள் அமெரிக்க அரச செயலாளர் ஹென்ரி கிஸ்ஸிங்கர் தெளிவாக ஏற்கனவே விளங்கப்படுத்தியிருப்பதாக எகிப்திய கல்விமான் மஹ்மூத் அல் - மராகி கூறியிருப்பதை இதனோடு தொடர்பு படுத்தி நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.



இது தவிர அமெரிக்காவின் மனோபாவம் எப்போதும் இஸ்லாத்திற்கெதிரானதாகவே இருந்து வருகின்றது. அண்மையில் ஜனாதிபதி புஷ், ஆப்கான் நிலவரம் தொடர்பில் "சிலுவை யுத்தம்" என்ற சொல்லாடலைப் பாவித்ததை நினைத்துப் பாருங்கள். (பின்னர் இது 'நாத்தவறு' என்று சமாளித்திருந்தார்) அமெரிக்க ஆதிக்கம் முஸ்லிம் நாடுகளின் மனிதாபிமான உதவி வழங்கும் அமைப்புக்களைக் கூட விட்டுவைக்கவில்லை. *அமெரிக்கா முஸ்லிம்களின் அடையாளத்தை அழித்தொழிக்கத் துடிக்கிறது என்பது வெளிப்படை. வாஷிங்டனிலிருந்து வரும் "நிபுணர்கள்" இஸ்லாமியக் கல்வி நிலையங்களின் பாட விதானங்களை பரிசீலித்தும், மீளெழுதியும் கொண்டிருக்கின்றனர்.* அத்துடன் இன்னொரு யதார்த்தம் என்னவென்றால், உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு வரும் இஸ்லாமிய மீளெழுச்சியும், அதன் வெளிப்பாட்டு விடயங்களும் அமெரிக்காவுக்கு கடும் பயத்தைக் கொடுத்திருக்கின்றன. இஸ்லாமிய மீளெழுச்சிச் செயற்பாடுகள் அமெரிக்க ஏகாதிபதிய சுரண்டல் போக்குக்கு நேரடி முதல் எதிரியாய் இருப்பதை அது புரிந்தும், பயந்தும் இருக்கிறது.

*நீங்கள் பலத்த ஆதரவு காட்டுகிற பலஸ்தீனியப் போராட்டம் பற்றிய உங்கள் நிலைப்பாடு என்ன?*

பொதுவாகவே எல்லா தேச வழமைச் சட்டங்களும் ஒரு மனிதனின் உயிர் உடமை பறித்தெடுக்கப்படுவதற்கெதிராக தற்காப்பு, பாதுகாவல் நடவடிக்கை மேற்கொள்வதை ஆதரித்து அங்கீகரித்தே இருக்கின்றன. சர்வதேச சட்டங்கள் கூட இதை அங்கீகரிக்கின்றன. ஒரு மனிதன் அநியாயமாகத் தாக்கப்படும் போதும், அவனது அடையாளம் இல்லாமல் செய்யப்படும் போதும் இயல்பாகவே மனிதம் கிளர்ந்தெழத் தொடங்கிவிடும். இதுதான் இன்று பலஸ்தீனில் நடக்கிறது. பலஸ்தீனியர்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு, தங்கள் நிலங்களை விட்டு வேரோடு பிடுங்கப்படுகிறார்கள். வருடக் கணக்கில் அவர்களின் இருப்பு அழிக்கப்பட்டு, நிலங்கள் சூறையாடப்பட்டு உள உடலியற் தாக்கங்களுக்குட்பட்டு வருகிறார்கள். இவையெல்லாம் "சுப்பர்பவர்" அமெரிக்காவின் ஆதரவுடன் அற்பத்தனமான இஸ்ரேலால் மேற்கொள்ளப்படுகின்றன. பயங்கரவாதம் என்ற கூக்குரல்கள் எல்லாம், காலணித்துவ சியோனிசப் பேய்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் தற்காப்புப் போராட்டங்களை மழுங்கடிப்பதும், சியோனிச அடாவடித்தனங்களை மறைப்பதற்குமாக திட்டமிட்டுச் செய்யப்பட்ட பிரயத்தனங்களும், வடிவங்களுமாகும்.

*கலாநிதி யூசுப் கர்ழாவியுடனான நேர்காணல்*
*தமிழில் : அபூ ஸஹ்ரான்.*

## புத்திரன்

பூமித்தாயின்
புத்திரர்களில்
நானுமொருவன்தான்

ஆயுள் குறைந்த
விட்டில் போன்றுதான்
நானின்று

யுத்தத்தின் சத்தத்தில்
நித்தமும் செத்தவனும்
நான்தான்

தணிக்கை செய்யப்பட்ட
ஒலிகளில் புதைக்கப்பட்டதும்
என் குரல் தான்

எல்லோருக்கும்
எல்லாத்திற்கும்
ருசிதான் என் ரத்தம்

பித்துப் பிடித்த சாத்தான்களின்
பிரவாகமும்
என் மண்ணில்

அடே! உன்னைத்தான்
எனை விட்டு
புறாவின் பறத்தலா?
இறக்கை கொடுத்தவனை
எடுத்து வீசி விட்டா
கூண்டிட்டவன் குதூகலிக்கிறான்?

தேசமே நீ
நாசமாய் போக
ஈசனாய் நான்
சிலுவை சுமக்கிறேன்
உன் பற்றென் ரத்தத்திலும்
ஓடுகிறது

உனை துண்டாட நான்
நின்டாடேன்
யார் இருப்பையும் நீ
குறிவைத்திடினும் ஒத்தோடேன்

வேரும் உன்னில் தான்
பாரிட்டுள்ளது! உனை
யார் முட்டினும்
நான் சயனியேன்

-ஓட்டமாவடி றபாஹா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது மக்களின் குரல்

## ஆதிக்க சக்திகளின் அடக்குமுறைக் குரலுக்கெதிராக நமது மக்களின் உணர்வுகள்

இறந்த ஜனாசாவைக் கூட, நூற்றுக்கணக்கான பாதுகாப்பு படையினர், நீதிபதி, திடீர் மரண விசாரணை அதிகாரி, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வைத்திய அதிகாரி பார்த்து நிற்க, இறந்த உடல்களை அவர்களின் தந்தையின் முன்னால் டயர் போட்டு எரித்த அந்தக் கொடுமை நிகழ்வு இன்னும் எம்முன்னால் உள்ளது.

தமிழ் தரப்பின் அறிக்கைகள், கருத்துக்கள் எல்லாம் வெறும் வாயளவிலேயே உள்ளது. முஸ்லிம்களுக்கு எதிரான அடக்குமுறைகள், கப்பம் அறவிடுதல் போன்ற பல நெருக்குதல்கள் இன்னும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. உண்மையில் கிழக்கில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற் கொள்ளப்படும் அனைத்து அசம்பாவிதங்களும் புலிகளை மீறியதாக நிகழ்ந்திருக்க முடியாது. இது தொடர்பாக அவர்கள் வெளிப்ப டுத்திய நல்லெண்ண சமிஞ்கை என்ன? தமிழ் தரப்பை பொறுத்தளவில் முஸ்லிம்கள் தொடர்பாக அவர்களால் வெளியிடப்படும் எந்தக் கருத்தும் இதய சுத்தியுடன் வெளிவரவில்லை என்பதே உண்மை.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரும், தமிழர் தரப்பின் தேசியத் தலை வரும், முஸ்லிம்கள் தொடர்பாக செய்து கொண்ட ஒப்பந்தத்தின் "மை" காயும் முன்பே கிழக்கில் நிகழ்ந்த கோர அனர்த்தங்களில், எத்தனை அப்பாவி உயிர்கள் பறிக்கப்பட்டன. இறந்த ஜனாசாவைக் கூட, நூற்றுக் கணக்கான பாதுகாப்பு படையினர், நீதிபதி, திடீர் மரண விசாரணை அதிகாரி, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வைத்திய அதிகாரி பார்த்து நிற்க, இறந்த உடல்களை அவர்களின் தந்தையின் முன்னால் டயர் போட்டு எரித்த அந்தக் கொடுமை நிகழ்வு இன்னும் எம்முன்னால் உள்ளது.

அப்படி இருக்க இவர்களை எப்படி நம்புவது. இவர்களின் வேசத்தனத்துக்கு துணை போகும் தமிழ் பேரினவாதத்தின் ஊது குழல்களாகச் செயல்படும் தமிழ் பத்திரிகைகளும் அரச இலத்திரனியில் ஊடகங்களின் ஒரு பக்கச் சார்பான மலட்டுத் தனமான திரிபுத் தனங்களை எம் சமூகம் அனுபவித்துக் கொண்டிருக்கும் போது இவர்கள் எங்கள் சமூகத்தின் நியாயமான உரிமைகளை வழங்குவார்கள் என்று எவனாவது நம்புவானா? இது தமிழ் பேரினவாதத்தின் ஒரு தந்திர உபாயமே ஆகும். எம் சமூகத்தின் குரலையும், திரட்சியையும் சிதைப்பதற்கு கையாளும் ஒரு சூழ்நிலையாகவே இதை என்னால் பார்க்க முடிகிறது.

*எம்.எச்.எம்.நியாஸ் B.A.*
*வாழைச்சேனை.*

தற்போது நடைமுறையிலுள்ள வடக்கு கிழக்கு மாகாண சபையில், அது மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் போதே இன ஒதுக்கல் மனப்பான்மை காட்டப்படும் போது தமிழர்கள் தனியாக தங்களைத் தாங்களே ஆளும் நிர்வாகத்தில் முஸ்லிம்களை நேர்மையாக நடாத்துவார்களா?

அன்று வட்டுக் கோட்டையில் எடுக்கப்பட்ட ஈழப் பிரகடனத்திற்கு தமிழர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு ஆணை வழங்கியதன் ஊடாக அங்கீகாரம் கொடுத்தார்கள். அதைத் தொடர்ந்து தமிழ் மிதவாதிகளும், ஆயுதபாணிகளும் ஈழக் கோரிக்கையை கைவிடவில்லை. மாறி மாறி வந்த ஆட்சியாளர்கள் மாவட்ட அபிவிருத்தி சபை, பிரதேச சபை என பல அதிகாரங்களைக் கொண்டு வந்தனர். அதுமட்டுமல்ல இந்தியாவின் தூண்டுதலில் வடக்கு, கிழக்கு இணைந்த மாகாணசபையே வழங்கப்பட்டது. ஈழம் என்ற மக்கள் ஆணையை மதித்து எல்.ரீ.ரீ.ஈயினர் சகலதையும் எதிர்த்தனர்.

இதேபோன்றுதான் 1989 இல் நடந்த வடக்கு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் மாகாணக் கோரிக்கையை தனது தேர்தல் விஞ்ஞாபனமாக முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்தது. அத்தேர்தலில் முஸ்லிம் மாகாணக் கோரிக்கையை ஆதரித்து 98 வீதமான கிழக்கு முஸ்லிம்கள் வாக்களித்தார்கள்.

எவ்வாறு எல்.ரீ.ரீ.ஈ யினர் மக்களின் அங்கீகாரத்தை மதித்து ஈழக் கோரிக்கையை முன்னெடுத்துச் செல்கின்றார்களோ, அதே போன்று முஸ்லிம் மாகாணத்தை முஸ்லிம்கள் நேசிக்கின்றார்கள். மண்வாசனை அறியாது விலை போகும் முஸ்லிம் தலைமைகள் அதை நேசிக்க வில்லை என்பதற்காக கிழக்கிலே வாழும் முஸ்லிம்கள் முஸ்லிம் மாகாணக் கோரிக்கையை நேசிக்காமலில்லை. இதை தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களின் முஸ்லிம் தேசப் பிரகடனம் நன்கு நிரூபிக்கின்றது.

தற்போது நடைமுறையிலுள்ள வடக்கு கிழக்கு மாகாண சபையில், அது மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் போதே இன ஒதுக்கல் மனப்பான்மை காட்டப்படும் போது தமிழர்கள் தனியாக தங்களைத் தாங்களே ஆளும் நிர்வாகத்தில் முஸ்லிம்களை நேர்மையாக நடாத்துவார்களா? "ஆறு கடக்கும் மட்டும் அப்பப்பா, ஆறுகடந்தபின் சித்தப்பா" என்ற நிலைக்குத்தான் முஸ்லிம்கள் தள்ளப்பட நேரிடும்.

இஸ்லாம் என்ற மதத்தைப் பின்பற்றும் ஒரே காரணத்திற்காக வடக்கிலிருந்து முஸ்லிம்களை உடுத்த உடையுடன் வெளியேற்றியவர்கள், பள்ளிவாயலுக்குள் வைத்து முஸ்லிம்களை புறமுதுகில் சுட்டவர்கள் எந்த வகையிலும் முஸ்லிம்கள் நம்பும் வகையில் நடந்து காட்டாதவர்கள், எந்த நியாயத்தின் கீழ் முஸ்லிம்களின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பதாக சொல்ல முடியும்?

*நஸீர் ஹாஜி*
*கல்முனை*

முஸ்லிம் தலைவர்கள் எந்த இனத்தின் பாதுகாப்புக்காகவும் சமாதானத்திற்காகவும் பாராளுமன்றத்தை பாதுகாக்க நினைக்கிறார்கள்?

அரசும்-புலிகளும் முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குபற்ற சந்தர்ப்பம் வழங்கப்படும் என்று உறுதி வழங்கிவிட்டு மறுப்பதானது தமிழ் மக்களை முன்னர் அரசாங்கம் ஏமாற்றி வந்ததற்கு ஒப்பானதாகும். இப்போது ஆதிக்க சக்திகளான அரசும்-புலிகளும் முஸ்லிம்களை ஏமாற்ற நினைக்கிறார்கள். முஸ்லிம் தலைவர்கள் எந்த இனத்தின் பாதுகாப்புக்காகவும் சமாதானத்திற்காகவும் பாராளுமன்றத்தை பாதுகாக்க நினைக்கிறார்கள்? தனக்கு பாதுகாப்பு இல்லையென்று டில்லி பாராளுமன்றத்தைக் கலைத்த செல்வி ஜெயலலிதாவின் தைரியம் கூட இவர்களுக்கு இல்லையே. இவர்களின் முதுகெலும்பு பற்றி எமது மக்களுக்கு சந்தேகம் வருகின்றது.

*ஆசிரியர் எம்.ஏ. றஹீம் (B.SC)*
*காத்தான்குடி*

*(உணர்வுகள் தொடரும்)*

## கிரிக்கட்

# நுகர் பொருளாக்கப்படும் விளையாட்டு!

கிரிக்கட் இன்று இங்கிலாந்தை விட, ஆசியாவில் அதிக ஆர்வத்தை ஏற்படுத்தி இருக்கிறது. ஆங்கிலேயர்கள் ஆசிய மக்களுக்கு விட்டுச் சென்றிருப்பதில் கிரிக்கட்டும் ஒன்று. ஒரு நகைச்சுவை எழுத்தாளர் இப்படிக் கூறினார். "பெருமளவிலான ஆசியர்கள் ஆண்டில் ஆறு மாதம் கிரிக்கட் பார்க்கிறார்கள். மீதமுள்ள ஆறுமாதம் அதைப்பற்றிப் பேசுகிறார்கள்" என்றார். அந்தளவு கிரிக்கட் ஆசிய மக்களை ஈர்த்திருக்கிறது.

முக்கியமான கிரிக்கட் போட்டி நடைபெறும்போது பாடசாலைகள், அரச அலுவலகங்கள், பொதுவாழ்வு என்பன பெருமளவில் ஸ்தம்பிதமடைந்து விடுகின்றன. கிரிக்கட்டில் உலகப் பந்தயம் வந்தால் அதன் ஆர்வம் பன்மடங்காக அதிகரித்து விடுகின்றது. அண்மையில் இக்கிரிக்கட் பற்றி எழுதிய இந்தியப் பத்திரிகையொன்று "அண்மைக்காலமாக இந்தியாவில் பெருகிவரும் தீமைகள், சட்டசபையில் நிதி அறிக்கையை சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட தாமதம் முதல் வங்கிக் கொள்ளவரை தெருவில் கிரிக்கட் ஆடுபவர்களின் அட்டகாசத்திலிருந்து ஏனைய இந்திய விளையாட்டுகளின் வீழ்ச்சி மற்றும் இந்திய இளைஞர்களின் சீரழிவு பொது வாழ்வில் வரும் சோம்பல், மந்தத்தனத்திலிருந்து பிறக்கும் நேரடியாக அனைத்துக்கும் கிரிக்கெட்டுத்தான் மூலகாரணம்" என்று குற்றம் சாட்டி உள்ளது.

### குடியேற்ற நாடுகளில் கிரிக்கட்

குடியேற்ற நாடுகளில் குறைந்தபட்சம் வெப்பமண்டல நாடுகளில் கிரிக்கட்டின் சமூக அடித்தளம் என்பது, இங்கிலாந்தின் சமூக அடித்தளத்திலிருந்து வேறுபட்டது. கிரிக்கட் என்பது உயர் குடியினருடைய விளையாட்டாகவே இருந்தது. நம்மை சுரண்டி எடுத்துக் கொண்டிருந்த கனவான்களின் விளையாட்டுத்தான் கிரிக்கட்; அவர்கள் தங்கள் வசமுள்ள ஆசிய நாடுகளில் தங்கள் பொழுதைப் போக்கினர்.

கொள்ளை விளையாட்டுத்தான் கிரிக்கட், அதனை நாம் பற்றிப் பிடித்திருக்கிறோம். குடியேற்ற நாடுகளில் கிரிக்கட் வரலாற்றைப் பார்த்தால் அதன் வருகையும் உணர்ச்சியும், பரவசம் பிரித்தானிய பேரரசின் அதிகாரப் பரவலோடு சமகாலத்தில் நிகழ்ந்தவை.

ஒரு நுகர் பொருளாக ஆக்கப்பட்ட கிரிக்கட் விளையாட்டு, இன்று விளம்பரப்படுத்தவும் வாங்கவும் விற்கவும் படம் பிடிக்கப்படுகிறது. விளம்பரங்கள் மூலமோ அல்லது போட்டிக்கான பரிசை அதிகரித்து போட்டியை கவர்ச்சிகரமாக ஆக்குவதன் மூலமோ புதிய ஆட்டக்காரனை பார்வையாளர்களை வென்றெடுக்க முனைகின்றன.

அன்றைய ரோமப் பேரரசின் கேளிக்கைப் போர்வீரர்களுக்கு (Gladiators) நிகழ்ந்ததைப் போல, விளையாட்டு வீரர்களின் ஆட்டத் திறனையும் அவர்களது வாழ்க்கையையும் கூட வைத்து தொழில் செய்வது இன்று ஒரு தொழில் முனைப்பாக இருக்கிறது. விளையாட்டு என்ற ஆட்ட நிகழ்விற்கும் விளையாட்டு என்ற நுகர் பொருளுக்கும் உள்ள வேறுபாடுகள் எவை?

முதலாவதாக, நுகர்பொருளாக்கப்பட்ட விளையாட்டில் ஆட்டக்காரர்களுக்கு விளையாட்டு அறம் (Sproting ethics) கொஞ்சம் இருக்கக் கூடாது. நுகர் பொருளாக்கப்பட்ட விளையாட்டில் பண்புகளே இல்லை என்பதல்ல இதன் பொருள். மாறாக, இம்மாதிரியான விளையாட்டுகளின் கலாசாரமும் அமைப்பும் விளையாட்டு வீரனின் நற்பண்பு (Sports Manship) என்பதை, எளிதில் வசமாகிவிடும் பார்வையாளர்களையோ நம்பிவிடுகிற எதிராளியையோ வசப்படுத்துவதற்கான ஒரு தோற்றமாகத்தான் எடுத்துக்கொள்கின்றன. இந்தப் பண்பு கவருவதற்கான ஒரு விளம்பர உத்தி: ஒருவனது உள்ளார்ந்த மதிப்பீடுகளின் வெளிப்பாடல்ல. நுகர்வுப் பொருளாக்கப்பட்ட விளையாட்டில், பணம், சொந்த முன்னேற்றம், சாதனைப் பட்டியலில் இடம்பெறுவது, ஒருவனது படிமம் மற்றும் அந்தஸ்து இவற்றிற்காகப் போட்டிகளை வெல்வது மட்டுமே ஆட்டக்காரருக்கு முக்கியமாக இருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இதனால் தான் விளையாட்டு தொழிலாக மாறமாற, கச்சிதமாக வரையறுக்கப்படாத அதிலுள்ள அம்சங்களைக் கண்டு காளிப்பதற்கான புதிய விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. பாரம்பரியங்களின் மறைவுக்கு விதிமுறைகளின் பெருக்கமும் விளையாட்டின் வீழ்ச்சிக்கு அறிகுறியாகும். நவீன சந்தைப் பொருளாதாரத்தைப் போலவே, நுகர்பொருளாக்கப்பட்ட விளையாட்டும் அமைப்பு ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட சுயநலமானது சிறந்த ஆட்டத்திற்கான உயர்ந்த உத்தரவாதத்தைத் தரக்கூடியது என்று கருதுகிறது.

இரண்டாவதாக, தொழிலாக மாற்றப்பட்ட விளையாட்டில் போட்டிக் குழுவினர்களுக்கு இடையே மட்டுமல்ல ஒரே குழுவிற்குள்ளும் எதிரும் புதிருமான உறவு நிலையே இருக்க முடியும். ஒரு விளையாட்டு வீரரின் தோல்வி, அவரது எதிரணியினர் மற்றும் அவரது குழுவைச் சேர்ந்த போட்டி ஆட்டக்காரர்களின் வெற்றியாகப் பார்க்கப்படுகின்றது. உண்மையான விளையாட்டிலும் போட்டி என்பது இருக்கத்தான் செய்கிறது; ஆனால், அது போட்டி அல்லது போட்டியைப் போலத் தோற்றம் தருவது. உண்மையான விளையாட்டில் ஒரு ஆட்டக்காரர் போட்டியை மிகத் தீவிரமாக எடுத்துக் கொண்டு விளையாடினாலோ அல்லது அதிலுள்ள கேளிக்கை அம்சங்களைக் குறை கூறினாலோ அவர் நல்ல ஆட்டக்காரர் எனும் தகுதியற்றவராகக் கருதப்படுவார். மாறாக, தொழிலாக்கப்பட்ட விளையாட்டிலோ, குழுவாக இணைந்து செயலாற்றுவது என்பது வெற்றியை ஈட்டுவதற்கான விடையை அடிப்படையாகக் கொண்டது; பரஸ்பர மனித உறவு சார்ந்தும், நட்புரீதியான போட்டி மனப்பான்மையிலிருந்தும் ஒரு குழுவின் செயல்பாடு உருவாவதை அது இயற்கைக்கு முரணானதாக பார்க்கிறது. இந்த விதமாகக் குழுச் செயல்பாடு ஒரு வேளை இருந்தாலும், அது முறையான ஒன்றாகப் பார்க்கப்படுவதில்லை. வெளிவேசமாகக் கருதப்படுகிறது. நடைமுறையிலும், போட்டிகளின் முடிவு சந்தேகத்திற்கிடமில்லாமல் சாதகமாக இருந்தாலோ, போட்டியை எளிதாக எடுத்துக் கொள்வதால் அதன் முடிவில் எந்த மாற்றமும் இருக்கப் போவதில்லை என்று தெரிந்தாலோ தான், தொழில்முறை விளையாட்டு வீரர்களால் களத்தில் ஆட்டத்தை விளையாட்டாக (Playful) எடுத்துக் கொள்ள முடியும்.

வேறுவார்த்தைகளில் சொல்வதானால், இத்தகைய ஒழுங்கமைப்பட்ட, தொழில்முறையான விளையாட்டின் உயிரே தீவிரமான போட்டி மனப்பான்மையில்தான் இருக்கிறது. தனது குழுவைச் சேர்ந்த பிற வீரர்களின் உண்மையான வெற்றிகூட விரோதத்துடன் பார்க்கப்படுகின்றது. ஏனெனில், பிறர் வெற்றி பெறுகிறார் என்றால் தன்னை முன்னிறுத்தும் விளம்பர வட்டாரங்களிலிருந்து வரும் பணத்தை இழக்கப்போகிறோம். அல்லது குழுவில் இடம்பெறப் போவதில்லை என்பதாகப் பொருள் கொள்ளப்படுகின்றது. இன்று விளையாட்டுகளில் வரம்பற்ற போட்டி நிலவுகிறது. ஏனென்றால் தோல்விக்காக ஒருவன் கொடுக்க வேண்டிய விலை அதிகம். மேலும் தனது குழுவின் வெற்றியையோ அல்லது மகத்தான தோல்வியையோ தனதாகக் காண்பதில் இன்பம் கொள்ள வேண்டும் என்பது போன்ற சமாதான சாக்குகள் இன்றைய விளையாட்டுகளில் கிடையாது. மேற்சொன்ன உணர்ச்சிகள்



தொழில்முறையிலான விளையாட்டில், குழுவினரின் மனவுறுதியைக் காப்பாற்றவும், நிதி அளிப்பவர்களையும் திரட்டுபவர்களையும் சமாதானம் செய்யவும், தமது நாட்டின் குழுவும் அதன் அமைப்பாளர்களும் சிறந்த முறையில் தான் செயலாற்றுகிறார்கள் என்று தேசப்பற்று கொண்ட வாடிக்கையாளர்களுக்குக் கண்கட்டி வித்தை காட்டவும் வேண்டிய சில நேரங்களில் மட்டும் பாராட்டப்படுகின்றன.

மூன்றாவதாக, நுகர்வுக்குரியதான விளையாட்டுக்கு எதிராக, விளையாட்டு முறையிலான விளையாட்டு, ஒரு மனிதனுக்கு இயற்கையோடும் சகமனிதர்களோடும் அடிப்படையாக இருக்க வேண்டிய உறவை உறுதி செய்வது. இயந்திரமயமாகிப் போன உலகில், அது மனிதனின் அடிப்படை உணர்ச்சிகளையும் திறமைகளையும் முன்னிலைப்படுத்துகிறது. தன்னலமற்ற விளையாடும் குணம், விளையாட்டைத் தனக்கேற்ற விதத்தில் மாற்றிக் கொள்ளும் தன்மை, "அவசியத்தின் அடக்குமுறைக்கு" எதிராக நிற்கும் பண்பு போன்றவற்றிற்கு அது மதிப்பு அளிக்கிறது. ஒப்பியல் உளவியலாளர்களும் மானிடவியலாளர்களும் மனிதர் தவிர்ந்த பிற உயிரினங்களின் சமூகத்திலும் விளையாட்டின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டியுள்ளார்கள். மீன் பியஜே போன்ற உளவியலாளர்கள், குழந்தையின் புரிதல் மற்றும் உணர்தல் ஆகியவற்றின் வளர்ச்சியில் விளையாட்டு எவ்வளவு முக்கிய பங்குவகிக்கிறது என்பதையும், ஒருவன் தான் பெற்ற கலாசார மற்றும் தனிமனித அனுபவங்களை உரசிப் பார்ப்பதற்கு அல்லது எரிக் எரிக்ஸன் குறிப்பிட்டது போல "மீண்டும் நிகழ்த்திப் பார்ப்பதற்கு" எவ்வகையில் உதவிபுரிகிறது என்பதையும் விளக்கிக் காட்டியுள்ளார்.

நான்காவதாக, நவீன அமைப்புகள் விளையாட்டுகளை ஆக்கிரமிக்கும் போது, தொழில்முறை விளையாட்டு ஒரு கலாசாரக் கருவியாக மாறிவிடுகிறது. சிறிது சிறிதாக, அதன் பின்னணியும் உள்ளடக்கமும் சமூக அமைப்புகளின் கட்டுப்பாட்டில் வந்து விடுகின்றன. மிகையாக ஒழுங்கு செய்யப்பட்ட விளையாட்டு, ஒரு படைப்புச் செயலாக இல்லாமல் போவதோடு, அதன் விடுதலை அளிக்கும் தன்மையையும் இழந்து விடுகிறது. மனித வாழ்வை வளப்படுத்துவதற்குப் பதிலாக கூட்டான போட்டி, நிதானமான சாதனை, பொறுப்பைப் பகிர்ந்து கொள்ளல் போன்றவற்றை ஆட்டக்காரரின் பிரக்ஞையில் பதியவைப்பதற்குப் பதிலாக, விளையாட்டானது, நவீன நகர் சார்ந்த தொழில் நாகரிகத்தின் மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கத் துவங்கியுள்ளது. விளையாட்டு வீரர், ஒரு நாட்டார் கதை வீரனைப் போல, கடினமாக உழைக்கக் கூடிய, அப்பாவியான, தேசபக்தி மிக்க, சட்டத்தை மதித்து நடக்கக் கூடிய ஒரு பொறுப்புள்ள குடிமகனாகத் தன்னைக் காட்டிக் கொள்ளத் துவங்கியுள்ளார். விளையாட்டுப் பற்றி எழுதுபவர்களின் எழுத்துகளில் வெளிப்படும் உண்மையான குடிமகன் அந்தஸ்து பெற்ற விளையாட்டு வீரர் இவர் தாம். தானும் மகிழ்ந்து அதன் மூலம் நம்மையும் மகிழ்விப்பவரல்ல இன்றைய விளையாட்டு வீரர்; சமூகத்தோடு ஒத்தோடும் குணம் கொண்ட, தன்னிருப்பை வெறுக்கக் கூடிய, போலியான அரசியல் அக்கறை கொண்ட, பலம் மிக்கவராகக் காட்டிக் கொள்ளும் ஆசைகொண்ட, மிகையாகச் சமூகமயப்படுத்தப்பட்ட ஒரு குடிமகனுக்கு எது வெற்றி என்பது பற்றிய தவறான உணர்வை அளிப்பவர்.

**அஷிஸ் நந்தி**

## வெகுண்டெழுதலின் முடிவு..!

கிழக்கு மண்ணில்
அப்பாவி உயிர்களைக்
காவு கொண்டாய்...
இருப்புக் கொள்ளாத நீ
வடக்கிலிருந்து வாரிச்சுருட்டி
இரவோடிரவாக இருப்பிடம்
விட்டு துரத்தி விட்டாய்...
எம் கடைகளுடைத்து
உன் கடவுளுக்கு
காணிக்கை செய்தாய்...
இன்னும் ஏதேதோவெல்லாம்...

இன்றைகளில்...
அராஜக அரசாட்சிக்கு
முதுகு சொறிந்தது
எம் தலைமைகளும்
எம் கட்சியுமென்கிறாய்
மறந்துதான் போயிற்றா?
உன்னிலொருவனாய் ஒத்திசைந்து
துப்பாக்கி பிடித்ததால்
இரு பக்கமும் உ(வ)தை பட்டது
நாங்கள் தானென்பதெல்லாம்
மறந்து தான் போயிற்றா?

ஏதோ! உனக்குத் தான்
எல்லாம் தெரியும்

பாங்கொலி கேட்குமிடத்தில்
துப்பாக்கியொலியெழுப்பிய
உனக்குத் தான் தெரியும்
எல்லாம்.

அமைதியாக வாழ்வோட்டிய
தேன் கூட்டில் கல்லெறிந்த
உனக்குத் தான் தெரியும்
எல்லாம்

இந்த நிமிடம் மட்டும்...
ஏதோதோ பேசுகிறாய்;
எதுவும் தெரியாதவன் போல்

விறகு வெட்டி வாழ்தல் நகர்த்தும்
வண்டிக் காரர்களிடமே
கப்பம் கேட்பவன் நீ.
உன் தயவில் வாழ்வதா
எப்படியடா...?

பிணந் தின்னிகளுக்கு நடுவில்
கோழிக் குஞ்சுகள் ஜீவித்தலெப்படி?
அவ்வாறு வரினும்
வாழ்வுதிரும் காலம்
தொலைவிலில்லை என்பதை
உணராமலுமில்லை நாங்கள்

ஒன்று மட்டும் நிச்சயம்!!
கலீபா உமரின் வாரிசுகள் நாம்
அமைதியுடைத்து
ஒட்டுமொத்தமும்
வெகுண்டெழுவோமெனின்
உன் கனவுகளுக்கெல்லாம்
சமாதி கட்டுவோம்
இது மட்டும் நிச்சயம்!!!

*மஜீட் எம்.நாஸிக், கிண்ணியா 05.*

## இலங்கை முஸ்லிம்களுக்கு சுயநிர்ணய உரிமைகிடையாதா?

இலங்கை வாழ் அனைத்து முஸ்லிம்களையும் பலப்படுத்தி தனித்துவம் பேணப்பட வேண்டும். இனப்பிரச்சினையால் முஸ்லிம்கள் பட்ட அவலங்களை மறக்கலாமா ? ஆகையினால் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் மூன்றாம் தரப்பாக பங்குபற்றியேயாக வேண்டும்.

இன்று சமாதான முயற்சிகளில் அரசும் - புலிகளும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இதேநேரத்தில் வடக்கு, கிழக்கு முஸ்லிம்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இதனைத் தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்டவர்களுடன் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சிபேதங்களை மறந்து ஒன்றிணைந்து சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவேண்டும்.

பேரினவாதப் பிரச்சினையில் முஸ்லிம் சமூகத்தை விடுவிக்க வேண்டுமானால் முஸ்லிம்களின் தனித்துவ அரசியல் சக்தியை பலப்படுத்த வேண்டும். முஸ்லிம்கள் சமாதான முயற்சியில் தூர நோக்குடன் செயல்படாவிடில் வரும் பரம்பரை பாதிப்புகளைப்பற்றி ஆலோசிக்கவேண்டும்.

நாடெங்கும் பரவி வாழும் முஸ்லிம்கள் தெற்கில் சிங்கள சகோதரர்களுடனும் வடக்கில், தமிழ் சகோதரர்களுடனும் வாழவேண்டி உள்ளது. இவ்வாறு முஸ்லிம்கள் இரு சமூகங்களுடனும் கலந்து வாழ்வதால் முஸ்லிம்கள் இரு இனத்தவராலும் பாதிப்புக்கு ஆளாகின்றார்கள்.

1990 ஆம் ஆண்டு வடபகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் சொத்துக்கள், உடமைகள் அனைத்தையும் இழந்து கஷ்டத்துடன் அகதிகளாக நாட்டின் பல்வேறு இடங்களிலும் வாழ்கின்றனர். இவர்களுக்கு ஏட்பட்டுள்ள பாதிப்புகளுக்கு நஸ்டஈடு இன்னும் முறையாகக் கொடுக்கப்படவும் இல்லை. இவர்கள் மீண்டும் தங்கள் வாழிடங்களுக்குப் போவதானால் அவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கப்படல் வேண்டும். இது மிக முக்கியமான விடயம்.

தென்னிலங்கை முஸ்லிம்கள் இனிவரும் காலத்தில் மோசமான அரசியல் நிகழ்வுகளை சந்திக்க வேண்டிவரும். அதற்கான சகல முயற்சிகளும் இப்போது அரசியல் அரங்கில் நடந்து கொண்டுதான் வருகின்றன. இதனை உறுதிப்படுத்துவது போல் பல்வேறு சம்பவங்கள் கடந்த இரண்டு வருடங்களில் நடந்தேறியுள்ளன. இவைகளை நாம் சீர்தூக்கிப் பார்க்காமல் காலத்தைக் கடத்தலாமா?

*எம்.இஸட் ஆரிப், றாகம.*

| | | |
|---|---|---|
| நூல் | :- | கருத்துச் சுதந்திரம் |
| தொகுப்பாசிரியர் | :- | எஸ்.எச். மௌலானா |
| வெளியீடு | :- | முஸ்லிம் கல்வி ஸ்தாபனம், இல: 23, முதலாம் குறுக்குத் தெரு, கொழும்பு - 11 |
| பக்கம் | :- | 104 |
| விலை | : | 90/= |



மர்ஹூம் எம்.எச்.எம். ஷம்ஸின் இலக்கியத் துறை பங்களிப்பில் நாவல் துறையின் முதல் பிரவேசமே "கிராமத்துக் கனவுகள்" எனும் நாவலோடு ஆரம்பிக்கின்றது.

இந்நாவலின் மையக் கருப்பொருள் இஸ்லாமிய மதவுணர்வை கொச்சைப்படுத்துவதில் பங்காற்றி இருப்பதாக பெரும்பாலான முஸ்லிம்கள் கருதுகின்றனர். அதேநேரம் ஷம்ஸின் வாசக அபிமானிகள் மத்தியில் இந்நாவல் வரவேற்புப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்நாவலை விமர்சித்தும், எதிர்வினைகளை ஒன்றுதிரட்டியும் 'கருத்துச் சுதந்திரம்' என்ற பெயரில் எஸ்.எச். மௌலானா முன்னர் ஒரு நூலைத் தந்திருந்தார். அதன் தொடரில் இரண்டாம் பாகமாக, பன்முகப் பார்வைகளை உள்ளடக்கி இன்னொரு நூலையும் தந்திருக்கின்றார்.

"இத்தொகுப்பு தனி மனித குரோதத்தின் வெளிப்பாடல்ல. யதார்த்தம் எனும் தலைப்பில் நாவல் படைத்து பொய்களையும்-புனுகுகளையும் கோர்த்து இதுதான் தென்னிலங்கையின் மூன்று பரம்பரையின் வாழ்வியல் படிமம் என கோடிட்ட கதாசிரியரின் நாவல் மீது கருத்தியலான - சில பார்வைகளையும்" இந்நூல் உள்ளடக்கமாகக் கொண்டிருக்கின்றதென்ற குறிப்போடு இந்நூல் வெளிவந்திருக்கின்றது.

இஸ்லாத்திலும், முஸ்லிம் சமூகத்திலும் உயர்வாகவும் பேணுதலாகவும் கொள்ளப்படுகின்ற "பீஸபீல், கர்பலா, புராக், ஆஸுரா, மத்திச்சம், மௌலானா, மௌலவி, லெப்பை, முஅத்தின்" போன்ற சொற்பிரயோகங்களும், அதன் அர்த்தங்களும் கேலிக்குரியதாக இந்நாவல் சித்தரிக்கின்றதென்பது இந்நூல் வெளிப்படுத்தி வைக்கின்றது.

யூத சியோனிஸம், மேற்குலகம் போன்றவற்றின் இஸ்லாத்திற்கெதிரான போக்குகளையும் கருத்துச் சுதந்திரம் பேசுகின்றது. அது மட்டுமன்றி, இஸ்லாத்தை கொச்சைப்படுத்தி எழுதும் எழுத்தாளர்களான சல்மான் ருஷ்தி, தஸ்லீமா போன்றோர் வரிசையில் பல எழுத்தாளர்களையும் வேண்டி இருக்கிறது என்பதையும் இந்நூல் எடுத்துக் காட்டுகிறது.

உலகின் பல பாகங்களிலும் மதவாதத்தாலும், இனவாதத்தாலும் அரசியல் நடாத்தப்படுகிறது. அதன் மூலம் முஸ்லிம்கள் எவ்வாறு காவு கொள்ளப்படுகின்றனர் என்பதனையும் இந்நூல் கோடிட்டுக் காட்டுகின்றது.

"கருத்துச் சுதந்திரம்" எனும் நூல் இஸ்லாமிய பெயர் தாங்கிக் கொண்டு, இஸ்லாத்திற்கும், முஸ்லிம் சமூகத்திற்கும் எதிராக எழுதிவரும் பல படைப்பாளிகளை நம்முன் இனங்காட்டி வைக்கின்றது.

*பாத்திமா பர்வீன்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புறப்படு தோழா புதுயுகம் நோக்கி



என் சக நண்பனுக்கு.
உன்னிடம் நான் மனம் விட்டுப் பகிரங்கமாகப் பேச விரும்புகிறேன். எனக்குள் புதைந்து போயுள்ள ஏக்கங்களுக்கு வார்த்தை வடிவம் கொடுத்து ஓரளவு சொல்ல விரும்புகிறேன். நன்றாகக் கேட்டுக்கொள். உன் கண்களைக் கூர்மையாக்கி, உன் சிந்தனையை ஒருமையாக்கி, உன் காதுகளைத் தீட்டி என் வார்த்தையை நன்றாக உற்றுக்கேள்.

உன்னையே நீ தாழ்த்திக்கொள்ளும் அடிமை நாடகத்தைப்பற்றி நான் பேசுகிறேன். ஆதலால் நண்பனே நன்றாகக் கவனித்துக் கேட்டுக்கொள். நீ பெருமைப்பட்டுக் கொள்ளும் முஸ்லிம் சமுதாயம், நாளை பெருமூச்சு விடப்போகின்றது. உன்னைச் சூழ உள்ள உன் நண்பர்களின் கால்களில் பூட்டப்படவிருக்கும் அடிமைச் சங்கிலியும் இறுதிப்பகுதி தயாராகிவிட்டது. எந்தச் சிந்தனையும் இல்லாமல் நடைப்பிணமாக வீதியில் வரும் பெண்ணை நீ ரசித்துக் கொண்டிருக்கின்றாய்.

புனித கலிமாவை உச்சரித்த உன் நாக்கு நாளை வெட்டி எறியப்படும் வரைக்கும் நீ அரட்டை அடித்துக்கொண்டிருப்பாய். உன்னை பெற்ற உனது பெற்றோர், உனது உடன்பிறப்புக்கள், நீ உன்னோடு சுற்றித்திரிந்த ஆத்ம நண்பன் நாளை காலில் அடிமைச் சங்கிலி பூட்டப்பட்டு அந்நியனின் பிரமிட்டுக்கு கல்சுமந்து போகும் வரைக்கும் நீ காதல் கீதம் பாடிக் கொண்டிருப்பாய்.

நீ ஓடிப்புரண்டு விளையாடிய உனது மண்ணும், நீ நன்றாக மூச்சை இழுத்துவிட்ட உனது காற்றும், உன்னைப் பார்த்துக் கண்சிமிட்டிய உனது வானும் நாளை அடிமைப்பெட்டிக்குள் அமிழ்ந்து பற்றி எரியும்போது நீ பிடில் வாசித்துக் கொண்டிருப்பாய்.

எனது நண்பனே! உன்னைப் புதைக்க உனக்கே குழிவெட்டுகிறார்கள். அந்த மண் வெட்டிச் சத்தம் உனது காதுகளில் கேட்காத அளவு நீ பாராமுகமாய் இருக்கிறாய்.

நாளை உனது சகோதரிக்குப் பிறக்கப் போகும் குழந்தை இழுத்துவிடும் முதல் மூச்சு அடிமைப்பட்டதாய் இருக்கும் வரைக்கும் உனது சகோதரி தொலைக்காட்சியில் மெகா தொடர் பார்த்து கண்ணீர் வடித்துக்கொண்டிருப்பாள். உனது நண்பி வானொலியில் அன்று சமைத்த கறியைப் பற்றி விலாவரியாக விளக்கிக் கொண்டிருப்பாள்.

நண்பனே! உன்னைச் சுற்றி நடக்கும் சதிவலைகளுக்கு நடுவில் நீ வெண் சாமரம் தேடுகிறாய்.

நீ யார்மீது நம்பிக்கைவைத்து உனது அதிகாரத்தைக் கொடுத்து அமரச் செய்தாயோ உன் தலைவன். அவன் உன்னை அடிமையாக்கும் அடிமைப்பாட்டுக்கு மும்முரமாக இசையமைத்துக் கொண்டிருக்கிறான்.

நீ ஒரு இஸ்லாமியன் என்பதை. எப்போதாவது பள்ளியில், ஊர்சுற்றும் அவசரத்தில் விழுந்து எழும்போதுதான் நான் அடையாளம் கண்கிறேன்.

அந்நியனின் ஆதிக்க வங்கியில் ஒரு கோப்பைக் கள்ளுக்காய் உன்னை அடகு வைக்காதே.

அந்நியனின் ஏலச்சந்தையில் ஒரு வேளைச்சோற்றுக்காய் உனது உரிமையை விலை பேசாதே.

எனது நண்பனே சிந்தித்துப்பார். ஒரு நாள் மாத்திரம் நீ வாழும் சமூகத்துக்காய் சிந்தித்துப்பார். நீயும், நானும் ஓடிப்பிடித்து விளையாடிய மண்ணில் முகவரி தெரியாத யாரோ வீடு கட்டுகிறார்கள்.

நீ விதைத்து வைத்த உனது வயலை யாரோ அறுவடை செய்கிறார்கள்.

நீ இன்னும் உனது சில்லறைச் சிணுக்கல்களுக்குள் உன்னைச் சிறியவனாக்குகிறாய். தொழுகையில் விரல் ஆட்டுவதும், தறாவீஹ் எத்தனை றக்அத்து என்பதிலும் உனது நாள்களைக் கழிக்கிறாய். சுன்னத்தான விடயங்களுக்காய் ஒற்றுமை எனும் 'பர்ளுல் ஐன்'னை விட்டுவிட்டாய். உனது சில்லறைத்தனமான பிரச்சினைகளுக்கு உன் ஏக்கத்தோடு நீ சண்டை பிடிக்கிறாய். ஆனால் உன்னை, என்னை, நீ முரண்பட்டுக் கொண்ட உனது உறவையெல்லாம் நாளை ஏய்த்து மாய்க்க வரப் போகிறான் ஒருத்தன். அது பற்றிக் கவலை இல்லை உனக்கு.

போதும் நண்பனே இனிப்போதும். இது வரைக்கும் உன்னை நீ தொலைத்துவிட்டது போதும். உனது பெயரில் மாத்திரம் இருந்த இஸ்லாம் உனக்குப் போதும். ஆதலால் புறப்படு வா!

உனது அற்ப ஆசைகளை விட்டுவிட்டு நம்மை எல்லாம் அடக்கி ஆளப்போகும் அந்நியனை எதிர்க்க ஆர்வத்தோடு எழும்பி வா.

உனது மார்க்கத்தை வாழவைக்கப் புறப்பட்டு வா.

உனது ரத்தமும், நாடியும், நரம்புகளும் சதையும், புத்தியும் உனது ஜீவாதார அணுக்கள் எல்லாமும் சுதந்திரத்தால் முறுக்கேறி வீர ராகம் பாடட்டும், விரைந்து வா!

அந்நியனின் அடிமை நாடகத்தில் சுதந்திர கோஷம் போட சூறாவளியாய் சுழன்று வா!

கண்ணில் கனவோடும், கவிதையில் நெருப்போடும் புதியதோர் வீணை செய்யப்புறப்பட்டு வா!

இனிமேல் நம்மைப் பிரிக்க முடியாது. ஆதலால் நண்பனே வா, நாளைய உலகத்தை நம்கையில் மீட்டுவோம். மீண்டும் சந்திக்கும் வரை

அன்புடன்
உனது சகோதரன்
மாலிக் அல் ஷபாஸ்

## சதாம் நீ யொரு .... ....

போற்றுகிறேன் உன்னுடைய போராட்டம் வெற்றிபெற
ஈராக்கை உன்னுடைய இதயமென நேசித்தாய்
மண்ணையும் அங்குள்ள மக்களையும் உன்றன்
கண்போல் இன்றும் காத்து வருகின்றாய்
போய்விடு மாறுஅந்த போக்கிலிகள் சொன்னாரா?
விட்டுநீ போனால் அமெரிக்கன் வெறியாட்டம் குடியேறும்

பக்தாத் உத்தமர்கள் பாதங்கள் பட்டமண்
மண்ணைநீ காத்தல் மகத்தான உன்கடமை
என்பதனை ஏற்று இறுதிவரை போராடு
போராடித் தோற்றாலும் புவியுன்னை பாராட்டும்!

நெஞ்சுரத்தைக் கண்டு நிலமெங்கும் நடுங்கியது
அஞ்சாத வீரர் அலிரலியின் பரம்பரையில்
வந்தவன்நீ என்பதனை வரலாறு இனிச்சொல்லும்
வெஞ்சினம் கொண்டு வெறியோடு அமெரிக்கன்
ஈராக்கைக் கைப்பற்ற எண்ணுகிறான் அவ்வளத்தை
கொள்ளை அடித்து கொழுத்துவிட எண்ணுகிறான்
விட்டுக் கொடுத்தால் விபரீதங்கள் வந்துவிடும்

சத்தியத்தை எதிர்ப்பவர்கள் சமருக்கு எழுந்தாலும்
புத்தியுள்ள ஒருசமூகம் போர் செய்ய விரும்பாது
உலக மாந்தரெல்லாம் ஒன்று திரண்டு
போரை நிறுத்திவிட புறப்பட்டு வந்துள்ளார்
போர்இன்று நிகழ்வதனால் புவியெங்கும் அழுகிறது.
நீதிக் குரல்ஒன்று நிச்சயமாய் இனிக்கேட்கும்.

அல்லாஹ்தான் எங்களுக்கு அருள்செய்ய வேண்டும்!
பிரார்த்தனைகள் செய்வோம்!
பிசாசுகளை இனி அழிப்போம்!

*-கவிச்சுடர் அன்பு முகையதீன்.*


### முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருங்கள்

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக் கொணர முடியும்! சந்தாதாரர்களாக சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி விநியோகியுங்கள்!

**சந்தா விபரம்!**

(தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)

| | |
|---|---|
| 3 மாதங்கள் - (12 இதழ்கள்) | 120/- |
| 6 மாதங்கள் - (24 இதழ்கள்) | 240/- |
| 1 வருடம் - (48 இதழ்கள்) | 480/- |

காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பிவைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசுக்கட்டளையாக அனுப்புவதாக இருந்தால் Muslimkural Publication, Slave Island Post office எனக் குறிப்பிடவும்.



### சிறு கவிதைகள்.

சாம வேளையிலும்
துளியும் தூங்காத
கொழுத்த சண்டியன்;
துப்பாக்கி!

உச்சி தொடமுடியாத
வழுக்குமரக் கம்பம்;
சமாதானம்!

ஆயுத தேசம்
விதைத்துப் போட்டதில்
கிடைத்த அறுவடைகள்;
அகதிகள்!

மயான மண்டபத்தில்
ஆத்ம தேர்வுக்கான
விடுகைப் பரீட்சை;
மரணம்!



1985க்குப் பின் மட்டக்களப்பில் நடைபெற்ற முஸ்லிம் இனச்சுத்திகரிப்பின் அழியாத தடம்தான் இவ் இறை இல்லமாகும். இறை இல்லத்தின் அனைத்துப் பகுதிகளும் அழிக்கப்பட்ட நிலையில், இன்று வரை எஞ்சி நிற்கும் இறை இல்லத்தின் "மிஹ்றாப்" தான் இது. இது காத்தான்குடி கீச்சான் பள்ளம் இறை இல்லமாகும்.




காத்தான்குடியிலிருந்து மதியன்பன் மஜீத்தை ஆசிரியராகக் கொண்டு "ரிலாக்ஸ்" என்ற தலைப்பில் பத்திரிகையொன்று வெளியாகிக் கொண்டிருக்கின்றது. இதுவரை இரண்டு பத்திரிகைகள் வெளியாகியுள்ளன. முஸ்லிம் சமூகத்திற்கென்று தனியான தேசிய பத்திரிகைகள் தேவைப்படும் இக்காலகட்டத்தில், இவ்வாறான உள்ளூர் - பிரதேச பத்திரிகைகளின் வருகையும், தேவையும் இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே, இவ்வாறான பிரதேச பத்திரிகைளை வளர்த்தெடுக்கும் வகையில் நம்மவர்களின் ஆதரவுக்கரம் ரிலாக்ஸ் போன்ற பத்திரிகைக்கு வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்பட வேண்டும். மதியன்பன் மஜீத் ஏலவே, அலசல், அவதானி, பத்திரிகைகளையும் முக்கனி கலை இலக்கிய சஞ்சிகையையும் வெளிக்கொணர்ந்த அனுபவமுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது முயற்சி பாராட்டத்தக்கதாகும்.

# டைட்டானிக் வரலாற்றுக் காவியமா வரவுக் காவியமா

வசூல் பந்தயத்தில் வெற்றி பெறும் படங்களுக்கே ஒஸ்கார் விருது தரப்படுவது வழக்கம். உலகெங்கும் வசூலில் சாதனை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் "டைட்டானிக்" திரைப்படம் 11 விருதுகளை அள்ளியது. அதனைப் பற்றிய ஆர்வத்தை உலகமெங்கும் அதிகப்படுத்தியது. சுமார் 1000 கோடிக்கும் மேல் செலவழித்து தயாரிக்கப்பட்டது இப்படம். டைட்டானிக் கப்பலின் பிரம்மாண்டத்தைப் பார்க்காதவர்கள் "வாழ்க்கையில் பிறந்தும் பயனில்லை" எனுமளவுக்குக் கவரப்பட்டிருக்கிறார்கள்.

14,000 தொழிலாளர்கள் கட்டியமைத்த "டைட்டானிக் கப்பல்" 1912 இல் இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவிற்கு புறப்படுகிறது. கப்பலின் மேல்தள முதல் வகுப்பில் செல்வந்தர்களும், கீழே மூன்றாவது வகுப்பில் ஏழை மக்களும் பயணிக்கின்றனர். நான்கு நாட்களுக்குப் பிறகு ஒரு பெரும் பனிக்கட்டியில் மோதி உடைந்து கப்பல் மூழ்குகிறது. உயிர் காக்கும் படகுகளில் மேட்டுக்குடியினர் 700 பேர் தப்பிக்க சாதாரண மக்கள் 1500 பேர் நீரில் மூழ்கி சாகிறார்கள். இது வரலாறு.

இந்த நிகழ்ச்சியின் பின்புலத்தில் அதாவது மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலில் ரோஸ், ஜாக் என்ற காதலர்களின் கதைதான் இயக்குநர் காமரூனின் டைட்டானிக். இறந்து விட்ட தந்தையின் மேட்டுக்குடி அந்தஸ்தை தக்க வைக்க தன் தாயால் ஒரு செல்வச் சீமானுக்கு நிச்சயிக்கப்படும் ரோஸ், ஒரு தங்கக் கூண்டு கிளி. சூதாட்டத்தில் வென்றதற்காக மூன்றாம் வகுப்பு பயணச் சீட்டை பரிசாக பெறும் ஜாக் ஒரு உதிரியான, எளிமையான, ஏழை இளைஞன். ஜாக்குடனும், அவனது சமூகத்துடனும் பழகும் போது மன எழுச்சியும், விடுதலை உணர்வையும் பெறும் ரோஸ் அவன் மேல் காதல் வயப்படுகிறாள்.

பிறகு காதலுக்குத் தடை, காதலனுக்குச் சிறை, காதலியின் மீட்பு. இறுதியில் கப்பல் மூழ்குகிறது. உயிர் காக்கும் படகுகளில் பல முறை தப்பிக்க வாய்ப்பிருந்தும் ரோஸ் காதலனுடன் தான் கடலில் குதிக்கிறாள். தன்னைப் பலிகொடுத்து ரோஸைக் காப்பாற்றுகிறான் ஜாக். இக்கதையை 102 வயதான ரோஸ், டைட்டானிக் கப்பலின் ஆபரண சொத்துக்களை கண்டு பிடிக்க முயலும் ஒரு குழுவினரிடம் பகிர்ந்து கொள்கிறாள்.

ரசிகர்களைச் சொக்க வைக்கும் பிரமாண்டமான இக்காதல் காவியம் குறித்த, நமது விமர்சனங்களுக்கு முன்னால் அமெரிக்கர்கள் கவலைப்படும் ஒரு விசயத்தைப் பார்ப்போம். முதல் வகுப்பில் பயணம் செய்யும் செல்வந்தர்களின் அற்பத்தனங்களை அம்பலப்படுத்தி மூன்றாம் வகுப்பு உழைக்கும் மக்கள் தான் உலகின் சாரம் என்ற அர்த்தத்தில் படமெடுக்கப்பட்டது குறித்து அமெரிக்க நியூஸ் வீக் பத்திரிகைகள் வருந்தியது.

1500 பேர் நீரில் மூழ்கி கொல்லப்பட்டது ஒரு கொடூரமான விபத்து. இதைத் தவிர டைட்டானிக் கப்பலுக்கு வரலாற்றில் முக்கியத்துவம் ஏதுமில்லை. கப்பல் மூழ்கும் போது "நாகரீக சமூகம்" அடித்தட்டு மக்களைப் பலி கொடுத்து விட்டு தான் மட்டும் தப்பித்துக் கொண்டதுதான் அந்த விபத்தில் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரே பிரம்மாண்டமான சமூக விசயம். அந்த ஒரு விசயம் திரைப்படத்தில் காதலுக்குப் பக்கவாத்தியமாக வருகிறது. இறுதிக் காட்சியில் காதலர்கள் தப்பிப்பதற்கு காதல் உணர்வுடன் போராடுகிறார்கள். தன்னுடன் கப்பல் ஏறிய நண்பனைக் கூட ஜாக் அப்போது நினைக்கவில்லை. இது காதலின் மறதியென்றால் நமக்கும் அப்படித்தான். காதலர்கள் மட்டும் எப்படியாவது தப்பிக்கமாட்டார்களா என்று தான் நம் நெஞ்சங்கள் ஏங்குகிறதே தவிர பொம்மைகளைப் போல விழுந்து, உறைந்து, இறந்து போன மக்களைப் பற்றியல்ல.

ஆபிரிக்க கிராமம் ஒன்றில் பிளேக் நோயால் 10,000 போ இறந்து போகிறார்கள் என வைத்துக் கொள்வோம். இதை ஒரு பிரம்மாண்டமான திரைப்படமாக எடுப்பார்களா? அல்லது டைட்டானிக்கின் செலவில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூட இல்லாமல் எடுக்கப்படும் விதவிதமான தமிழ்க் காதல் படங்களைப் போல, காதலை மட்டும் பிரமாண்டமாக எடுக்க முடியுமா? இரண்டுமே முடியாது என்பதுதான் டைட்டானிக் சொல்லுகின்ற சேதி.

தமிழ்ப் படங்களில் பிரிந்த காதலர்கள் இணைவதற்கான பொருளாக ஒரு அரசமரமோ, ஆட்டோவோ அதிக பட்சம் ஒரு ரயில் வண்டியாகவோ இருக்கும் போது, இங்கு ஒரு பெரும் கப்பலாக இருக்கிறது.

இதில் தான் கப்பலோடு சேர்ந்து ரசிகர்களும் அடித்துச் செல்லப்படுகிறார்கள். கடலைக் கிழித்துக் கொண்டு செல்லும் கப்பல், போட்டியுடன் நீந்தும் மீன்கள், கப்பலின் முகப்பிலே காதல் வயப்படும் காதலர்கள். அடித்தளத்தில் பிரம்மாண்டமான நீராவி எந்திரங்களுடன் வேலை செய்யும் கடும் உழைப்பாளிகள், கும்மிருட்டுக் கடலில் ஒளிரும் விளக்குகளுடன் மூழ்கும் கப்பல், நாயகி ரோஸ் காப்பாற்றப்படும் இறுதிக் காட்சி. இவற்றையெல்லாம் கைதட்டி ரசிகர்கள் காதலின் சோகத்தோடும் கப்பலின் பிரமிப் போடும் அரங்கை விட்டு அகலுகிறார்கள்.

ஹொலிவுட்டின் முதல் தரக் கலைஞர்களும், நவீனத் தொழில் நுட்பமும் பயன்பட்டிருக்கும் இப்படமும் மேற்கண்ட காட்சிகளும் பார்வையாளர்களைக் கவராமல் போய்விடுமா என்ன! என்றால் தொழில் நுட்பமும் அதன் பிரமாண்டமும் தான் கலையா? இது தரும் மன எழுச்சிதான் என்ன?

பிரம்மாண்டம் இயற்கையின் இயக்கத்தில் இருக்கிறது. அதைப் புரிந்து கொள்ள மனிதன் நடத்தும் போராட்டத்தில் இருக்கிறது! அதற்காகத் தன் இனத்தினுள்ளே நிலவும் சுரண்டல் உறவுகளை மாற்ற முயலும் அவனது வர்க்கப் போராட்டத்தில் இருக்கிறது. இத்தகைய பிரமாண்டத்தை, அதற்கே உரிய கம்பீரத்தோடும், கலை ஆற்றலோடும், உணர்த்திக் காட்டும் ஒரு கலை அதற்கே உரிய எழுச்சியைத் தோற்றுவிக்கும்.

அத்தகைய எழுச்சியைத் தோற்றுவித்தது ஒரு திரைப்படம். இதுவும் ஒரு கப்பலின் கதைதான்.

போர்க்கப்பல், "பொதெம்கின்", டைட்டானிக்கின் பிரம்மாண்டமோ, ஆடம்பர வசதிகளோ இல்லாத ஒரு சிறு போர்க்கப்பல். கருந்தலாடை மாலுமிகளையும், வீரர்களையும் கொண்ட பொதெம்கின், ரசியா ஜாரின் கப்பற் படையைச் சேர்ந்தது. 1905 இல் ஜாருக்கு எதிராக வெடித்துக் கிளம்பிய புரட்சியின் புயல் இக்கப்பலையும் பற்றிக் கொண்டது. தளபதிகளையும், ஜாரையும் எதிர்த்துக் கலகம் செய்த வீரர்கள் கப்பலை விடுவிக்க போராடினார்கள். அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்ட ஜார் அரசனால், தோல்வியுற்ற முதல் ரசியப் புரட்சியைப் போலவே பொதெம்கினும் வீழ்ந்தது. வீரர்களும், மாலுமிகளும் கொல்லப்பட்டனர்.

இதைக் கருவாகக் கொண்டு ரஷ்ய திரைப்பட இயக்குனர் ஐசன்ஸ்டீன் 1926 இல் "போர்க்கப்பல் பொதெம்கின்" என்ற




கருப்பு - வெள்ளை மௌனத் திரைப்படத்தை (பின்னணி இசையுடன்) வெளியிடுகிறார்.

திரைக்கதை: வறண்டு போன கப்பற் படை வாழ்க்கையில் ஒடுங்கிய முகங்களுடன் மாலுமிகள், வீரர்கள். பரிமாறப்படும் இறைச்சியில் புழுக்கள் நெளிவதைக் கண்டு குமுறுகின்றனர். செய்தி பரவுகின்றது. கப்டனுக்கு எதிராகப் போராட்டம் வெடிக்கிறது. கலகம் செய்தவர்களில் வாகுலின்சு என்ற வீரர் மட்டும் கொல்லப்படுகிறார். ஏனையோர் "போர்க் குற்றவாளிகளை"ச் சுட மறுத்த வீரர்கள் புரட்சிக்காரர்களுடன் சேருகின்றனர். அதிகாரிகளுக்குத் தண்டனை தரப்பட்டு. கப்பல் கைப்பற்றப்படுகிறது. செங்கொடி உயர ஒடேசா என்ற நகரத்தை நோக்கிப் பயணிக்கிறது. பொதெம்கின்.

நகரத்து மக்களிடம் புரட்சியைப் பரவ விடுகிறார்கள் கப்பலின் வீரர்கள். பொதெம்கினுக்கு ஆதரவுக் குரல் கொடுக்கும் மக்களை ஜாரின் ராணுவம் சுட்டுத் தள்ளுகிறது. பின்பு நகரத்திலிருந்து வெளியேறும் புரட்சிக் கப்பலை அழிக்குமாறு ஜார் உத்தரவிடுகிறான். பிரம்மாண்டமான போர்க் கப்பல்கள் பொதெம்கினைச் சுற்றி வளைத்து, சுடுவதற்காகச் சுற்றி வளைத்து, சுடுவதற்காகத் தங்கள் பீரங்கிகளை உயர்த்துகின்றன. "சகோதரர்களே சுடாதீர்கள்" என்று செய்தி அனுப்புகிறது புரட்சிக் கப்பல். சில விநாடிகள் சில தயக்கங்களுக்குப் பிறகு உயர்ந்த பீரங்கிகள் இறங்குகின்றன. முற்றுகையிட்ட போர்க் கப்பல்கள் வழிவிட ஒரு நடுநிலைமைத் துறை முகத்தை நோக்கி பயணிக்கிறது பொதெம்கின் படம் முடிகிறது.

ரசிகர்கள் மத்தியில் மகிழ்ச்சிப் பெருக்கு முடியவில்லை. "சுடாதீர்கள்" என்று பொதெம்கின் மட்டும் செய்தி அனுப்பவில்லை. பார்வையாளர்களும் உரக்கக் குரல் எழுப்புகிறார்கள். சிலர் பிரார்த்தனை செய்கிறார்கள். பலர் அழுகிறார்கள். புரட்சிக் கப்பல் தப்பிய காட்சியுடன் மகிழ்ச்சி கலந்த துயரப் பெருக்குடன் கலைகிறார்கள் ரசிகர்கள். அன்றைய ஐரோப்பிய நகரங்களின் பொதெம்கின் திரையிடப்பட்ட அரங்குகளிளெல்லாம் இதே காட்சிதான். ஏனைய படங்கள் ஈயடித்துக் கொண்டிருந்த பொது மீண்டும் மீண்டும் பொதெம்கின் திரையரங்க வாசலில் குழுமினார்கள். ஆம்! "இந்த உலகம் முழுவதும் எதற்காக் காத்திருந்ததோ அதைப் பார்க்கப் போவதைப் போன்ற உணர்ச்சிப் பெருக்குடன் மக்கள் இருந்தனர்"

அத்தகைய ஆதரவைக் கண்டு அஞ்சிய அன்றைய பாசிச ஆட்சியாளர்கள் பல சதிகளில் ஈடுபட்டு மக்கள் பார்வையைக் கண்டபடி வெட்டி ஒழுங்கற்ற முறையில் தொகுத்துக் காட்டினர்; இன்னும் பல செய்து பார்த்தாலும் மக்கள் வெள்ளம் குறையவில்லை. ஹிட்லரின் மந்திரி கோயபெல்ஸ் இதே மாதிரி ஒரு படமெடுக்கத் தனது கலைஞர்களுக்கு ஆணையிட்டான் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இந்நூற்றாண்டின் ஆரம்ப காலத்தின் பொத்தெம்கின் தனது முத்திரையை ஆழமாகவே பதித்துச் சென்றது.

டைட்டானிக்கின் வரலாறு இயற்கையினாலும், நாகரீக சமூகத்தினாலும் 1500 பேர் கொல்லப்பட்ட ஒரு விபத்து. பொதெம்கின், சுரண்டலமைப்பை மாற்றத் துடித்த ஒரு புரட்சியின் குறியீடு. விபத்து என்ற உண்மையில், ஆதிகால அம்பிகாவதி - அமராவதி காதல் கதையைக் கலந்தது இயக்குனர் காமரூனின் கற்பனை. தேல்வியுற்ற பொதெம்கின் காலம் என்ற உண்மையில், எதிர்காலப் புரட்சியின் வெற்றியைக் கலந் தது இயக்குனர் ஐசன்ஸ்டினின் கற்பனை. ரோஸ், ஜாக் என்ற அழகான காதலர்கள் தான் டைட்டானிக்கின் பாத்திரங்கள். உழைத்து ஒடுங்கிய முகங்களைக் கொண்ட வீரர்களும், கொடுமை கண்டு கோபம் கொண்ட மக்களும் தான் பொதெம்கினில் நாயகர்கள்.

நூற்றுக்கணக்கான தொழில்நுட்பக் கலைஞர்களும், செலவழிப்பதற்கு பெரும் அமெரிக்க நிறுவனங்களும் காமரூனுக்கு இருந்தார்கள். கப்பலில் உயரும் செங்கொடி மட்டும் சிவப்பில் வர எல்லா மூலப்பிரதிகளிலும் தானே வண்ணம் சேர்த்தார் ஐஸன்ஸ்டின். டைட்டானிக்கின் விபத்தை அழகுப்படுத்த சிறப்பு ஒலி, ஒளி கணிப்பொறி வரைகலை, திரையரங்க சிறப்பு உபகரணங்கள் இருந்தன. பொதெம்கினின் கரடு முரடான கலகத்தை, கருப்பு - வெள்ளையும் உரையாடல் இல்லாத இசையும் கம்பீரமாகக் கொண்டு வந்தன.

டைட்டானிக்கின் புகழ் பாட உலகெங்கும் பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் இருக்கின்றன. பொதெம்கினைத் தடை செய்வதற்கு ஐரோப்பிய ஆட்சியாளர்களும், அவதூறு செய்ய பத்திரிகைகளும் முயன்றனர். டைட்டானிக்கின் தொழில் நுட்ப பிரமிப்பிலும் காதலின் மயக்கத்திலும் கட்டுண்டு மௌனமாகக் கனவு கண்டார்கள் ரசிகர்கள். படத்தின் தேவையான வசனங்களைத் தாங்களே பேசி, புரட்சியின் எழுச்சியை அரங்கினுள் கொண்டு பொதெம்கினின் ரசிகர்கள். டைட்டானிக்கின் பிரம்மாண்டம் திரைக்குள் மட்டும் இருக்கிறது. பொதெம்கினின் பிரம்மாண்டம் திரைக்கு வெளியே வாழ்க்கையில் இருக்கிறது. டைட்டானிக்கின் சாதனை அதன் செலவு மதிப்பீட்டில், பொதெம்கினின் சாதனை நமது வாழ்க்கையை மதிப்பிட்டதில். டைட்டானிக்கினால் அடித்துச் செல்லப்பட்ட ரசிகர்கள் வாழ்க்கைக் கரையேறுவதற்கு "போர்க் கப்பல் பொதெம்கினை"ப் பார்க்க வேண்டும். ஒரு முறையாவது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல் சூடுபிடிக்கும் முஸ்லிம் அரசியல் களம்!

ஏலவே பல்வேறுபட்ட முரண்பாடுகளுக்குள் சிக்கித் திணறிக் கொண்டிருக்கும் முஸ்லிம் அரசியல் தலைமைகள் - உள்ளூராட்சித் தேர்தல் வடக்கு, கிழக்கில் நடைபெறுவதற்கான அறிவிப்பு வெளிவந்தவுடன் மேலும் முரண்பாடுகளுக்குள் அகப்படுவதற்கான நிலைமைகள் உள்ளூர்மட்டத்தில் தொடங்கி விட்டன. தங்களது கட்சிகளின், அணிகளின், தனிப்பட்ட நபர்களின் ஆதரவினை நிலைநாட்டி - வெளி உலகுக்கு தமது அதிகாரப் பலத்தை காட்டுவதற்கு உள்ளூராட்சித் தேர்தல் பலப்பரீட்சை மிக்க களமாகும் என்பதை இத்தலைமைகள் நன்கு உணர்ந்துள்ளன.

ஏலவே அரசியல் ரீதியாக முரண்பாடுகள் நிலவும் இச்சூழல், உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பால் மேலும் மோசமடையக் கூடிய வாய்ப்புகள் நிறையவே காணப்படுகின்றன. இத்தேர்தல் அறிவிப்பானது முஸ்லிம் அரசியலில் மட்டுமல்ல தமிழர் அரசியலிலும் பல்வேறுபட்ட நிலைப்பாடுகளுக்கு வழிவகுக்கலாம். குறிப்பாக இத்தேர்தலின் போது தமிழர் கூட்டமைப்பு சிதைவடைவதற்கான வாய்ப்புகளும் தோன்றி விட்டன.

உள்ளூராட்சித் தேர்தலை மையப்படுத்தி பார்க்கும் போது கட்சிகள் நீதிமன்றத்தில் இருப்பது, தேசிய இனப் பிரச்சினையில் மு.கா. வின் போக்கு, கட்சிகளுக்குள் இருக்கும் அக முரண்பாடுகள், பிரதான கட்சிகளுடனான உறவு, முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் எதிர்காலம் என்பன உள்ளூராட்சித் தேர்தலில் பிரதான இடத்தை வகிக்கப் போகின்றன.

## கட்சிகள் நீதிமன்றத்தில்

முஸ்லிம் காங்கிரஸ், தேசிய ஐக்கிய முன்னணி முரண்பாட்டால் தேசிய ஐக்கிய முன்னணி நீதிமன்றத்தில் உள்ளது. பின்னர் ஏற்பட்ட மு.கா. பிளவால் இப்போது முஸ்லிம் காங்கிரசும் நீதிமன்றத்தில் உள்ளது. இந்நிலையில் கட்சி அடிப்படையில் தேர்தலை எதிர்கொள்ள முடியாத நிலை. இதில் குறிப்பாக தேசிய ஐக்கிய முன்னணியும், மு.கா மாற்றுக் குழுவினரும் தேர்தலில் கட்சி அடிப்படையில் போட்டியிட முடியாது! சட்ட வல்லுநர்களின் கருத்தின்படி முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சின்னத்தில் (ரவூ:.ப் ஹக்கீம் தலைமை) போட்டியிட முடியும் எனக் கூறுகின்றனர். இந்த நிலைமையில் நுஆவுக்கும் மு.கா. மாற்று அணியினருக்கும் இத்தேர்தலை எந்த அடிப்படையில் எதிர்கொள்வது என்ற பிரச்சினை உள்ளது.

## தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் மு.கா.வின் போக்கு.

முஸ்லிம் காங்கிரஸ் தேசிய இனப்பிரச்சினையில் நடந்து கொள்ளும் அரசியல் போக்கானது பல்வேறுபட்ட விமர்சனங்களையும் - அதிருப்திகளையும் முஸ்லிம்கள் மத்தியில் ஏற்படுத்தி இருப்பதை நாமறிவோம். உள்ளூராட்சித் தேர்தலில் மக்களிடம் வாக்குக் கேட்டு வரும் போது கடந்த காலத்தில் மு.கா.வின் அரசியல் செயற்பாடுகளின் விளைவுகளை எதிர்கொள்ள மு.கா.வினர் தயாராக இருக்க வேண்டும். வெறும் தேர்தல் கோஷத்துடன் மட்டும் இவர்களால் மக்களிடம் வரமுடியாதுள்ளது. ஹரீஸ், அன்வர் இஸ்மாஸ், திமர் தௌபீக் போன்றவர்களுக்கு இத்தேர்தல் களத்தில் தங்களை தேசிய இனப்பிரச்சினையில் முஸ்லிம் மக்களின் அடிப்படை அரசியல் நிலைப்பாட்டில் நிற்பவர்கள் என்பதை காட்ட வேண்டியுள்ளது. மு.கா வில் தேர்தலை எதிர்கொள்வது இவர்களுக்கு ஒரு சத்திய சோதனையாகவே அமையக் கூடும்.

முஸ்லிம் காங்கிரசுக்குள் முரண்பாடுகள்
அஷ்ர.:ப் காங்கிரசுக்குள் முரண்பாடுகள்
தேசிய ஐக்கிய முன்னணிக்குள் முரண்பாடுகள்
அதிகார முரண்பாடுகளின் மொத்த வடிவமா
நமது அரசியல் களம்?

## பிரதான கட்சிகளுடன் அரசியல் உறவு

மு.கா. - ஐ.தே.கட்சியுடன் அரசியல் உறவினைக் கொண்டுள்ள ஒரு கட்சியாக இன்று மாறிவிட்டது. உள்ளூராட்சித் தேர்தலில் இவ்விரு கட்சிகளும் தனித்தே போட்டியிட முயற்சிக்கும் இந்நேரத்தில், இவ்விரு கட்சிகளுக்குமிடையேயான உள்ளூர் அரசியல் களம் மேலும் முரண்பாடுகளைக் கூர்மையடையவே வைக்கும். ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரச்சாரத்திற்கு வரும் அமைச்சர்கள், தலைவர்கள் மு.காவுக்கு எதிரான அரசியலைச் செய்வது தவிர்க்க முடியாததாகும். (ஏலவே இது தொடங்கி விட்டது.) அதே நேரம் இதனை உணர்ந்துள்ள ஹக்கீம், ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒரு தேர்தல் உடன்பாட்டிற்கு வரமுயற்சித்தாலும் கிழக்கின் மு.கா. உள்ளூர்த் தலைவர்கள் ஹக்கீமின் போக்கிற்கு ஒருபோதுமே உடன்பட மாட்டார்கள். இறுதியில் மு.கா. தனித்து நின்றுதான் உள்ளூராட்சித் தேர்தலை எதிர் கொள்ள வேண்டி ஏற்படும்.

## கட்சிக்குள் இருக்கும் அக முரண்பாடுகள்

மு.கா.விற்குள் ஹக்கீம் தலைமை தொடர்பாக ஹரீஸ் அணியினருக்கு கணிசமான விமர்சனங்களும் முரண்பாடுகளும் உள்ளன. தேசிய இனப் பிரச்சினை தொடக்கம் உள்ளூர் அரசியல் வரை. உதாரணமாக ஹரீசின் ஆதரவாளர் ஒருவரை கல்முனை நகர சபைக்கு மேயர் தேர்வுக்கு ஹக்கீம் நிறுத்துவதற்கு விரும்பவே மாட்டார். (ஏலவே பல்வேறு விடயங்கள் நடந்து விட்டன) ஹரீசுக்கு இதனை முகம் கொடுப்பது பெரும் சவாலாக உருப் பெறப்போகிறது. அதே போல்தான் பல்வேறு உள்ளூராட்சி சபைகளிலும் நடைபெற நிறைய வாய்ப்புகள் உள்ளன.

மு.கா மாற்று அணிக்குள் நூர்தீன் மசூர் தனி வழியில் செல்லத் தீர்மானித்து விட்டார். அஷ்ர.:ப் காங்கிரஸ் என்ற அமைப்புடன் தான் உடன்பாடு இல்லை என அவர் பகிரங்கமாகவே வெளிப்படுத்தி வருகிறார். நுஆவைப் பொறுத்தவரை பேரியல் - இஸ்ஸதீன் முரண்பாடுகள் உருவாகத் தொடங்கிவிட்டன. இஸ்ஸதீன் - பேரியலை எப்படியாவது ரவூ:.ப் ஹக்கீம் தலைமையுடன சேர்த்து தனது நிலையை உறுதிப்படுத்த முயற்சிப்பதை பேரியல் உணர்ந்துவிட்டார். சந்திரிகாவிலிருந்து பேரியலை இஸ்ஸதீன் பிரிப்பது இன்றைய நிலையில் சாத்தியமில்லை போல்தான் தெரிகிறது.

## பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் எதிர்காலம்

பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் தேசிய இனப்பிரச்சினையில் முஸ்லிம் அரசியல் தலைமைகள் பிளவுபட்டு நிற்பதை தவிர்க்கும் பொருட்டு அனைவரையும் ஒரு அமைப்புக்குள் கொண்டு வருவதை நோக்காகக் கொண்டது என்று சொல்லப்பட்டாலும் சேகு இஸ்ஸதீன், ஹிஸ்புல்லாஹ், ஹரீஸ் போன்றவர்களுக்கு இப்பாராளுமன்ற உறுப்பினர் ஒன்றியத்தை தேசிய இனப்பிரச்சினை விடயத்திற்கு அப்பாலும் பயன்படுத்துவதற்கு மறைமுகமான நோக்கங்கள் இருப்பதை உறுதிப்படுத்துகிறது.

நுஆவைப் பொறுத்தவரை (ஹிஸ்புல்லாஹ், இஸ்ஸதீன்) நுஆவாக கட்சி அடிப்படையில் தேர்தல் கேட்க முடியாது என்ற நிலையில், பொதுவான இவ் அமைப்பை தேர்தலுக்கு பயன்படுத்துவதற்கு நோக்கமுள்ளது. இவர்களின் அவசரமான அறிக்கைகளே இதற்கு சாட்சி. ஆனால், மு.கா. இவர்களின் திட்டத்தை முறியடிக்கும் வகையில் பாராளுமன்ற ஒன்றியத்தில் தேர்தல் கேட்பதை நிராகரித்து விட்டிருக்கிறது. அதாவுல்லா, ஹரீஸ், முகைதீன் அப்துல் காதர் போன்றோர் பாராளுமன்ற உறுப்பினர் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கவே இல்லை. ஹரீஸ் தேர்தல் என்று வரும் போது மு.காவில் கேட்பதை விட முஸ்லிம் பாராளுமன்ற ஒன்றியத்தில் கேட்டால் ஹக்கீம் மீதான விமர்சனங்களை தான் எதிர்கொள்ள வேண்டியதில்லை என்ற நிலையில் முஸ்லிம் பாராளுமன்ற ஒன்றியத்தை பலப்படுத்த முயற்சிக்கிறார்.

இந்த நிலையில் உள்ளூர் மட்டங்களில் பல சுயேட்சை அணிகளும் தேர்தலில் போட்டியிட ஆர்வம் காட்டி வருகின்றன. உள்ளூர்த் தேர்தல் களம் நமது அரசியல் அரங்கில் பெரும் அதிர்வைத்தான் ஏற்படுத்தப் போகிறது போல் உள்ளது.

## பௌசி ஹாஜியார் எந்தக் கட்சி?

மிகப் பெரும் மக்கள் ஆதரவு கொண்ட முஸ்லிம் அரசியல் தலைவர்களுள் பௌஸி ஹாஜியார் முதன்மையானவர். 2000 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் 1 இலட்சத்துக்கும் அதிகமான விருப்பு வாக்குகளை பெற்று பாராளுமன்றத்திற்குத் தெரிவானார். 2001 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போதும் பெரும் வெற்றியீட்டினார். கொழும்பு மாநகர சபை மேயராக இருந்த காலத்திலும் அமைச்சராக இருந்த காலத்திலும் மக்களுக்கு அதிக சேவையாற்றி, மக்கள் நன்மதிப்பைப் பெற்ற முஸ்லிம் தலைவர்களில் ஏ.எச்.எம்.பௌசிக்கு ஒரு தனி இடமுண்டு.

எந்தக் கட்சியில் நின்றாலும், வெல்லுவது சாத்தியம் என்ற தனிமனித செல்வாக்கு பௌஸி ஹாஜியாருக்கு நிறைய இருந்திருக்கிறது. இன்று பௌஸி ஹாஜியார் பொது முன்னணித் தலைமையுடன் கணிசமான முரண்பாட்டைக் கொண்டுள்ளார். அவரின் அங்கத்துவ உரிமை தொடர்பாக நீதிமன்றம் வரை சென்றுள்ளார்.



இந்த முரண்பாட்டின் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையுடன் நெருக்கமான உறவுகளையும் பேணி வருகிறார்.

இன்றுள்ள சூழலில் உடனடியாக பொதுத் தேர்தல் ஒன்று நடைபெற்றால், ஐக்கிய தேசியக் கட்சியில் பௌஸி ஹாஜியார் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடலாம் என்ற அரசியல் எதிர்பார்ப்பு நிலவுகிறது. இந்த நிலை காரணமாக கொழும்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் - பௌஸி ஹாஜியார் ஐக்கிய தேசியக் கட்சியில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதை தடுத்து நிறுத்தும் செயற்பாடுகளில் இறங்கி உள்ளதாகத் தெரியவருகிறது. உள்ளுக்குள் புகைந்து வரும் இவ்விடயம், அரசியல் அரங்கையும் தாண்டி விரைவில் அம்பலத்திற்கு வரப்போகிறது. தனது ஆதரவாளர்களுக்கு பௌஸி ஹாஜியார் எந்தக் கட்சியில் தேர்தலுக்கு வரப்போகிறார் என்ற கேள்வி எழத் தொடங்கி விட்டது.

ஏ.எச்.சுல்தான், மருதானை













## அடிபணிந்து விடுவோம் என்று நினைத்தாயோ?



## ஊடகவியல் பயங்கரவாதம்

இன்றைய தமிழ் ஊடகவியல் சாதனங்கள் முஸ்லிம் விரோதப் போக்கில் இமயமலையின் உச்சியைத் தொட்டுள்ளன. தமிழ் ஊடகங்களான தினகரன், வீரகேசரி, தினக்குரல், சுடர் ஒளி இலத்திரனியல் ஊடகங்களான சூரியன் எப்.எம்., சக்தி எப்.எம். போன்றவையும் தமிழ் நெட் ஹெரோல்ட் (ஆங்கில இதழ்) போன்றவைகளும் முஸ்லிம் சம்பந்தமான நச்சுத்தன்மையை வெளிக்காட்டுவதில் முன்னணியில் உள்ளன. இந்தத் தமிழ்ப் பத்திரிகைகளை அதிகளவு வாங்கிப் படிப்பதும், இலத்திரனியல் ஊடகங்களை கூடுதலாக பயன்படுத்துவதும் முஸ்லிம் மக்களேயாகும். இது மட்டுமல்லாமல் இந்த ஊடகங்களின் அனு சரணை யோடு இறக்குமதி செய்யப்படும் தென் இந்திய சினிமா களிசடைகளின் களியாட்டங்களில் கலந்து கொண்டு பணத்தை வாரி இறைப்பதும் நமது முஸ்லிம் இளைஞர்களேயாகும். இதற்கு கைங்கரியமாகத்தான் முஸ்லிம்கள் மீது இந்த ஊடகவியல் சாதனங்கள் தங்க ளுடைய காட்டுத்தர்பார்களை கட்டவிழ்த்து விடுகின்றன.

இந்த ஊடகவியல் சாதனங்களின் பயங்கரவாதத் தன்மையிலிருந்து நாம் சற்று நிதானமாக இருக்க வேண்டும். புலி பயங்கரவாதம் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விட்ட இராணுவ ரீதியிலான பயங்கரவாத்தினை விடவும் மிக மோசமானதொன்றுதான் இந்த ஊடகங்கள் விஷமத்தனமான பிரச்சாரங்களை மேற்கொள்வது. இதில் ஆச்சரியப்படக் கூடிய விடயமென்னவென்றால் நம்முடைய முஸ்லிம் அரசியல்வாதிகள் என்று செல்வோர் தங்களுடைய சாதனைகளும், வெறுமனே போலி அறிக்கைகளும் கூடவே வங்குரோத்துத்தனமான அரசியல் கருத்துக்களும் கொட்டை எழுத்துக்களில் வரவேண்டுமென்று சிந்திக்கின்ற கோமாளிகளாகவே இருக்கிறார்கள். மாறாக, தங்களுக்கென்றொரு ஊடகமொன்றை கட்டியெழுப்புவதற்கு அணுவளவும் திராணியற்றவர்களாகவே இருக்கிறார்கள்.

இதனைவிடவும் முஸ்லிம்களுக்கென்று வெளிவருகின்ற ஒரு சில வாரப் பத்திரிகைகள் கூட அமைச்சர்களையும், அரசியல்வாதிகளையும் வால்பிடித்து அல்லது அவர்களுடைய வீரகாவியங்களை வெளியிடுகின்ற முதுகெலும்பில்லாத செயல்களிலேயே இறங்கியுள்ளன. (முஸ்லிம் குரல் அல்ல)! இப்படிப்பட்ட தவிர்க்க முடியாத செயல்களினால் முஸ்லிம்களாகிய நாம் எமது சமூகத்திற்கென்று "முஸ்லிம் குரல்" போன்ற ஆரோக்கியம் வாய்ந்த ஓரிரு பத்திரிகைகளை கட்டியெழுப்ப வேண்டும். இப்படிப்பட்ட நடவடிக்கைகள் மூலம்தான் விஷமத்தனமான புலி இன வாதத்தை மட்டுமல்ல, கோமாளித்தனமான முஸ்லிம் அரசியலையும் முடிவிற்கு கொண்டு வரமுடியும்.

நாம் வெறுமனே பேச்சுக்களில் போராளிகளாகவும், அறிக்கை மன்னர்களாகவும் பதவிகளையும் பண முடிப்புக்களையும் எதிர்பார்த்தவர்களாகவும் தொடர்ந்து இருக்க முடியாது. சமூகத்திற்கே பிரயோசனமற்ற வெறும் ஆய் வாளர்களாகவும், சமூகத்திற்கே சவாலான கவிஞர்க ளாகவும், தேசியப் பட்டியலை இலக்கு வைத்த போராளிகளாகவும் இருந்து என்ன பயன்? எப்போது இந்த சமூகம் விழிப்படையும்?

*எம்.எச்.எம்.நௌபல், ஓட்டமாவடி.*

## மீனவர் குடியேற்றத் திட்டத்தின் பேரில் பொத்துவிலில் சிங்களக் குடியேற்றம்

சுகாதார அமைச்சர் பி. தயாரத்ன கடந்த மூன்று மாதங்களாக பொத்துவில் முஸ்லிம் மீனவர்களின் பிரதேசங்களை "சூழல் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ்" அபகரித்து சிங்கள முதலாளிகள் உல்லாச ஹோட்டல் கட்டுவதற்கும் தென்னிலங்கை சிங்கள மக்களைக் கொண்டு வந்து குடியேற்றுவதற்கும் எடுத்த முயற்சியை பாராளுமன்ற உறுப்பினர் எம்.பி.ஏ. அஸீஸ் தொடர்ந்தும் எதிர்த்து வந்ததன் காரணமாக அம்முயற்சி கைவிடப்பட்டு, இன்று அது வேறொரு வடிவத்தில் அரங்கேற்றப்படுகிறது.

கடற்றொழில் மீன்பிடி அமைச்சர் மஹிந்த விஜேசேகரவின் நேரடிப் பணிப்பின் பேரில் 110 சிங்கள மீனவர் குடும்பங்களை மீனவர் குடியேற்றத் திட்டம் என்ற பெயரில் பொத்துவிலில் குடியேற்றுவதற்கான முயற்சிகள் தொடங்கிவிட்டன. இக்குடியேற்றம் தொடர்பான பூர்வாங்க அனைத்து வேலைகளும் அமைச்சரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இக்குடியேற்றம் தொடர்பான அனைத்து பணிகளிலும் இருந்து அப்பிரதேச கிராமசேவகர், பிரதேச செயலாளர், மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தலையிட முடியாதவாறு அனைத்தும் கடற்றொழில் மீன்பிடி அமைச்சரின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. பொத்துவிலில் ஒரு மீன்பிடி இலாகா அதிகாரி (FI) இருக்குந்தறுவாயில், இம் மீனவர் குடும்பங்களின் நலன்பேண பாணமை சிங்களப் பிரதேச மீன்பிடி இலாகா அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

மாவட்டத்திற்கு வெளியில் உள்ள ஒரு சிங்கள அமைச்சர் இக்குடியேற்ற முயற்சியை மேற்கொண்டால், அம்பாறை மாவட்ட முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்க மாட்டார்கள் என்ற அடிப்படையில் தயாரத்னவின் பணி - மஹிந்த விஜேசேகரவால் இப்போது நடைமுறைக்கு வரவுள்ளது. ஏலவே அம்பாறை மாவட்டத்தின் பெரும்பகுதி சிங்கள அரசாங்கங்களின் குடியேற்றத் திட்டத்தினால் பறிக்கப்பட்டுள்ள நிலையில், மீண்டும் சிங்களக் குடியேற்றங்களுக்கான முயற்சி தொடர்வதை அனைவரும் சேர்ந்து தடுத்து நிறுத்தியாகவே வேண்டும்!

ஏ.எச். ஆதம் கண்டு
பொத்துவில்

சுவடு - 08
முஸ்லிம் குரல்
Muslim Kural
11 ஏப்ரல் 2003 08 - ஸபர் - 1424

Chief Editor, 143, Muhandhiram Road, Colombo - 03.
Tel: 0777-389127, Fax: 01-667963, E-mail: mm-s@eol.lk

## முஸ்லிம்களுக்கு சமத்துவமான அரசியல் தீர்வு

"குருடன் யானை பார்த்த" கதைபோல்தான், நமது மக்களுக்கும் நமது அரசியல் தலைமைகள் நாளுக்கொரு கதை சொல்லிக் கொண்டிருக்கின்றன. பேச்சுவார்த்தை மேசையில் தனித்துவத் தரப்பு என நமது மக்கள் வலியுறுத்தும் அரசியல் சமத்துவத்தை - பேச்சுவார்த்தை மேசையில் தனித்தரப்பாக போய் அமர்ந்து விட்டால் எல்லாம் சரியாகி விடும் என தப்புக் கணக்குப் போட்டு, எப்படியாவது தனித்தரப்பாக கலந்து கொண்டே ஆகவேண்டுமென இருப்புக் கொள்ளாமல் ஓடித் திரிகின்றன நமது அரசியல் தலைமைகள்.

இதேநேரம் முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளையும் வாழ்வையும் தீர்மானிக்கும் அரசியல் அதிகாரம் பிரபாகரனிடம்தான் உள்ளது என முஸ்லிம் காங்கிரஸின் புதிய தவிசாளர் பசீர் சேகுதாவூத் சொல்லிக் கொண்டிருக்கிறார். ஏலவே விடுதலைப் புலிகளிடம் வடக்கு, கிழக்கு மாகாணத்தின் இடைக்கால நிர்வாகத்தை கையளிக்க வேண்டுமெனச், சொன்ன ஒரேயொரு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினரும் இவர் தான்!

இவரின் இந்த அரசியல் வெளிப்பாடானது: முஸ்லிம்களின் அரசியல் உரிமையையும் தனித்துவத்தையும் பிரபாகரனிடம் ஏகபோகமாக்கி - தனது தனிப்பட்ட நலன்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான கூற்றாக கொள்ளலாமா அல்லது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உத்தி யோகபூர்வ நிலைப்பாடும் இதுதானா என்பதை உடனடியாக முஸ்லிம் காங்கிரஸ் தலைமை நமது மக்கள் மத்தியில் வெளிப்படுத்த வேண்டும்!

முஸ்லிம்களின் அரசியல் உரிமைகளை பலிகளுக்கு தட்டில் வைத்து கோழைத்தனமாக தாரைவார்த்துக் கொடுப்பதற்கு கையாளாக பணியாற்றும் பசீர் சேகுதாவூத் பற்றிய தனிப்பட்ட அக்கறை எதுவும் எங்களுக்குக் கிடையாது! ஆனால் முஸ்லிம் காங்கிரஸின் முக்கிய பதவியில் இருந்து கொண்டு முஸ்லிம்களின் அரசியல் உணர்வுகளுக்கு எதிரான கருத்துக்களை தொடர்ந்தும் வலியுறுத்தி வரும் போக்கை - ஆதரித்துப் பலப்படுத்தும் பணியை ரஊப் ஹக்கீம் மேற்கொண்டு வருவது ஹக்கீம் மீதான சந்தேகத்தை நமது மக்கள் மத்தியில் மேலும் அதிகமாக்குகிறது!

புலிகளிடம் முஸ்லிம்களை அடகு வைப்பதற்கு பணியாற்றுவதைவிட; முஸ்லிம்களும் வடக்கு, கிழக்கில் சமத்துவமாக தமிழ் மக்களுடன் வாழ்வதற்கான நியாயமான அரசியல் தீர்வை கண்டடைவதற்கும் அதனை சாத்தியப்படுத்துவதற்கும் உழைப்பதே நமது மக்களுக்குச் செய்யும் மிகப் பெரும் பங்களிப்பு என்பதை மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்துகிறோம்! நமது மக்கள் இவர்களுக்கு வழங்கிய அரசியல் ஆணையும் இதன் பேரில் தான் என்பதையும் சம்மந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

*தோழமையுடன்,*
*பிரதம ஆசிரியர்.*

இப்பத்திரிகை 143, முகாந்திரம் றோட், கொழும்பு 3 இல் அமைந்துள்ள முஸ்லிம் குரல் பப்ளிகேசன் நிறுவனத்தினால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org